வாரப் பதிப்பு விலை சதம் 25

இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 வைகாசித் திங்கள் 10-ம் நாள் (23—5—1965) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 12 | இதழ் 52

## தமிழ் பிரதேசங்களில்

# வேலையில்லாப் பிரச்சினை

## பொது ஸ்தாபனங்கள் அனுப்பும் விபரங்கள்

## உள்ளூராட்சி அமைச்சு விரிவான திட்டம் தயாரிக்கும்

**தமிழ்ப் பிரதேசங்களில் வேலையின்மை பூதாகாரமாக உருவெடுத்து வருவதால், இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உள்ளூராட்சி அமைச்சு சிரத்தை கொண்டுள்ளது. இதற்கான புள்ளி விவரங்கள் இப்பொழுது திரட்டப்படுகின்றன. பொது ஸ்தாபனங்கள் வேலையில்லாதோரின் விபரங்களைச் சேகரித்து உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பி வைக்கின்றன. புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டதும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.**

தமிழ் பேசும் மக்களிடையே வேலையின்மையைப் போக்க நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சர் திருச்செல்வம் வேலையில்லாதோர் பற்றிய புள்ளி விபரங்களைக் கோரியிருந்தார். அதற்கேற்ப சில பொது ஸ்தாபனங்கள் ஆங்காங்கு படித்து வேலையின்றித் தவிக்கும் வாலிபர்கள் பற்றிய முழுவிபரங்களடங்கிய பட்டியல்களை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளன. வட, கிழக்கு மாகாணங்களில் இன்னும் அநேக பொது ஸ்தாபனங்கள் வேலையின்றிக் கஷ்டப்படுவோர்கள் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டி வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

இப்புள்ளி விபரங்கள் அனைத்தும் கிடைத்ததும் அமைச்சர் தமிழ்ப் பிரதேசங்களில் வேலையின்மையைப் போக்குவதற்கான ஒரு விரிவான திட்டத்தைத் தயார் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய அரசாங்கம் நாட்டில் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தொழில் அமைச்சர் ஜனுப்முகமது அதற்கான சில திட்டங்களைத் திட்டி தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அறியப்படுகிறது.

வேலையின்மை ஒரு தேசியப் பிரச்சினையாதலின், தேசிய அடிப்படையில் அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கிணங்கவே உள்ளூராட்சி அமைச்சு தமிழ்ப் பிரதேசங்களில் வேலையின்மையைப் போக்குவதற்காகத் தயாரிக்கும் திட்டமும் அமைந்திருக்கும் என்று கூறப்படுகிறது.

## நோர்வூட்டில் புதிய திருமண பதிவகம் திறக்கவும்

### அமைச்சருக்கு சா. ஜே. வே. கடிதம்

**அட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த நோர்வூட் பகுதியில் புதிதாக ஒரு திருமணப் பதிவகத்தை திறக்கும் வண்ணம் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் உள்நாட்டு அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

நோர்வூட், மஸ்கெலியா, சாமிமலை போன்ற இடங்களில்உள்ளவர்கள் 18 மைல்களுக்கு அப்பால் இருக்கும் அட்டன் திருமணப் பதிவுக் காரியாலயத்திற்கே செல்லவேண்டியிருப்பதாகவும், இது அப்பகுதி மக்களுக்கு பெரிய கஷ்டத்தைக்கொடுப்பதாகவும் தெரிகிறது. இவர்களின் கஷ்டத்தை நீக்கும் முகமாக நோர்வூட்டில் புதிதாக ஒரு திருமணப் பதிவகத்தைத் திறக்கும் வண்ணம் திரு. செல்வநாயகம் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

அட்டன், தலவாக்கொல்லைப் பகுதியில் உள்ள திருமணப்பதிவகம் வசதிகுறைந்ததாக இருப்பதாகவும், பொதுமக்கள் இடவசதியின்றிக்கஷ்டப்படுவதாலும் இக்காரியாலயங்களை வசதியான ஒரு கட்டிடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கும் வண்ணம் திரு. செல்வநாயகம் உள்நாட்டமைச்சரைக் கேட்டுள்ளார்.

அட்டன், தலவாக்கொல்லை திருமணப் பதிவகங்களைப் பயன்படுத்துபவர்களில் பெரும்பாலோர் தமிழர்களாக இருந்தும் தமிழ் தெரிந்தவூழியர்கள் எவரும் இங்கு கடமையாற்றவில்லையெனறும் சுட்டிக்காட்டி, உடன் தமிழ் தெரிந்த ஊழியர்களை நியமிக்கும் படியும் உள்நாட்டமைச்சரை திரு. செல்வநாயகம் கேட்டுள்ளார்.

இப்பிரச்சினைகளில் நடவடிக்கைஎடுக்கும் வண்ணம் இலங்கைத் தொழிலாளர் கழகம் தமிழரசுத் தந்தையை கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வருமான வரிப் படிவங்களை தமிழில் நிரப்புக

### பண்டிதர் இரத்தினம் வேண்டுகோள்

**வருமான வரிப்படிவங்களைத் தமிழில் நிரப்பியனுப்பும் வண்ணம் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் தமிழ் பேசும் வரியிறுப்பாளர்களைக் கேட்டுள்ளார்.**

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அனுப்பும் வருமான வரிப்படிவங்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமேயிருக்கின்றன. இப்படிவங்களை ஏற்க மறுத்து தமிழ் படிவங்களை அனுப்பும் வண்ணம் மேற்படி திணைக்களத்தாரை வற்புறுத்தினால்மும்மொழிப் படிவங்களை அனுப்பி வைக்கிறார்கள்.

திரு. இரத்தினம் அவர்கள் தமக்கு அனுப்பப்பட்ட இருமொழிப் படிவத்தைத் திருப்பியனுப்பி உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளருக்கு தமிழில் ஒரு கடிதமும் எழுதியிருந்தார். அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:

'கடந்த பல ஆண்டுகளாக வருமான வரிப்படிவங்களை தமிழிலேயே நிரப்பியனுப்பி வருகிறேன். ஒவ்வோர் ஆண்டும் தமிழ்ப்படிவங்கள் கேட்கும் அவல நிலையை நீங்கள் உண்டாக்குவது வருந்தத்தக்கது.

'சென்ற ஆண்டுமே மாதம் உங்களுக்கு எழுதிய கடிதத்திலும் இந்நிலையை மாற்றுமாறுவற்புறுத்தியிருந்தேன். ஆனால் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. தமிழில் வருமான வரிப்படிவங்கள் இல்லையா?

'தமிழில் நிரப்பி அனுப்புபவர்களுக்கு தமிழ்ப்படிவங்கள் அனுப்பாமல், அவர்களுக்கு இடர்ப்பாட்டை உண்டாக்குவதற்கு யார் பொறுப்பு? தமிழில் வருமான வரிப்படிவங்களை அச்சிட தடையுண்டா? இதற்கு மிகவிரைவில் பதில் தருவீர்களானால், தமிழினத்தின் சார்பிலும், தமிழரசுக் கட்சியின் சார்பிலும் இவ்விடயம் பற்றி நிதி அமைச்சரிடம் பேசுவேன். தேவைப்பட்டால் அடுத்து நிகழவிருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தில் இந்நிலையை எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுப்பேன்.'

இக்கடிதத்திற்கு தமிழிலேயே திணைக்கள ஆணையாளர் பதில் எழுதியுள்ளார். அப்பதிலில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

'மும்மொழிபத்திரங்களுக்குப் பதிலாக இருமொழிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டமைக்காக கவலைப்படுகிறேன். வருங்காலத்தில

(9-ம் பக்கம் பார்க்க)

## மத்திய வங்கி தமிழ் ஊழியர் தனிச் சங்கம் அமைத்தனர்

**இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் தேசிய தொழிற் சங்கத்திலிருந்து பிரிந்து தனித் தொழிற் சங்கம் ஒன்றை அமைத்துள்ளார்கள். தேசிய தொழிற்சங்கம் தமிழ் ஊழியரின் நலன்களைக் காக்கத் தவறியதுடன் வகுப்புவாத ரீதியிற் செயற்பட்டு தமிழ் ஊழியரை மாற்றுத் தாய் மனப்பான்மையுடன் நடத்த முற்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே.**

இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றும் பெரும்பான்மையான தமிழ் ஊழியர்கள் மொழி வழித் தொழிற் சங்கக் கோட்பாட்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




"கரும்பளவு வண்ண உடல்! அழகு மாவின்
கனியளவு வட்டமுகம்! மலரப் பார்க்கும்
அரும்பளவு கொண்ட விழி! காதலுக்கோர்
அணையளவு தேனிதழ்கள்! காற்றிலாடும்
துரும்பளவு சின்ன இடை! மலைக்குன்றத்தின்
தொடரளவு மார்புடையாள்! தோலுக்குள்ளே
இரும்பளவு மனம் வைத்தான் இறைவன்! உன்னை
இசைப்பதற்கும் வைத்தானோ? கொடிய பாவி!"

— காசி. ஆனந்தன் பி. ஏ.

## 18. 'புத்தம் சரணம் கச்சாமி!'

சங்கீத வெறி பிடித்த ஒருவனின் செவிகளில் தேன் நிகர்த்த சங்கீத வெள்ளம் பாய்ந்ததும் ஏற்படும் மனோநிலையும்; கலைச்செறிவு மிக்க ஓவியங்களில் நாட்டமுள்ள ஒருவனின் கண்களில் நல்லதொரு சித்திரம் தட்டுப்பட்டவுடன் ஏற்படுகின்ற மனோ நிலையும்; நகைச்சுவை உணர்வில் திறங்கி நிற்கும் ஒருவனின் கருத்தில் நல்லதொரு நகைச்சுவை விருந்து பட்டவுடன் ஏற்படுகின்ற மனோ நிலையும்; ஆஸ்திக உணர்வு மிக்கவொருவனின் உள்ளத்தில் நல்லதொரு கடவுள் தத்துவம் பிறந்தவுடன் ஏற்படுகின்ற மனோ நிலையும்; நாஸ்திகத்தில் நம்பிக்கையுள்ள ஒருவனின் கருத்தில் கடவுள் தத்துவத்தைத் தகர்க்க வல்ல ஒரு பகுத்தறிவுக் கருத்துத் தட்டுப்பட்டதும் ஏற்படுகின்ற ஒரு மனோ நிலையும்; கவிதையில் தோய்ந்து நிற்கும் ஒருவனின் நெஞ்சத்தில் தித்திக்கும் கவிதையொன்று பாய்ந்தவுடன் ஏற்படுகின்ற மனோநிலையும்; ஒரு குறிப்பிட்ட அரசியல் கொள்கையில் நாட்டமுள்ள ஒருவனுக்கு, அந்தக் கட்சிக்கு வலிமையூட்ட வல்ல கருத்தொன்றோ? சம்பவம் ஒன்றோ? கிடைத்து விட்டவுடன் ஏற்படுகின்ற மனோ நிலையும்; நடிப்புத்துறையில் சம்பந்தமுள்ள ஒருவனுக்கு, தான் சம்பந்தப்பட்ட காட்சி சிறப்புற நடிக்கப்பட்டு முடிந்தவுடன் ஏற்படுகின்ற மனோ நிலையும்; கதாசிரியன் ஒருவனுக்குத் தான் புனைந்த கதையக் கருத்தும், சொற்களும் வாய்ப்பாக விழுந்ததும் ஏற்படுகின்ற மனோநிலையும் எப்படி எப்படி இருக்குமோ? அத்தகைய மனோநிலையில் அப்பொழுது கணேசன் இருந்தான்!

உடல் மலரில் தூய வெண்ணிற ஆடையணிந்து, தூய வெண்ணிறக் கமலங்களைக் கைமலரில் அள்ளிக்கொண்டு, கண்மலரில் பக்தித் தேனையும், முகமலரில் சாந்த மகரந்தங்களையும் நிறைத்துக்கொண்டு தாமரகுமாரி நின்ற திருக்காட்சிதான் கணேசனுடைய மனோநிலையை அப்படியான வளம்மிக்க நிதிக்கிடங்காக ஆக்கியிருந்தது.

ஒருவனை ஒருத்தி கொள்ளை கொண்டு விட்டாளென்றால், அதன்பிறகு அந்த ஒருத்தி எந்தக்கோலத்தில் நின்றாலும், எந்தக்கோணத்தில நின்றாலும் வற்றாத பேரெழிலோடுதான் அந்த ஒருவனுடைய கண்ணுக்கு அவள் தோற்றுவாள். அவளிடத்திலுள்ள குறைபாடுகள்கூட, அவளுடைய அழகுக்கு அணி செய்வதாகவே அவனுக்குப் படும்! அவள் சினப்பதும் அழகு; சிரிப்பதும் அழகு; சிணுங்குவதும் அழகு; பிணங்குவதும் அழகு; தலையைச் சீவிக்கொண்டாலும் அழகு; சீவாது விட்டாலும் அழகு; முகத்தைச் சோணிக்கொண்டாலும் அழகு; நாணிக்கொண்டாலும் அழகு! ஆக, அந்த அவள் தன்னால் கொள்ளைகொள்ளப்பட்ட ஒருவன் முன்னால் தன்னுடைய ஒப்பனையைப்பற்றி அக்கறை செலுத்தவேண்டிய அவசியம் இருப்பதில்லை!

ஏறத்தாழ, தாமரகுமாரியின் நிலையும் கணேசன் முன்னால் இத்தகையதாகவே இருந்தது. அவளுடைய எந்தக் கோலமும் கணேசனுடைய உள்ளத்தை நிறைத்தது. அவள் எப்படி வந்தாலும், எப்படி நின்றாலும் அவனுக்கு விருந்துதான். அவள் தொட்ட பொருளை அவன் தொடுவதில் ஒரு சிலிர்ப்பு. அவள் பார்த்த பொருளை அவனும் பார்ப்பதில் ஒரு களிப்பு. அவள் நடிக்கும் இடத்தில் அவனும் நடப்பதில் ஓர் இதம். அவள் சுவைத்த காற்றை அவனும் சுவைப்பதில் ஓர் இன்பம்; அவள் குளித்த இடத்தில் அவனும் குளிப்பதில் ஒரு நிறைவு. கால ஓட்டத்தில் அந்தக் 'கட்குட'த்தால் அவன் கவரப்பட்டு, அந்த மதுப்போதையில் மனத்தில் ஆரோக்கியத்தையும், உடலில் ரோகத்தையும் வளர்த்து அவன் வாழ்ந்த வாழ்வு சுவையும், சோகமும் மிக்க ஒன்று:

பின்னால், கணேசன் தாமரகுமாரியில் தோய்ந்து; அவள் அழகுச் சுனையில் நனைந்து; அவளில் கலந்துவிடத் துடித்த துடிப்பை நுணுக்கமாக அவதானித்த அவனுடைய கவிஞ நண்பன் ஒரு 'பச்சைக் கவிதை'யைப்பாடி கணேசனுடைய எண்ணப் பயிருக்கு எரு ஊட்டினான். பாவம் அவனால் செய்ய முடிந்த உபகாரம் அவ்வளவுதான்! அந்தக் கவிதையைப் படித்ததும் கணேசனுக்கு ஒரு பெரிய கவலை பிடித்துக் கொண்டது. தனக்குமட்டும் சிங்களத்தில் புலமை இல்லாது போய்விட்டதே. அப்படி இருந்திருந்தால், இந்தக் கவிதையை அதன் 'உயிர்' கெடாமல் அப்படியேமொழி பெயர்த்து தாமரகுமாரியிடம் அதைக்கொடுத்து அவளுடைய சிவந்த முகத்தை மேலும் சிவக்கப் பண்ணி, அப்பொழுதுதோன்றும் அவள் புதுக்கோலத்தில் மனத்தினில் சற்று ஆரோக்கியத்தை ஏற்படுத்தலாமே என்று கவலைப்பட்டான். அவனை அப்படிக் கவலைக்குள்ளாக்கிய அந்தக் கவிதை இதுதான்:

'சிராக வாராத சிகைச்
சுருளில்
ஈராக நானிருக்க
இசைவு தாராய்!
கூரான வேலான
கொல் விழியில்
குதித்தாடும்
கருமணியாய்
குந்த வைப்பாய்!'

'பச்சை நரம்போடும்
பால்வண்ணச்
சொக்கினிலே
இச்சை கொளும்
இளம்பருவாய் எனை-
இருக்க வைத்திடுவாய்!
பிச்செடுக்கத்
துணிவூட்டும் பேரிச்சை
இதழோரத்தில்
மச்சம்போல்குந்துதற்கு
வகைசெய்வாய் வாழ்
வளிப்பாய்!'

'சைக்கிளுக்குப்
பொருத்துகின்ற
'டைனமோ' போல்
தரமான வார்ப்போடு
துலங்கும் மார்பில்
கைக்கடக்கத் தோடுநன்கு
காத்து நிற்கும் 'கச்ச'
மாக
காலமெல்லாம்
நானிருக்க கருணை
செய்வாய்!'

''வச்சி'நிகர்வெறியூட்டும்
எச்சில் தன்னை
வாய் வைத்து
உறிஞ்சுதற்கு வகையும்
செய்வாய்
இச்சை கொள்ளும்
உன்னுடம்பில் எங்கும்
எங்கும்
என்னவெல்லாம்
செய்வதற்கும்
இணக்கம்சொல்வாய்!'

தாமரகுமாரி தன் தாமரைக் கரங்களில் தாமரை மலர்களை மிகமென்மையாக எடுத்துக் கொண்டு புனித பௌத்த விஹாரத்துள் அடியெடுத்து வைத்தாள். அன்று வைசாக பௌர்ணமி தினமானதால், அந்த பௌத்த விஹாரத்துள் சன நெரிசல் சற்று அதிகமாகவே இருந்தது. அந்த நெரிசலைத் தனக்கு நன்கு சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு தாமரகுமாரியின் இனிய மேனியில் தன் தேகத்தை அழுத்தியபடியே விஹாரத்துள் நுழைந்தான் கணேசன். [illegible] புத்தபகவானின் திருவுருவம் கருணையைப் பொழிந்த வண்ணம் காட்சியளித்துக் கொண்டிருந்தது. காமனை வென்ற அந்தக் கர்மவீரனின் திருத்தோற்றத்தின் முன்னால் வந்து நின்ற கணேசன் அந்த அருட்பிழம்பின் தோற்றத்தை ஒரு கணம் ஏறெடுத்து நோக்கினான்.

பாதி விரிந்தும், பாதி மூடியுமிருந்த அந்தக் கண்களில் ஒளிர்ந்த ஞானச் சுடரும், வாள்சாற்றியது போல் நீண்டிருந்த அந்த மூக்கில் தொனித்த கம்பீரமும், அகன்று விரிந்த நெற்றியில் பொலிந்த முழுமையும், இதழ்க்கடையில் 'குறுகுறு'த்த குறுஞ்சிரிப்பும், பரந்த மார்பில் தெரிந்த உறுதியும், அந்தப் பாத கமலங்களில் மின்னிச் சுடரிட்ட சாந்தியும் கணேசனை அப்படியே ஈர்த்தன. அந்த ஈர்ப்பும், மன ஒருமைப்பாடும் ஒரே ஒரு கணம்தான். அந்த ஒரு கணப்பொழுதில் அவனுடைய மனம் 'வாய்' திறந்து எதிரில் சாந்த சொரூபியாய் எழுந்தருளியிருந்த பகவருடன் என்னென்னவெல்லாமோ 'கதைக்க'த் தொடங்கி விட்டது. 'புத்த பகவானே! மனிதனின் பலவீனங்களை வென்ற பவித்திர புருஷன் நீ! உன் முகத்தில் ஒளியிடும் தேஜஸ் உன்னிடத்தில் உறைந்துள்ள ஆண்மையையும், வைராக்கியத்தையும் காட்டுகின்றது. நீ மகான்! அதன் காரணமாக புறத்தாக்கங்கள் எதுவும் உன்னை நிலைபெயர வைக்க முடியாது தோற்றுப் போயின. என்னுடைய நிலை அப்படியல்ல; நான் மனிதன் மிகச் சாதாரணமான மனிதன்! வெளித் தாக்கங்களால் நான் சதா வளைந்து கொண்டே இருக்கின்றேன். பேராசை அலைகள் சதா என் உள்ளத்தில் அடித்துக் கொண்டே இருக்கின்றன. சுய நலச் குருவளி என் மனப் பூங்காவுக்குள் சுழன்றடித்து பூங்காவின் அழகையே துவம்சம் செய்கின்றது. ஆனால் ஓர் அதிசயம்! பலவகையான இந்த் தாக்கங்களுக்கு மத்தியில் ஒரு தெளிவும், உறுதியும் இடையிடையே என்னுள் எழத்தான் செய்கின்றன. இந்தத் தெளிவை—உறுதியை—ஆண்மையை நான் தனியனாக இருந்து—வெறும் சூனியத்திலிருந்து பெறவில்லை! இன்னொன்றின் துணைக் கொண்டுதான் இந்தச் சிறப்பு அம்சத்துக்கு நான் அருகதையாகின்றேன்...' நீண்டு கொண்டே சென்ற கணேசனின் மன 'ஓல'த்தை தாமரகுமாரியின் விம்மல் ஒலியும், 'புத்தம் சரணம் கச்சாமி!' என்ற புனித ஒலியும் சேர்ந்து தடுத்து நிறுத்தின.




## கழுதைச் சவாரி

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் ஈசனட்ச் என்னுமிடத்தில் ஒரு குன்றின் மீது 900 ஆண்டுகள் பழமையான அரண்மனையொன்று இருக்கிறது. ஈஸ்டர் விடுமுறைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இந்த அரண்மனைக்கு விஜயம் செய்வார்கள். விரும்பினால் அவர்கள் கழுதை மீது ஏறி இந்த அரண்மனைக்குச் செல்லலாம். குன்றின் அடிவாரத்தில் ஒரு கழுதைலாயமே உண்டு.

## குடும்பம்

"பாண்டியூரான்"

பட்டாள வீரன் இல்லை, அவன்பெரிய
முண்டாசுக் கட்டு முடிந்த மகராசன்!
முன் முருக்கம் பூவிற் றெடுத்த மலர்மாலை
போட்டதுபோல் தொங்கும் புதுப்பாணித் தாடியது

பெண்டிலவள் பையனுக்கு; பெயர்கூப் 'பொன்னம்மா'
நல்ல சிவப்பி; நகை போடத் தேவையில்லை!
வாழையடியில் வளரும்சிறு குட்டி
போல இருப்பாள் பொடிச்சி; வெகுபொருத்தம்
தேரசைந்து கோயிற் றெருவீதி செல்வதுபோற்
சோடி யுலவிச் சுலாவிவரும்; என்றேசை
காதில் விழுந்த கணத்தில் அருகிருப்பர்.

அண்டி வருவர்; அமுதுண்ணும் வேளையிலே
சண்டையிட்டுப் பங்கு சரியாய்ப் பெறுகின்றார்.
என்றாலும்; சேர்ந்தொருக் கோமல் உண்பதில்லை!
பார்த்திருக்க உண்ணும் பழக்கமில்லைப் போலும்; வீண்
ஆச்சரியம் இல்லை-'ஆறறிவு' நம்மவர்க்கு!

பிள்ளை குட்டி கேட்டுப் 'பேயாட்டி' சொற்படிக்கு
நேர்ந்துவிட்ட சேவலதாம்!. நினைக்கப்...பொறுக்குதில்லை
சோடாகப் பேடொன்றும் சோடித்து விட்டுவிட்டேன்.
ஊர்காக்கும் காளி ஒப்பெடுப்பாளாம்...? பலிக்கு
யார் கொடுப்பார் கொய்ய? அவள்கூடத் தாய்தானே!
இல்லை யென்றால் என்னை எடுக்கட்டும்! செல்கின்றேன்.
கொல்லைப் புறத்தில் குடும்பம் நடத்துகிற
செல்வக் குடும்பம்! சேவலொடு பேடாக;
'ஆராரோ' இல்லா அவலம் அகற்றுகிற;
பிள்ளையிலா எங்கள் வீட்டுப் பெருங்குடும்பம்!
கோழிகள், அ... இல்லை: 'குழந்தைக்' குடும்பமது!
வாழியரோ இன்பம் வளர்ந்து!

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50
நிர்வாகி
'சுதந்திரன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவாளர் குயுக்தி
C/o சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1185
கொழும்பு-12.

இம் முகவரியைக் குறித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ந. சந்திரமோகன்,
யாழ்ப்பாணம்.

கே: திருவாளர் பொன்னம்பலத்துக்கு 'வட்டமேசை' யில் ஏன் இவ்வளவு ஆசை?

ப: இந்தக் காங்கிரசுக்கு ஐ. தே. கட்சியை அன்று முதல் இன்றுவரை சுற்றிக்கொண்டிருப்பதைத் தவிர வேறு நிலையான கொள்கை எதுவும் கிடையாது. வட்டமேசையை விரும்பக் காரணம் அதுதான். வட்ட மேசையைச் சுற்ற ஆரம்பித்தால் அதற்கு முடிவு ஏது?

ஃ

சிவ. சண்முகநாதன்,
கோணவலை.

கே: இம்முறையும் சிறிமாவின் அரசாங்கம் வெற்றிபெற்றிருந்தால் அவர் முதலில் எதை நிறைவேற்றியிருப்பார்?

ப: ஏரிக்கரைப் பத்திரிகையைத் தேசிய மயமாக்கும் மசோதாவைச் சட்டமாக்கியிருப்பார்.

ஃ

சே. கே. மொகிடீன், குச்சவெளி.

கே: இன்னும் மூன்று மாதங்களின் பின் மீண்டும் ஒரு தேர்தல் நடக்குமென்கிறார்களே. உண்மையா?

ப: விசமப் பிரசாரங்களில் மயங்காதீர். தேசிய அரசாங்கம் தன் ஆட்சிக்காலத்தைப் பூர்த்தி செய்யும்.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.

கே: திரு. ஜி. ஜி. கூட்டத்தாரின் போக்கு தறபோது எந்தக் கட்டத்தை அடைந்துள்ளது.

ப: தமிழரசாரின் இலட்சிய பூர்த்திக்கு இடைஞ்சல் செய்யும் கட்டத்துக்கு வந்துகொண்டிருப்பதாகவே தெரிகிறது.

கே: இந்திய-பாகிஸ்தான் பிரச்சினையில் அமெரிக்கா மௌனம் சாதிப்பது எதற்காக?

ப: இரு நாடுகளுக்கும் அமெரிக்கா ஆயுத உதவி அளிப்பதால் மௌனம் சாதிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

ஃ

'குமாரச் செல்வன்',
ஏழாலை மேற்கு.

கே: தேசிய அரசாங்கத்திலும் பழைய தவறுகள் நடைபெற்றால்?

ப: அடுத்த தேர்தலில் அதற்கேற்ற தண்டனை கிடைக்கும்.

ஃ

எஸ் ஆர். பொன்முடியன்,
திருகோணமலை.

கே: இலங்கையில் ஒரு தமிழன் இருக்கும் வரை எனக்கு நிம்மதியான தூக்கம் இல்லை என்று கூறிய கே. எம். பி. ராஜரத்தினு இப்போது என்ன கூறுகின்றார்?

ப: இப்பொழுது நல்ல பிள்ளையாகி இருக்கிறாராம். விரைவில் அவர் ஒரு கூட்டுத்தாபனத்தின் தலைவராவார் என்று செய்தி அடிபடுகிறது.

கே: நீங்கள் திடீரென்று இலங்கையின் சர்வாதிகாரியானல் முதலில் எந்தச் சட்டத்தைக் கொண்டுவருவீர்கள்?

ப: நயிலோன் சாரிஇறக்குமதி செய்வதைத் தடுக்கும் சட்டத்தை!

ஃ

எஸ். நாராயணசாமி,
யாழ்ப்பாணம்.

கே: ஐக்கிய தேசியக் கட்சி ஏழைகளுக்குப் பாடுபடுமா? பணக்காரர்களுக்குப் பாடுபடுமா?

ப: பணக்காரர்களுக்குப் பாடுபட்ட கட்சி என்ற கெட்ட பெயர் உண்டு. அந்தப் பெயரை நீக்கிக்கொள்வதற்காக இப்பொழுது பாடுபடுகிறது.

ஃ

பொ. இராமநாதன், சரவணை.

கே: தமிழ் காங்கிரஸ் ஏன் மாவட்ட சபைகள் நிறுவுவதை எதிர்க்கின்றது?

ப: தமிழ்பேசும் மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி புரிய அதனல் வழி ஏற்படும் என்ற பயந்தான் காரணம்.

ஃ

செ. ஆறுமுகம், மானிப்பாய்.

கே: திரு. குமிக்தியாரே, தமிழ் காங்கிரஸ் 20 வது மாநாடு கூட்டினார்களே! இதற்கு முன்பு கூடிய 19 வது மாநாடுகள் எப்பொழுது, எங்கே நடைபெற்றன?

ப: இதற்குமுன்பா? முதல் மாநாடும், 20 வது மாநாடும் கடைசி மாநாடும் இதுதானே!

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: காங்கிரஸ் மாநாட்டுக் கலை நிகழ்ச்சியில் வில்லுப்பாட்டுப் பாடியவர் மூன்று நபர்களைக் குறிப்பிட்டு மும்மலங்கள் என்றார். அதில் த பெ. தலைவர் ஆணவம் என்றால், உடுப்பிட்டி கர்மம் என்றால், வவுனியா மாயை தானே?

ப: சபாஷ்! அவருடைய வில்லுப் பாட்டைவிட உங்களது வியாக்கியானம் பிரமாதம்!

கே: தமிழ்க் காங்கிரசார் இருபது வருடத்திற்கொரு மகாநாடு வைத்தார்கள். இனி அடுத்த மாநாடு 1985ல் நடைபெறுமா?

ப: நடைபெறும் 1985ல் திரு. பொன்னம்பலம் தேர்தலில் வெற்றி பெற்றால்! இல்லையேல் அதுவுமில்லை.

பி. எம். கருப்பண்ணன்,
புதுவட்டகொடை.

கே: ஐ. தொ. கா. மாநாட்டு ஊர்வலத்தின்போது சில வாலிபர்கள், 'அப்பே ராசா அசிஸ் ராசா' என்றும் 'அப்பே கட்சி அசிஸ் கட்சி' என்றும், கோசமிட்டார்கள் இவர்களது மொழிப்பற்றைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இப்படிக் கோசித்தவர்கள் தமிழர்களா, சிங்களவர்களா? ஐ. தொ. கா. வில் சிங்களவர்களும் உறுப்பினர்களாயிருப்பதால் இவ்வாறு கோசிப்பது ஆச்சரியமன்று.

கே: திரு. வெள்ளையன் இ. தொ கா. வை விட்டு விலகியதற்குக் காரணம் பதவி மோகம் தான் எனச் சிலர் கூறுகிறார்களே! இது பற்றித் தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ப: எனக்குத் தெரியாது. அது அவருக்கும திரு. தொண்டமானுக்குந் தான் வெளிச்சம். திரு. அண்ணாமலை நியமன எம். பி யாக நியமிக்கப்பட்டதில் அந்தக் கட்சிக்குள் ஏற்பட்ட புகைச்சலாம். பூசலாம். கழுத்தறுப்புகளாம். திரு. வெள்ளையன் தனிச் சங்கம் அமைத்திருப்பதின் நோக்கம் தெரியவில்லை. ஆச்சங்கத்தின் பின்னணியில் யார் இருக்கிறார்களென்பதும் தெரியவில்லை. அன்று திரு. சோமசுந்தரத்துக்கு மட்டும் திரு. வெள்ளையன் ஒத்துழைப்பு அளித்திருந்தால் இ. தொ. கா. வின் சரித்திரமே மாறியிருக்கும். எதற்கும் இ. தொ. கா. சாதி அடிப்படையில் இயங்காமலிருப்பது நன்று.

ஃ

கரவைச் சிவா, கரவெட்டி.

கே: காங்கிரஸ் தலைவர் பதவி திரு. சிவசிதம்பரத்திற்கும், மாதர் முன்னணித் தலைமைப் பதவிதிருமதி. வசந்தா அப்பாத்துரைக்கும் கொடுப்பதாகக் கதை இருந்ததே?

ப: அதமட்டுமா? வேறு கதைகளுந்தான் இருந்தன. மாதர் முன்னணியொன்று இல்லாததாம் திருப்தி விடுபட்டிருக்கலாம். அதே காரணத்தின் மீது தமிழ் காங்கிரஸ் தலைவர் பதவிக்குத் திரு. சிவசிதம்பரம் விடுபட்டிருக்கலாம். இல்லையேல், தமிழரசுக் கட்சியுடன் கூடிக்குலாவி சமயம் வந்ததும் கரணம் அடித்ததுபோல அடித்துவிடுவாரோ என்ற அச்சமும் அவர் விடுபட்டதற்குக் காரணமாயிருக்கலாம்.

ஃ

வி சிந்தனைச் செல்வன்,
கல்முனை.

கே: காரியப்பர் நிலை என்னவாம்?

ப: தப்ரபோன் ஓட்டலில் இன்னும் 3 நண்பர்களுடன் அடிக்கடி கூடி இலஞ்ச மசோதா வந்தால் தனது நிலை என்னவாகும் என்பது பற்றி ஆலோசனை நடத்துகிறாராம்.

ஃ

ஆர். என். ராமையா, நாரலை.

கே: தோட்ட முதலாளிகள் அதிக வரிப்பளுவைச் சுமக்கின்றனரென்றும், அவர்களின் வரிகளைக் குறைக்கவேண்டுமென்றும் இ தொ. காங்கிரஸ் கிளர்ச்சி செய்கிறதே, இது ஒரு தொழிற்சங்கத்துக்கு அடுக்குமா?

ப: உலகிலே இது ஒரு புதுமை. முதலாளிகளின் நலன்களுக்காக ஒருதொழிற் சங்கம் கிளர்ச்சிசெய்ததாக நான் கேள்விப்பட்டதே கிடையாது. இத்தகைய பெரும் சாதனைக்காக இ. தொ. கா. வுக்கு ஒரு சபாஷ்!

ஃ

'சிங்கம்' பருத்தித்துறை.

கே: சிங்கமும் நரியும் ஒரு கூண்டிற்குள் இருப்பது அதிசயமாக இருக்கிறதே?

ப: அதிசயந்தான். ஆனல் நரியின் ஊளை சிங்கத்தின் கர்ச்சனையின் முன் எம்மட்டு?

ஃ

வே. லை. தெய்வநாயகம்,
அக்கரைபற்று-7.

கே: தேசியமயசேவை அமைச்சர் சுகததாச உலகத் தமிழ் மன்றத் தலைவருடன் தமிழில் பேசினாராமே?

ப: பேசாமல் என்ன செய்வது? மந்திரியானலும் அவரிடம் தமிழில்தான் பேசியாகவேண்டும், இல்லையேல் அவர் தலைமைவகிக்கும் உலக மன்றத்துக்குதான் என்ன பெருமை?

## வசந்தம்

— நீலாவணன் —

பச்சை யான இலைகளில் பொன்முலாம்
பாவ, ஊரின் பசும்புல் வெளியெலாம்,
பச்சைப் பாலகன் போலப், பகற்பயல்
பாய்ந்து வெண்பனிப் பந்தடித் தென்னுடை
குச்சி யுள்ளும் குறும்பு புரிந்தனன்.
கோபித் தென்பயன் இந்தப் பழங்கிழம்!
'அச்சடா' வென அந்தக் குறும்பனின்
அதர மீதிலோர் முத்தம் அளிக்கிறேன்.

சன்னலைத் திறந் தேன்;நெடுங் காலமாய்ச்
சாவை வெல்லத் தொடரும் நெடுவழி
அன்னச் சாலை யருகொடும் வேலிமேல்
அந்த ரத்தினில், தந்திசொல் கம்பிகள்.
தொன்மை வாய்ந்ததோர் பட்டினம் நோக்கியே
தொடுக்கப் பட்டுள தாம் அவை! என்கிறார்!
என்னவோ இன்பப் போதையிக் காலையில்!
எங்கி ருந்திப் புதூஒளி பொங்குது!

வம்மி தோறும் வயிரம் வயங்குது
வாகைக் கொம்பரில் மாணிக்கக் கொந்துகள்;
செம்மை முள்முருங் கீன்ற பவழங்கள்!
செல்வ மாங்கிளை முத்தம் சொரிந்திடும்.
எம்மருங்கு திரும்பினும் பச்சையில்
இடையிடை எழில் புன்னகைத் தேமலர்,
அம்மம் மாஎன்ன அற்புதம்! ஊரெலாம்,
அழகி யுன்றன் திருமணப் பந்தல்கள்!

பந்தல் தோறும், குயில்வித்து வான்களின்
பண்த தும்புசங் கீத விருந்துகள்!
குந்திக் காக்கை குரவை யிடும்;மரங்
கொத்தி, தாளங்கள் கொட்டிக் குதிக்கிறார்!
வந்து சேர்ந்தனர் நாட்டியத் தோகையர்;
வயல் அரங்கொ றும்புது நாட்டியம்!
இந்தத் தேசம் அனைத்தும் இருந்துன
தினிய நண்பர்கள் யாவரும் வந்தனர்.

வேனிலே, மண வேளை நெருங்குது;
வேதியர் அணில், வேதம் மொழிகிறார்
கானி லெங்குமுன் காதலை வாழ்த்தியே
கவிதை பாடுகின்றார் கவிவாணர்கள்!
வானில், வண்ண இறக்கை புனைந்ததோ
வந்து கொண்டிருக் கின்றனர் காதலர்!
ஏனடீ,இவ் வவசரம்!... நாங்களும்
இருக்க நாணமில் லாது சிரிக்கிறாய்!



"தமிழ்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவராக திரு. டி. சிவசிதம்பரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்."

—செய்தி

தமிழ் காங்கிரஸ் மாதர் முன்னணியொன்றை இப்பொழுது ஆரம்பிப்பதாக முடிவு செய்யவில்லையே.

"தமிழரசு, தமிழ் காங்கிரசுடன் இ. தொ. கா. ஒத்துழைக்கும்."

எஸ். தொண்டமான்.

இ. தொ. கழகத்தின் வளர்ச்சியைத் தாக்குப் பிடிக்க முடியாத நேரத்தில் வெள்ளையனும் வெளியேறி விட்டாரே. என்ன செய்வது.

"தனிக் கட்சி ஒப்பந்தங்கள் தமிழுக்கு தக்க அந்தஸ்து தருவது அசாத்தியம்."

[illegible] உடன்பாடு ஒன்று உண்டு என்பதை மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.

"வென்றவருக்குத் தான் வரவேற்பளிப்பது வழக்கம்."

—மு. சிவசிதம்பரம்

தோல்வியைக் கண்டவுடன் உங்கள் தலைவர்தான் ஓடி ஒழித்துக்கொள்வாரே. என்ன செய்வது?

"திரு. அமிர்தலிங்கத்தை காங்கிரஸ் மேடைக்கு வரும்படி சிவசிதம்பரம் மேடையில் நின்று அழைப்பு விடுத்தாராம்."

செய்தி.

அவருக்கத்தான் அழையா விருந்தினராக மாற்றுக் கட்சியினரின் மேடைகளில் ஏறி நிறையப் பழக்கமுண்டு அந்த நினைவில் திரு அமிர்தலிங்கத்திற்கும் அழைப்புவிட்டிருக்கலாம்.

"சமஷ்டி வழி இருள் சூழ்ந்தது.........தமிழினம் ஒன்றுபட............ச. கட்சியினரே இந்த ஒற்றுமையை மதிக்கவில்லை"

மு. சிவசிதம்பரம்.

யார் ஒற்றுமையை மதிக்கவில்லையென்பதற்கு உங்கள் பேச்சிலேயே பதிலிருக்கிறது. சும்மா 'தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ள வேண்டாம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய முன்னணியின் விரோதிகள் யார்?

## இன்றிருக்கும் ஐக்கியத்தையும் குலைக்க பொன்னம்பலம் முயற்சி

## இடையில் புகுந்த தொண்டமான் தலைமையை காப்பாற்ற பார்க்கிறார்

தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் கைங்கரியத்தில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். ஐக்கிய முன்னணிபற்றிப் பேசிக்கொண்டு அதேநேரத்தில், ஐக்கியத்திற்கு விரோதமான கருத்துக்களையும் அதே இடத்தில் தெரிவிக்கிறார்கள்.

ஐக்கிய முன்னணிபற்றிப் பேசுகிறவர்களிடம் நாவடக்கம் இல்லை. ஆனால் அழகு தமிழில் ஐக்கியம் வேண்டும் என்கிறார்கள். அடுத்த மணித்துளியில் கடுந் தமிழில் ஐக்கியத்திற்கு அழைப்பவர்களை வையவும் செய்கிறார்கள். இதுதான் ஐக்கிய முன்னணி பற்றிக் குரல் கொடுப்பவர்களின் உண்மை நிலை.

### அன்றும் இன்றும்

ஐக்கிய முன்னணிக் கூச்சல் எழுப்புபவர்களின் போக்கில் கடந்த பத்து ஆண்டுகளாக எத்தகைய மாற்றமுமில்லை. 1956ம் ஆண்டு முதல் ஐக்கிய முன்னணி என்ற கூச்சல் ஒய்வு நேர தமிழ் அரசியல்வாதிகளின் வாயிலிருந்து எழுந்த வண்ணமேயிருக்கிறது. அன்று கொழும்பு சைவமங்கையர் கழகத்தில் நடைபெற்ற ஐக்கிய முன்னணிக் கூட்டங்களிலும் இதே பல்லவிதான்.

ஐக்கிய முன்னணி பற்றிப் பேசவந்தவர்கள் ஒருவரை மாறி ஒருவர் தாக்கினார்கள். இந்தமாறித் தாக்கும் அத்தியாயத்தை ஆரம்பித்துவைத்தவரே சாட்சாத் திரு ஜி ஜி பொன்னம்பலம் அவர்கள்தான்.

1956ம் ஆண்டுத் தேர்தலின் பின்னரும் சில காலம் இந்த ஐக்கிய முன்னணிக் கூச்சல் இருந்துகொண்டேயிருந்தது. பின்னர், பிரச்சினைகள் தமிழ்மக்களின் குரல்வளையைநெரிக்க ஆரம்பித்ததும் ஐக்கியம் பற்றிப் பேசியவர்கள் ஓடிமறைந்துகொண்டனர். மீண்டும் 1960ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது ஐக்கிய முன்னணிபற்றிய பேச்சு எழுந்தது.

பொதுத்தேர்தலின் முடிவில் 'தனிப்பெருந் தலைவர்கள்' எல்லாம் மண் கவ்வினார்கள். வெற்றிபெற்ற 'தனிப்பெருந் தலைவர்களின் சீடர்கள்' ஐக்கிய முன்னணி என்ற கூச்சலைக் கிளப்பத் தயங்கினார்கள். அமைதியுடன் செயற்பட்டார்கள்.

மீண்டும் பொதுத் தேர்தல் வந்தது. மண்கவ்விய தலைவர்கள் அம்பலத்துக்கு வந்தார்கள். ஐக்கிய முன்னணிக் கூச்சலைக் கிளப்பினார்கள். கொழும்பு சரசுவதி மண்டபத்தில் ஐக்கிய முன்னணிக் கூட்டம் நடைபெற்றது. தமிழரசுப் பிரதிநிதியாக மூதவை உறுப்பினர் திரு மு. மாணிக்கம், திரு. ஜி ஜி. பொன்னம்பலம், திரு. சி. சுந்தரலிங்கம் ஆகியோர் கூடினார்கள்.

### கள்ளன் குள்ளன் வெள்ளன்

ஐக்கியம் பற்றிப் பேச வந்த திரு. சுந்தரலிங்கம் 'பொன்னம்பலம் கள்ளன், செல்வநாயகம் குள்ளன், நான் வெள்ளன்' என்றார். மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் 'மக்களின் ஒற்றுமையே முக்கியம்' என்றார். திரு. ஜி. ஜி பொன்னம்பலம் 'சமஷ்டி அரசியல் தமிழருக்கு நாசம் விளைவிக்கும்' என்றார். கூடியிருந்த பொது மக்கள் 'வேண்டாம் இந்த ஐக்கியம்' என்றனர்.

**-பூங்குன்றன்-**

பொதுத் தேர்தல் முடிந்தது. திரு சி. சுந்தரலிங்கம் மீண்டும் தோல்வியடைந்துள்ளார். எனவே, அவர் இப்பொழுது ஐக்கியம்பற்றியோ, அல்லது வேற்றுமைபற்றியோ கவலைப்படவில்லை. அடுத்த பொதுத்தேர்தல் நெருங்கும் பொழுதுதான் அவர் அதுபற்றிச் சிந்திப்பார்.

திரு. பொன்னம்பலமும், திரு. சுந்தரலிங்கத்தின் வழியைப் பின்பற்றியிருப்பார் (1960ல் செய்தது போல), ஆனால் அவர் சற்றும் எதிர்பாராத விதமாகத் தேர்தலில் வெற்றிபெற்று விட்டார். எனவே அவர் சிறிது காலம் தொடர்ந்தும் ஐக்கியம் என்ற கூச்சலை எழுப்பி அதில் நீச்சல் அடிக்க விரும்புகிறார். ஐக்கியம் என்ற கூச்சலில் சிறிது காலம் நீச்சலடித்து விட்டு அவர் இங்லோந்து சென்று ஓய்வு எடுக்க விரும்புகிறாராம்.

'ஐக்கியம், ஐக்கிய முன்னணி' என்று கூச்சல்போடும் இவர்கள், இதுவரை இந்த ஐக்கிய முன்னணிபற்றி விரிவான, விளக்கமான திட்டவட்டமான விளக்கம் ஏதாவது கொடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை. ஏதோ ஒரு 'சொல்' கிடைத்துவிட்டது என்ற எண்ணத்தில் தமக்கு சந்தர்ப்பம், வசதி ஏற்படும் போதெல்லாம் அதை உரத்த குரலில் உச்சரிக்கிறார்கள்.

### 'ஐக்கியம்' என்றால் என்ன?

'ஐக்கியம்' என்ற பதத்திற்கு திரு. ஜீ ஜீ. பொன்னம்பலமும் அவர் குழுவினருக்கும் கொடுக்கும் விளக்கம்தான் என்ன? ஐக்கியம்என்றால் தமிழரசுக் கட்சியைத் திட்டுவது என்பது பொன்னம்பலம் கட்சியினரின் விளக்கம்.

இந்த விளக்கம்தவறு என்றால்; ஐக்கியம் பற்றிப்பேசும் திரு. பொன்னம்பலமும் அவர் குழுவினரும் அல்லவா பொறுப்புணர்ச்சியுடன் நடக்கவேண்டும்.

ஐக்கிய முன்னணிக்கு யாரும் விரோதிகள் அல்லர். உலகமே ஐக்கியப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஐ நா சபையை அமைத்திருக்கிறது.

### தமிழரசார் விரோதிகளா?

தமிழரசார் ஐக்கிய முன்னணிக்கு விரோதிகளா?

இந்த நாட்டில் ஐக்கியத்தை அதிகம்விரும்புபவர்கள் [illegible] இல்லையென்றால் அவர்கள் இன்று பிரிவினைக்காக அல்லவா போராடுவார்கள். நினைத்த ஐக்கியம் வேண்டுமென்ற விருப்பத்தின்மீதே சமஷ்டி அரசியலை விரும்புகிறார்கள்.

போராட்டங்களை கூடிய வரையில் தவிர்ப்பதற்காக நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்பவர்களுடன் சமரசம் பேசுகிறார்கள். சமரசம் கிடைக்காத பட்சத்திலேயே போராட்டங்களை நடாத்துகிறார்கள். இன்று ஐக்கியத்தை விரும்பியே ஐ. தே. கட்சியுடன் உடன்பாடு செய்து தேசிய அரசாங்கத்தை நிறுவியுள்ளார்கள். இவர்களா ஐக்கிய முன்னணியை எதிர்க்கிறார்கள்?

ஐக்கிய முன்னணியைப் பற்றி அடித்துப் பேசும் பொன்னம்பலம் கட்சியின் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம்ஒவ்வொருசந்தர்ப்பத்திலும் தமிழரசுத் தலைவர்களையும் சமஷ்டி அரசியலையும் பகிரங்கமாக கண்டித்துப் பேசிவருகிறார்.

ஆனால் தமிழரசுத் தலைவர் திரு சா. ஜே. வே. செல்வநாயகம் தமது அரசியல் வாழ்வில் பொன்னம்பலம் கட்சியையோ அல்லது திரு. பொன்னம்பலத்தையோ கண்டித்துப் பேசியதாக ஒரு சந்தர்ப்பம் தானும் கிடையாது. இந்த நிலையில் தமிழரசுத் தலைவர்கள் ஐக்கிய முன்னணிக்கு விரோதிகள என்று திரு. பொன்னம்பலமும் அவர் கட்சியினரும் கூறுவதில் அர்த்தமுண்டா?

### யார் முதலில் தாக்கியவர்கள்?

தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க வழி சமைத்துக் கொடுத்ததன் மூலம் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கியப் பட்டுத்தானே இருந்து வருகிறார்கள். இது ஐக்கியம் இல்லையா?

தேசிய அரசாங்கம் உருவான பின்னர் தமிழரசுக் கட்சித் தலைவர்களும், கட்சியின் சாதாரண தொண்டர்களும் பேசிய கூட்டங்களில் எவ்வளவு பொறுப்புணர்ச்சியைக் கடைப்பிடித்தார்கள் என்பதை நாடறியும். தீவிர சிங்கள வகுப்பு வாதம் பேசும் இடதுசாரிகளின் செயலை கண்டிப்பதை தவிர வேறு எத்தகைய கண்டன சொற்களும் தமிழரசாரது கூட்டங்களில் ஒலித்ததா?

அப்படியாயின் முதலில் பகிரங்க தாக்குதலையும், கண்டனக்கணைகளையும் தொடக்கியவர்கள் யார்?

வேறுயாருமல்ல சாட்சாத் பொன்னம்பலம் கட்சியினரும் அதன் தலைவர் உயர் திரு ஜீ ஜீ பொன்னம்பலம் அவர்களுமே. இதையாரும் மறுக்கவோ அன்றி மறைக்கவோ அல்லது மறக்கவோ முடியாது.

தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் (மூதூர் இரண்டாவது பிரதிநிதி நீங்கலாக)ஒன்றுபட்டு ஒன்றாக ஒரு அணியில் நிற்கிறார்கள். அப்படியொரு அணியில் நின்று கொண்டே திரு. பொன்னம்பலமும் அவர் கட்சியினரும் அதே அணியில் நிற்கும் தமிழரசாரையும்- அவர்களின் தலையாய இலட்சியமான சமஷ்டி அரசியலமைப்பு முறையையும்-பகிரங்கமாகத் தாக்கினார்கள், தாக்கிவருகிறார்கள். அவர்களேதான் ஐக்கியம் பற்றியும் பேசுகிறார்கள்.

### இதுவும் ஐக்கியம் தானே?

ஐக்கியப்பட்டு-ஒரே அரசாங்கத்தில்-பொது இலட்சியங்களில்-ஒன்றுபட்டு நிற்கையில் ஐக்கிய முன்னணி என்ற பேச்சிற்கு இடமுண்டா? ஒரு அரசாங்கத்தில் பொது இலட்சியத்தின் கீழ் ஐக்கியப்பட்டு நிற்பவர்கள் மத்தியில் ஐக்கிய முன்னணி உருவாக்க வேண்டுமென்றுபேசுவதன் அர்த்தம் என்ன? இது அரசியல் அறியாமையா? அல்லது குதர்க்க வாதமா?

பொன்னம்பலம் கட்சியினர் விரும்பும் ஐக்கிய முன்னணியின் நோக்கம் தான் என்ன? தமிழரசுக் கட்சியினர் தங்கள் கொள்கைகளைத் தூர எறிந்து விட்டு, கட்சியையும் கலைத்து விட்டு எத்தகைய அடிப்படை இலட்சியமும் மற்ற பொன்னம்பலம் கட்சியிடம் சரண் புகவேண்டுமென்கிறார்களா? இல்லை இருபகுதியினரும் கட்சியைக் கலைத்துவிட்டு (அது பொன்னம்பலம் கட்சியினருக்குக் கஷ்டமல்ல) ஒன்றுபட வேண்டுமென்கிறார்களா?

பின்னைய முறையில் ஐக்கிய அமைப்புக்கள் தோன்றியதாக வரலாறோ அல்லது எடுத்துக் காட்டுக்களோ கிடையாது. இரு கம்யூனிச நாடுகள் அயல் நாடுகளாக இருந்த போதிலும் தனி அரசும் தனிப்படையும் வைத்திருக்கிறார்கள். எனவே பொன்னம்பலம் கட்சியினரிடம் அன்று கல்லடியும், பொல்லடியும்பட்டு கண்ணீராலும், செந்நீராலும் கட்டியெழுப்பிய தமிழரசுக் கட்சியையும், அதன் தொழிற்சங்கங்களையும் கலைக்க வேண்டுமென்கிறாரா திரு. பொன்னம்பலம்.

### திரு. தொண்டமான்

இந்த நேரத்தில் இடையில் புகுந்திருக்கிறார் திரு. தொண்டமான். மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகம் மலைபோல் வளருகிறது. இந்த நேரத்தில் திரு. வெள்ளையன் திரு. தொண்டமானைவிட்டு வெளியேறி புதுத் தொழிற் சங்கம் அமைத்துள்ளார். இதனால் அட்டன், பதுளை மாவட்டத்தில் 'கடையை கட்ட வேண்டிய நிலை' திரு தொண்டமானுக்குத் தோன்றியுள்ளது.

இதற்கு மாற்று வழி, இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வளர்ச்சிக்கு முற்றுப் புள்ளியிடுவது. அதற்கு வழி திரு. பொன்னம்பலத்தின் முகாரியை வாசித்து ஐக்கியம் என்ற போர்வையில் தமிழரசாரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது. இதுதான் திரு. தொண்டமான் பேசும் ஐக்கிய முன்னணி. எனவே, ஐக்கிய முன்னணி என்ற கூச்சலெல்லாம் வெறும் சுயநலத்தின் ஒரு மறு ஒலிப் பதிவு. இவர்களின் வலையில் விழுந்தால் குளத்தைக் கலக்கி பருந்திற் கிரையாக்கிய, கதையாகவே முடியும்.

### முதலில் அமைதி

உண்மையில் திரு. பொன்னம்பலமும் அவர் கட்சியும், திரு. தொண்டமானும் ஐக்கியத்தை விரும்பினால்-தமிழரசுத் தலைவர்களைப்

(12-ம் பக்கம் பார்க்க)


## காலம் சரியில்லை என்ற கவலையா?

அல்லது!

★ வாழ்க்கையில் நினைத்த காரியங்கள் நிறைவேறவில்லை என்ற நினைப்பா?

★ எதுவானால் என்ன! எல்லாக் காரியங்களையும் தெய்வ பலத்தினாலும்

★ மந்திர சக்தியினாலும் நிவாரணஞ் செய்து கொடுக்கப் படும்.

இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது.

பதிவு செய்யப்பட்ட மாந்திரீக கலாநிதி

**பி. எம். திசாநாயக்க,**

அருத எண்ணெய் தலைமைக் காரியாலயம், கம்பளை.

தொலைபேசி : 454



## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ, பண்டாரநாயக்க வீதி,

கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழரசுக் கட்சிக்கு மற்றொரு மந்திரிப் பதவி"

## சிங்கள இடதுசாரி பத்திரிகையின் விசமம்

"தமிழரசுக் கட்சிக்கு மற்றொரு மந்திரி பதவி கிடைக்குமென விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர் மந்திரி பதவி கொடுக்கப்பட்டுள்ள திரு. திருச்செல்வம் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணக் கோஷ்டியைச் சேர்ந்தவராவார். இதனுல் கட்சியின் மட்டக்களப்புக் கோஷ்டி அதிருப்தி அடைந்துள்ளது. எனவே அக் கோஷ்டி திரு. இராசமாணிக்கத்துக்கு ஒரு மந்திரி பதவியைப் பெற்றுக்கொடுக்க முயற்சி செய்கிறது" என்று "ஜனமத்தய" (மக்கள் கருத்து) என்னும் இடதுசாரிப்பத்திரிகை 4-5-1965-ல் எழுதியுள்ளது.

அந்தச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"நீண்ட காலமாகத் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் யாழ்ப்பாண- மட்டக்களப்பு கோஷ்டிப் பிளவு சம உரிமை வழங்குவதின் மூலம் தடுக்கப்பட்டுவந்துள்ளது. கட்சியின் தலைமை ஒரு வருடம் யாழ்ப்பாணக் கோஷ்டிக்குக் கொடுத்தால், அடுத்த வருடம் மட்டக்களப்புக் கோஷ்டிக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கேற்ப மட்டக்களப்புக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரையும் மந்திரிசபையில் சேர்த்துக் கொள்ளுமாறு 7 கட்சி-கூட்டரசாங்கத்தின் தலைவரிடம் கட்சி கேட்டுக்கொண்டிருக்கிறது.

## தோட்ட முதலாளிகள் சார்பில் இ. தொ. கா. கோரிக்கையா?

'தோட்டத் துரைமார் சங்கத்தினதும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரினதும் வேண்டுகோளின் மீது தோட்ட முதலாளிகளிடமிருந்து தற்போது அறவிடப்படும் வரியைக் குறைக்க அரசாங்கம் தயாராகிறது' என்று 'எத்த' பத்திரிகை 17-5-65ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'இது தோட்ட முதலாளிகளுக்கு வரி நிவாரணம் வழங்குவதாகக் காட்டிக் கொள்ளாமல், தொழிலாளர்களுக்குச் சம்பளம்கூட்டுவதாகக் காட்டிக்கொள்ள அரசாங்கமும், தொண்டமானும் தோட்ட முதலாளிகளும் முயற்சியாகும்.

தோட்டத் துரைமார் சங்கமும் திரு. தொண்டமானும் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் தோட்ட முதலாளிகளுக்கு வரி நிவாரணம் அளித்தாலன்றி தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் கூட்டமுடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

'உண்மையில், தோட்ட முதலாளிகளின் இலாபத்தைக் கருதி இந்த யோசனை கூறப்படுகிறதே தவிர தொழிலாளரின் நலனை முன்னிட்டல்ல. தொழிலாளர்களுக்குச் சம்பளம் கூட்டுவதென்ற போர்வையில் தோட்ட முதலாளிகள் வரிச் சலுகைபெற முயற்சிசெய்கின்றனர்.

'திரு. தொண்டமான் ஒரு தோட்ட முதலாளி. அவரது ஸ்தாபனம் சார்பாக பாராளுமன்றத்துக்கு நியமனம் பெற்ற திரு. அண்ணாமலையும் ஒரு தோட்ட முதலாளி. தோட்டமுதலாளிகள் சங்கமும் தொண்டமானும் சேர்ந்து கேட்டுள்ள வரிக் குறைப்புக் கோரிக்கையைத் தொழிலாளர் மந்திரியும், நிதிமந்திரியும் பரிசீலனை செய்கின்றனர். இதுபற்றி விசாரணை செய்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி தொழிலாளர் மந்திரி ஜனுப் மகம்மது தனது அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார். இதுபற்றி அரசாங்கம் விரைவில் முடிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது' என்று 'எத்த' மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தமிழ் படிவங்கள் வழங்கவும்

### தமிழரசுத் தந்தை கடிதம்

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் தனிச் சிங்களத்தில் மட்டுமே புத்தளம்—சிலாபம் பகுதியில் விநியோகிக்கப்படுவதாகவும், இப்பகுதியில் பெரும்பாலையினர் தமிழ் பேசும் மக்களாக இருப்பதால் தமிழ் படிவங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கும் வண்ணம் உள்நாட்டு அமைச்சருக்கு தமிழரசுத் தந்தை கடிதம் எழுதியுள்ளார்.

தேசிய அரசாங்கம்மொழி அடிப்படையில் இந்நாட்டு பிரஜைகளுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்குவதில்லையென்று அறிவித்திருக்கையில் நீங்கள் இப்பகுதியில்மட்டுமல்ல ஏனைய இடங்களிலும் தமிழ் படிவங்கள் கிடைக்க வழிசெய்வீர்கள் என்று நம்புகிறேன்.

இது சம்பந்தமாக தேசிய அரசாங்கம் தேவையான சட்டங்களை ஆக்க இருப்பதால் நீங்கள் தேவையான ஒழுங்குகளை இப்பொழுதே மேற்கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்று மேலும் அக்கடிதத்தில்குறிப்பிட்டுள்ளார்.

## வெறும் பாடல்

—காசி ஆனந்தன்—

மாந்தோப்பில் இசை மிழற்றும் குயிலே! என்னை
 மறந்துவிட்டா பாடுகிறாய்? பாடிப்பாடி
பூந்தளிர்ப்பெண் நினைவுக்குள் எனைப் போட்டுப்
 பொடியாக்க நினைத்தாயா? முன்போர் நாளில்
கூந்தலுக்குப் பேர்போன குமரியோடு
 கூடத்தில் நானிருந்து சுவைத்த பாட்டை
ஏந்திழையாள் கைவிட்டுப் போன பின்னர்
 இன்னுந்தான் பாடுகிறாய்...என் செய்கின்றாய்?

கரும்பளவு வண்ண உடல்! அழகு மாவின்
 கனியளவு வட்டமுகம்! மலரப்பார்க்கும்
அரும்பளவு கொண்டவிழி! காதலுக்கோர்
 அணையளவு தேனிதழ்கள்! காற்றிலாடும்
துரும்பளவு சின்னஇடை! மலைக்குன்றத்தின்
 தொடரளவு மார்புடையாள் தோலுக்குள்ளே
இரும்பளவு மனம்வைத்தான் இறைவன்! உன்னை
 இசைப் பதற்கும் வைத்தானே கொடியபாவி!

தேன் கவிதை பாடுகிறாய் குயிலே! நெஞ்சில்
 தீ வளரப் பாடுகிறாய்! அந்தநாளில்
நான் கவிதை பாடுவதும் அவளென் பாட்டை
 நகலெடுக்க ஓடுவதும் இடையில் வந்து
தான் கவிதைப் பொருளான காரணத்தால்
 தலை குனிய நாணுவதும்...அடடாவோ! நீ
ஏன் கவிதை பாடுகிறாய் குயிலே? கொஞ்சம்
 இசை நிறுத்தமாட்டாயா? எனக்கேன் பாடல்?

குறும்போடு கதைபேசி ஒரு காலத்தில்
 கூடத்து முற்றத்தில் இதழும் தந்து
நறுங் கூந்தல் முகம் பொதகி எனது கைக்குள்
 நாணத்தால் விழிமூடிக் கிடந்தபாவை
பறந்தோடிப் போய் விட்டாள் குயிலே; நீயோ
 பாழ் பட்டுகிடக்கின்ற மாந்தோட்டத்தில்
வெறும்பாடல் இசைக்கின்றாய்...எதுக்குப் பாடல்?
 விழலுக்கா இசைக்கின்றாய்? யார்கேட்டார்கள்?

## சிங்கள இதழ்களில்...

### முழு இலங்கையும் சுவர்க்க பூமியாகும்

'கோனூர்ன் சகா தமிழ் போராட்டத்தில் இறங்குகிறார்' என்ற தலைப்பில் 'எத்த' 19-5-65ந் திகதி கீழ்க்காணும் செய்தியை வெளியிட்டுள்ளது.

'கடந்த பொதுத் தேர்தலில் ஜாதிக்க விமுக்தி பெரமுனவின் அபேட்சகராகப் பதுளையில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்த திரு. பர்ஸிவிஜேகோன் (பதுளை நகரசபைஉறுப்பினர்) வெளியிட்டுள்ள ஒரு துண்டுப் பிரசுரத்தில் பதுளை நகரம் முழுவதும் தமிழர்வசம் சிக்கிக் கொள்ளப் போவதாக எச்சரிக்கை செய்து, அதனைப் பாதுகாத்துக்கொள்ள முன் வரும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

பதுளைக் கடைவீதியிற் சிங்களவர் ஒருவருக்குச்சொந்தமாயிருந்த ஒருகடை தமிழர் ஒருவருக்குச் சொந்தமாகியிருப்பதை அவர் உதாரணமாகத் துண்டுப்பிரசுரத்தில் சுட்டிக்காட்டுகிறார்.

திரு. பர்ஸிவிஜேகோன் ஜே. வி. பி. கட்சியின் உபதலைவராவார். அவரது தலைவர்களான திரு. இராஜரத்னுவும் திருமதி குசுமா இராஜரத்னவும் யு. என். பி.—பெடரல்—தொண்டமான் அரசாங்கத்தில் பங்குதாரர்களாவர்.

சமஷ்டிவாதிகளும்தொண்டமான்களும் அதிகாரத்துக்கு வந்துள்ள ஓர்அரசாங்கம் இருக்கும்போது தமிழர்கள் பதுளையை விழுங்குவது ஆச்சரியமன்று. சமஷ்டிவாதிகள்—தொண்டமான்களின் அரசாங்கத்தில் இராஜரத்ன தம்பதிகள் அமர்ந்திருப்பதுதான் ஆச்சரியம். அவ்வாறு அமர்ந்திருக்கும்போது தமது சகாவைக் கொண்டு, 'தமிழ'ர்கள் விழுங்குகிறார்களெனக் கூச்சலிடச் செய்வது அதைவிடப் பெரிய ஆச்சரியமாகும்.

இந்த 7- கட்சிகளின் கூட்டாட்சி இன்னும் கொஞ்சக் காலத்துக்கு நீடிக்குமாயின் பதுளை மட்டுமின்றி முழு இலங்கையும் கத்தோலிக்கர் சமஷ்டிவாதிகள், கள்ளத்தோணிகள் ஆகியோரின் சுவர்க்கபூமியாக மாறுவதைத் தடுக்க முடியாமற் போய்விடுமென்பது பதுளையிலுள்ள சிங்கள மக்களின் கருத்தாகும்.'

### சிங்களமும் திறைசேரியும்

'திறைசேரியில் சிங்களம் முடிவடைந்து விட்டதா என்ற கேள்வியை அங்கு பணிபுரியும் சிங்கள ஊழியர்கள் எழுப்பியுள்ளனர். ஏப்பிரல் 15ந் திகதிக்குப் பிறகு அநேகமாக சிங்களத்தில் கடிதம் எழுதியது கிடையாதென அவர்கள் கூறுகின்றனர்;

அரசாங்கத்தின் சிங்கள மொழிக் கொள்கையைத் தொடர்ந்து நடத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தபிறகும், 1964 சனவரி 1ந் திகதி தொட்டு சிங்களத்தில் கடமையாற்றி வந்திருக்கும்போதும் திடீரென ஆங்கிலத்தில் கடமையாற்ற வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்று அவர்கள் கேட்கின்றனர்; அரசாங்கக் கட்டளை எதுவுமின்றி அரசாங்க அலுவலகங்களில் ஆங்கிலத்தில் கடமையாற்ற ஆரம்பித்த காரணம் தமிழ், கத்தோலிக்க அதிகாரிகளின் முயற்சியே என்று கூறப்படுகிறது.'

—எத்த (13-5-65)

### கண்டனத்துக்கு காரணம்

'டைம்ஸ் பத்திரிகை நிறுவனம்படிப்படியாக அரசாங்கத்தைக் கண்டிக்கத் தொடங்கியிருப்பதற்கான காரணம் இந்த நிறுவனத்தின் தலைவரான நாரனைப் பிரதிநிதியான திரு. டொனல்ட்ரவவிராவுக்குஅமைச்சர் பதவியொன்று கிடைக்காததும், பத்திரிகை விற்பனையைப் பாதுகாப்பதற்காகப் பட்சபாதமற்றமுறையில் எழுதுவதாகக் காட்டிக் கொள்வதுமேயாகும். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு எனக் கூறப்படுகிறது. அதுதான் டைம்ஸ் நிறுவனத்தின் நிர்வாக அதிபர் திரு. பி. நடேசனுக்கு இலங்கை விமான சேவையின் தலைவர் பதவி கிடைக்காமற் போனது.'

—எத்த (19-5-65)

### தமிழர் குடியேற்றம்

"அனுராதபுரி நகரத்தையொட்டிய கிராமப் பகுதிகளின் மீது தமிழர் கண் வைத்துள்ளனர். ஏழு கட்சி கூட்டரசாங்கம் பதவிக்கு வந்ததும் பணக்காரத் தமிழர்கள் இப்பகுதியில் காணிகள் விலைக்கு வாங்கத் தொடங்குகின்றனர்.

அவர்கள் பல ஏக்கர்களைக் கொண்ட பெரிய காணிகளை விலைக்கு வாங்கி பின்னர் அதனை துண்டாடி சிறு சிறு காணித் துண்டுகளாக விற்பனை செய்து தமிழர் குடியேற்றப்பகுதிகளை ஏற்படுத்தப் போவதாகக் கூறுகின்றனர்.

— ஜனசத்திய (16-5-65)

### பிலிப்பைச் சுற்றி வளையம்

'ஏழுகட்சி கூட்டாட்சியின் உண்மையானமுகத்தை மறைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் திரு. பிலிப் குணவர்த்தன அரசாங்கத்திற் சேர்த்துக்கொள்ளப் பட்டாரெனினும்,கூட்டாட்சியின் கொள்கை வளையத்தினுள் அவரை மடக்கி வைத்துக்கொள்வதற்காக ஐ. தே. கட்சி இப்பொழுது பெரு முயற்சி செய்கிறது.

'மீண்டும் பழைய எண்ணம் மேலெழும்பி, ஓரளவு கூட்டாட்சியின் கொள்கை வளையத்திலிருந்து வெளியே பாய்ந்துசெல்லஅவர்முயற்சி செய்யக்கூடும் என்ற பயம் ஐ. தே. கட்சிக்கு உண்டு. எனவே இப்பொழுது திரு. பிலிப்பைச் சுற்றி ஐ. தே. கட்சி ஒரு வளையம் அமைத்திருப்பதாக அறியப்படுகிறது.

திரு. பிலிப் பெயரளவில் அமைச்சராக இருந்தாலும், அமைச்சின் அலுவல்களைப் பொறுத்தவரையில் அமைச்சராகச் செயலாற்றுவது உதவிமந்திரி திரு. செல்டன் ஜயசிங்காதான் என்று கூறப்படுகிறது. திரு. ஜயசிங்கதின் தலையீடின்றி திரு.பிலிப் திரும்பிப் பார்க்கக்கூட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறதாம்.

ஐ. தே. கட்சி அதிகாரிகளும், ஐ. தே. க. வர்த்தக தொழிலதிபர்களும் பிலிப்பைச் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கின்றனராம். திரு. டட்லிக்குத் திரு. பிலிப்பைத் தேவைப்படுவது அவருடைய 'தேசிய' அரசாங்கத்துக்கு 'சிங்களத்தன்மை' என்னும் சாயத்தைப் பூசுவதற்கு மட்டுமே! அதற்காகப் பால் திரு. பிலிப்புக்கு தன் [illegible] டட்லி இடமளிக்கமாட்டார்.

—'எத்த' (19.5.65)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்மன் பல்கலைக் கழகத்தில் தமிழில் ஆராய்ச்சி

மேற்கு செர்மனியிலுள்ள பழம்பெரும் பல்கலைக் கழகங்களில் ஒன்ருன கைடல்பர்க் பல்கலைக் கழகத்தில் சமீபத்தில் 'இந்தியா—ஆசியா கழகம்' நிறுவப்பட்டிருக்கிறது வளர்ந்து வரும் நாடுகளுக்கு இக்கழகம் கல்வி உதவி அளிக்கிறது. இக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சித் துறை, தமிழ், இந்தி, உருது, வங்காளி ஆகிய மொழிகளில் ஆராய்ச்சி நடத்துவதற்கு வசதி செய்து கொடுக்கிறது. இக்கழகத்தின் மற்ருெரு பிரிவான 'இந்தியா—ஆசியா கல்லூரி'யில் ஆசிய நாடுகளுக்குப் பணியாற்றச் செல்லும் செர்மன் அறிஞர்கள், ஆசிரியர்கள், நிபுணர்கள் ஆகியோருக்குத் தனிப்பயிற்சி அளிக்கிறது. இவர்களுக்குப்பல்வேறு இந்திய மொழிகள் போதிக்கப்படுகின்றன.

வளர்ந்து வரும் நாடான இந்தியாவுக்கும், மற்ற ஆசிய நாடுகளுக்கும் வளம் பெற்றுள்ள நாடுகள் கல்வி, தொழில்நுட்பம், பொருளாதார உதவிகள் அளிக்க வேண்டுமென ஐ. நா. வின் கல்வி, சமூக, கலாசார அமைப்பு (யுனெஸ்கோ) கூறியுள்ள ஆலோசனையை உடனடியாகச் செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டும் நாடுகளில் மேற்கு செர்மனியும் ஒன்று. இந்த உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக கைடல்பர்க் பல்கலைக் கழகத்தில் 'இந்தியா—ஆசியா கழகம்' நிறுவப்பட்டிருக்கிறது. கல்வி போதனை, ஆராய்ச்சி ஆகிய துறைகளில் உதவும் இந்தக் கழகத்தில் 14 துறைகள் உள்ளன இவற்றில் 10 துறைகள் இப்பொழுது முழு வேகத்துடன் செயற்பட்டு வருகின்றன.

இக்கழகம் சமீபத்தில் தான் தொடங்கப்பட்டது. இதற்கு 'யுனெஸ்கோ' உதவி அளிக்கிறது. மேற்கு செர்மனியிடம் உதவி பெறும் இந்தியா மற்றும் ஆசிய நாடுகளின் சிக்கல்கள் அனைத்தையும் இக்கழகம் ஆராய்கிறது. அந்தந்த நாடுகளின் தேவைகள் குறித்து இக்கழக நிபுணர்கள் நேரில் சென்று ஆராய்ந்து, அந்தந்த நாடுகளுக்கு ஏற்றபடி எவ்வித மான உதவிகளை வழங்க வேண்டும் என்பதை அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்கிறார்கள்.

### தமிழில் ஆராய்ச்சி

இக்கழகம், ஆராய்ச்சிப் பிரிவு, சர்வதேச மொழிக் கல்லூரி, இந்தியா—ஆசியா கல்லூரி ஆகிய மூன்று பிரிவுகளாக இயங்கி வருகிறது. விவசாயச் சமூக இயல், பொருளாதாரம், சமூக இயல், வெப்ப நிலைச் சுகாதாரம், சட்டம், அரசியல், சமயம், இந்திய மரபியல், வரலாறு, கலை வரலாறு, புதைப்பொருள் ஆராய்ச்சி, மனித வரலாறு, பூவியியல் ஆகிய பல்வேறுபாடங்களில் ஆராய்ச்சித் துறையில் ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. செர்மன் ஆராய்ச்சியாளர்களும், ஆசிய நாடுகளின் ஆராய்ச்சியாளர்களும் கைடல்பர்கிலும் ஆசிய நாடுகளிலும் இந்த ஆராய்ச்சிகளை நடத்திவருகிறார்கள். இந்தத் துறையின் முதலாவது ஆராய்ச்சித் திட்டங்கள் சமீபத்தில் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ், இந்தி, உருது, வங்காளி ஆகிய மொழிகளிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### செர்மனியருக்கு இந்தியமொழிப் பயிற்சி

ஆசிய நாடுகளிலிருந்து செர்மனிக்கு வரும் மாணவர்களுக்கு செர்மன் மொழியையும் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றையும் போதிக்கும் முக்கிய பணியில், 'சர்வதேசக் கல்லூரி' ஈடுபட்டிருக்கிறது. மேலை நாட்டு கலாசாரம், மனப்போக்கு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இங்கு செர்மன் மாணவர்களுடன் கலந்து அரசாங்க முறை, அரசியல் மாநில நிர்வாகம் ஆகியவற்றை அயல் நாட்டு மாணவர்கள் கற்கிறார்கள்.

ஆசிய நாடுகளுக்குப் பணியாற்றச் செல்லும் செர்மன் அறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் ஆகியோருக்கு அந்தந்த நாடுகளைப்பற்றியவாழ்க்கை முறை, பண்பாடு ஆகியவற்றை 'இந்தியா—ஆசிய கல்லூரி'யில் போதிக்கிறார்கள். அந்தந்த நாடுகளின் மொழிகளும் இவர்களுக்கு இங்கு கற்பிக்கப்படுகின்றன. இந்திய மரபியல் பற்றி இவர்களுக்குத் தனி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

# தாயகம் செல்லும் தமிழரசுத் தொண்டன்



அகில இலங்கை பகுத்தறிவு இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளைச் செயலாளராகவும், இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் இணைப் பொதுச் செயலாளராகவும், இலங்கைதிராவிடர் முன்னேற்றக் கழக யாழ்ப்பாணக்கிளையின் செயலாளராகவும் பணிபுரிந்துள்ள திரு. சி. வெ. கண்ணன், இம்மாதம் 25ம் திகதியன்று தாயகம் திரும்பவிருக்கின்றார்.

தமிழரசுக்கட்சியின் முக்கிய தொண்டர்களில் ஒருவராக விளங்கிய இவர் கட்சி நடாத்திய மொழியுரிமைப் போராட்டங்களில் முன்னின்று உழைத்துள்ளார். அகில இலங்கை பகுத்தறிவு இயக்கம் நடாத்திய சாதி ஒழிப்பு இயக்கத்திலும், மற்றும் சமுக சீர்திருத்த இயக்கங்களிலும் இவர் தீவிரமாகப் பங்குகொண்டிருக்கிறார்.

'சில்லாம்பட்டிக் கண்ணன்' என்ற புனைபெயரில் பல சிறு கதைகளும், கட்டுரைகளும் எழுதியிருக்கிருர்.

இவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளரும் கூட. ஆரம்ப காலத்தில் இயக்கக் கருத்துக்களைப் பரப்பும் நோக்கத்துடன் நடாத்தப்பட்ட பிரச்சாரக் கூட்டங்களில் முக்கிய பங்கெடுத்துள்ளார்.

ஏறத்தாழ இவர் பதினெட்டு ஆண்டுகள் இலங்கையில் வசித்துள்ளார்.

# மக்கள் குரல்

## யார் குற்றவாளி?

தேசியமயசேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவினதும், வீடமைப்பு அமைச்சர் ஜனுப் முகம்மது அவர்களினதும் யாழ்ப்பாண வருகையையொட்டி நடைபெற்ற வரவேற்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முறையில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் உண்மையான சம்பவங்களை சிறிதேனும் ஒளிவு மறைவின்றி எவரையும் புண்படுத்தாத முறையில் சம்பவங்களைத் தெளிவுபடுத்தியிருந்தார் திரு. அமிர்தலிங்கம்.

திரு. அமிர்தலிங்கத்தின் அறிக்கைக்கு மறுப்புத் தெரிவிக்கும் முறையில் திரு. மு. சிவசிதம்பரம் என்பவர் ஒரு கூட்டத்தில் பேசிய பேச்சு பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. திரு. அமிர்தலிங்கத்தின் அறிக்கைக்கு திரு. மு. சிவசிதம்பரம் என்பவர் கொடுத்திருக்கும் மறுப்பு சிறுபிள்ளைத்தனமானதாகவும், சிரிப்புக்கிடமானதாகவும் இருக்கிறது.

உள்ளூராட்சி அமைச்சர் உடுப்பிட்டித் தொகுதிக்கு விஜயம்செய்தபோது உடுப்பிட்டித் தொகுதிப் பிரதிநிதிக்கு அழைப்பு அனுப்பவில்லையென்றும், இது சம்பிரதாயத்திற்கு மாருனதேதென்றும் திரு. சிவசிதம்பரம் என்பவர் கேட்கிருர். திரு. திருச்செல்வம் அவர்கள் வட-கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்வது ஒரு தமிழரசுக் கட்சி உறுப்பினர் என்ற ரீதியிலேயன்றி அமைச்சர் என்ற ரீதியில் அல்ல. உடுப்பிட்டித் தொகுதி வாலிப முன்னணியினர் நடாத்திய வரவேற்பு விழாவில் திரு. திருச்செல்வம் கலந்துகொண்டதும் தமிழரசுக் கட்சி உறுப்பினர் என்ற முறையிலேயே என்பதை சகலரும் அறிவார்கள்.

இந்த நிலையில் திரு. சிவசிதம்பரம் என்பவரின் மறுப்பு அர்த்தமற்றதாகிவிட்டது. மேலும், திரு. திருச்செல்வத்திற்கு வரவேற்புக் கொடுக்கப்பட்ட அதே ரீதியிற்தானு அமைச்சர்களான திரு. சுகததாசாவுக்கும், ஜனுப் முகம்மதுவிற்கும் கொடுக்கப்பட்டது? அப்படியானுல் தமிழ் காங்கிரஸ் கட்சி ஐ. தே. கட்சியின் கிளையென்பதை திரு. சிவசிதம்பரம் என்பவர் ஏற்றுக் கொள்கிருரா?

அமைச்சர்கள் இருவரதும் விஜயம் உத்தியோகபூர்வமானது என்று தலைவர் கூற, அவருக்கு ஆட்பட்டோர் எப்படி அதை மறுப்பது!

திரு. ஜெயக்கொடிக்கு வரவேற்புக் கொடுப்பதைபற்றியும் மரபுக்குப் புறம்பாக நின்று மரபுக்கு மாறுபட்டது என்று பொரிந்துக் கொட்டியிருக்கிருர் திரு. சிவசிதம்பரம் என்பவர். திரு. ஜெயக்கொடிக்கு உடுப்பிட்டியில் மட்டுமல்ல வட-கிழக்கு மாகாணங்களில் எல்லாம் வரவேற்பு நடாத்தினார்கள். அதற்குக் காரணம் அவரின் சேவை மனப்பான்மையை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதே.

திரு. ஜெயக்கொடிக்கு வரவேற்புக் கொடுப்பது தவறு என்ருல் ஐந்தாறு முறையாக மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கும் வேறுசிலருக்கும் வரவேற்புக் கொடுப்பதும் (பத்திரிகைச் செய்திகளின் படி) தவருகவே இருக்க வேண்டும்.

எனவே கண்ணாடி வீட்டில் இருப்பவர்கள் கல்லெறியக் கூடாது. திரு: சிவசிதம்பரம் என்பவர் இம் முதுமொழியை உடன் கருத்தூன்றிச் சிந்திக்கட்டும்.

இங்கண்

மேலைப்புலோலி

பருத்தித்துறை

# இந்து சன்மார்க்க சங்கம்

அண்மையில் கூடிய உடுப்பிட்டிய இந்து சன்மார்க்க சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருடப் பதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: யோகி. சுத்தானந்த பாரதியார், துணைக் காப்பாளர்கள்: திருவாளர்கள் கந்தையா வைத்தியநாதன், வி. தில்லைநாதன், நீதியரசர் பொ. சிறீஸ் கந்தராசா.

தலைவர்: திரு. ஆ. செ. ஆறுமுகம், துணைத் தலைவர்கள்: திருவாளர்கள் சோ. பாலசுப்பிரமணியம்... கோ. பாலசிரோசா, து. குருசாமி ஐயர், செயலாளர்: திரு. இ. ஞானப்பிரகாசம், துணைச் செயலாளர்: திரு. பொன். பத்மநாதன், பொருளாளர்: திரு. ரி. சங்கரப்பிள்ளை, துணைப் பொருளாளர்: திரு: வே. சு. நடராசா.

ஆட்சிக் குழு உறுப்பினர்கள். திருவாளர்கள்: இ. இரங்கநாதன், சு. நடராசா, பி. மாரிமுத்து, வே. குமரகுரு, வி. தெட்சணமூர்த்தி, இ. கனகசிங்கம், மு. கந்தையா, க. வாமதேவன்.

# வாலிபர்கள் அமைத்த கிராமம்

அல்ஜீரியாவில் கபிலியா என்னுமிடத்தில் 150 குடும்பங்கள் வசிப்பதற்கான ஒரு புதிய கிராமத்தை செர்மன் சனநாயகக் குடியரசிலிருந்து சென்ற 41 வாலிபர்கள் அமைத்துள்ளனர்.




அருந்துக

நுவரெலியா

இது சிறந்த பியர்

ஏனெனில்

* 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
* 8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.
* இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.

தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
ஜுபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்

[illegible]வரி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் எழுத்து முறையின் பழமையும் சிறப்பும்

## பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் எம். ஏ.

உலகின் எழுத்துமுறைகளிலெல்லாம் பழமை மிக்கது எது என்று கேட்டால், தமிழ் எழுத்து முறையே என்று துணிந்து கூறலாம்.

உலகின் எழுத்து முறைகளிலெல்லாம் மிகச் சிறந்தது எது என்று கேட்டால், இக்கேள்விக்கும் தொல்காப்பியர் காலத் தமிழ் எழுத்து முறையே என்று தலை நிமிர்ந்து விடையிறுக்கலாம்.

எழுத்து முறை என்று சொல்லும்போது நாம் உண்மையில் ஒரு முறையை மனத்தில் கருதவில்லை; இரண்டு தனி முறைகளையும் அவற்றின் இணைப்பையும் கருத்துட் கொள்கிறோம். ஏனெனில் எழுத்துக்கு இரு வடிவங்கள் உண்டு. ஒன்று நாவினால் ஒலிக்கப்பட்டுக் காதினால் கேட்கப்படும் ஒலி வடிவம், மற்றொன்று கையினால் எழுதப்பட்டுக் கண்ணினால் பார்க்கப்படும் வரிவடிவம், இரண்டும் சேர்ந்ததே எழுத்து முறை.

### வரிவடிவம்

தமிழர் பல்லாயிர ஆண்டுகட்கு முன்பே எழுத்தின் இரு வடிவங்களையும் கண்டெய்தி விட்டனர். ஆகவே தான் இரண்டையும் ஒரே சொல்லால் குறித்தனர். ஆனால் உலகின் எல்லா மொழிகளிலும் இதே நிலை பெறப்படவில்லை. சமஸ்கிருத உலகம் நீண்ட நாள் வரிவடிவமில்லாமலிருந்தது. அதனால் ஒலி வடிவத்தையே அவர்கள் எழுத்து (அட்சரம்) என்று குறித்தனர். வரிவடிவத்தை அவர்கள் இரு அயலினங்களிடமிருந்தே இரவலாகப் பெற்றார்கள். தென்னகத்தில் தமிழரிடமிருந்து அவர்கள் பெற்ற வடிவம் கிரந்தம் எனப்படுகிறது. அது தமிழ் மொழியைப் போன்ற வடிவங்களே உடையது. ஆனால் வடதிசையில் பண்டை வட திசைத் திராவிட இனத்தவரான நாகரிடமிருந்து அவர்கள் இன்னொரு வகை எழுத்தைப் பெற்றார்கள். இதைத்தான் நாம் நாகரி அல்லது தேவ நாகரி என்கிறோம். தேவர்கள் அதாவது ஆரியர்கள் பயன்படுத்திய நாகரின் வரிவடிவு என்பது இதன் பொருள்.

வரிவடிவைக் கடன்வாங்கிய பிறகும் சமஸ்கிருதவாணர் எழுத்தை ஒலிவடிவப் பெயரால் (அட்சரம் என்ற சொல்லால்) குறித்து, வரிவடிவான எழுத்தினை லிபி என்றனர்.

### எழுத்து

தமிழில் எழுது என்பதன் மூலவேர்ச் சொல் 'எழு' என்பதே எனவே எழுது என்பதன் முதற்பொருள் 'தோற்றுவி' என்பதே, கண்ணுக்கு மை எழுது, ஓவியம் எழுது, ஏடெழுது என்ற மூன்று வாசகங்களில் தோற்றுவி என்ற மூலப்பொருள் பூசு, படம் வரை, எழுத்தில் குறி என்ற மூன்று பொருள் வளர்ச்சிப்படிகளைக் காண்கிறோம்.

எந்தத் தமிழ்ச் சொல்லையும் எப்படியோ சமஸ்கிருதத்திலிருந்து வந்ததென்று கூறி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டுவிடும் ஒரு திருக்கூட்டத்தார் உண்டு. மக்களிடம் மடமையைக் கடமையாகப் பரப்பி, சமுதாய சமய, அரசியல், ஆட்சித்துறைகளில் புகுந்து எல்லாத் துறைகளிலும் பிற்போக்குக்குப் பாடுபடுவதில் அவர்கள் முழு அறிவும் பயன் படுத்தப் பட்டு வந்துள்ளது, வருகிறது. ஆனால் அவர்கள்கூட 'எழுது' என்ற சொல் சமஸ்கிருதம் என்று காட்ட முன் வரவில்லை.

உண்மையில் 'எழு' என்ற மூல வேர்ச்சொல்லிலிருந்து வந்த 'எழுது' என்ற துணை வேர்ச்சொல் உலக முழுவதுமுள்ள எல்லா மொழிகளிலும் உள்ள 'எழுது' என்ற பொருளுடைய சொற்களின் மூலம் ஆகும். தமிழில் எழுது என்பதற்குப் பூசு, எழுத்துக்களை எழுது என்ற இரு பொருளை மேலே காட்டினோம். சமஸ்கிருதத்தில் இந்த இரு பொருளும் சுட்டும் வேர்ச்சொற்கள் லிக் (எழுது) லிப் பூசு என்பவை ஆகும் தமிழைப் போலவே அங்கும் அவை தொடர்புடையன. எழுதுதல் (லேகனம்), பூசுதல் (லேபனம்) என்ற சொற்களில் அவை பொருள் வேறுபாடு காட்டினாலும், லிபி (எழுது முறை) என்ற சொல் அவற்றை மீட்டும் இணைக்கிறது.

தமிழ் எழுது, வரை ஆகிய இரண்டுசொற்களும்தெலுங்கில் வரயு, வரசு, வ்ராயு, வ்ராசு, ராயு, ராசு என்றும். இவற்றுடன் லத்தீன் லித்தோரா என்பதையும் ஆங்கிலம் ரைட் (பழய ஆங்கிலம் வ்ரீதே—முந்திய மூல வடிவம் வ்ரை தன்) என்பவற்றை ஒப்பிட்டால், அவற்றின் ஒலித் தொடர்பு விளங்கும். மிகப்பழைய சமஸ்கிருத அல்லது அரிய வடிவம் 'வ்ர்க்வெ' என்பதாகும். க்வ என்ற தொன்மூல எழுத்தே தமிழின் 'கசதப' நாலெழுத்துக்களாகவும், சமஸ்கிருதத்தில் க-ப ஆகவும், இலத்தீனில் கபத எழுத்துக்களாகவும் ஆங்கிலத்தில் க, த, த. எழுத்துக்களாகவும் மாறுவது இயல்பு.

### தனிச்சிறப்பு

ஆரிய, திராவிட மொழிகள் அனைத்திலும் காணும் இந்த வேர்ச் சொலலை யாரும் எளிதாக மூல ஆரியச் சொல்லென்றோ மூல திராவிடச் சொல்லென்றோ கூறிவிட முடியும். ஆனால் ஆரியர் எந்த நாட்டிலும் தமக்கென்று ஒரு எழுத்து முறையை வகுத்துக்கொண்டதில்லை இன்றுவரை. இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட, தனக்கெனத் தானே ஒரு தனிஒரு எழுத்து முறையுடைய ஆரிய இன மொழி எதுவுமே உலகில் கிடையாது.

இன்றைய வட இந்திய ஆரிய இனத் தாய்மொழிகள் யாவும் சமஸ்கிருதத்தினிடமிருந்தே எழுத்துக் கடன் வாங்கியுள்ளன. ஆனால் சமஸ்கிருதமோ அதைத்தமிழரிடமிருந்தும், நாகரிடமிருந்துமே கடன் வாங்கியுள்ளதை நாம் மேலே காட்டியுள்ளோம். இந்தியாவில் உருதும், அரிய மொழிகளிலேயே பாரசிக மொழியும் பிற இஸ்லாமிய உலகமொழிகளும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் நடுநிலக்கடலகப் பகுதியில் சுமெரியர் ஏலமியர் வழங்கிய எழுத்தையே மேற்கொண்டுள்ளனர். மேனாடுகளிலோ எல்லா மொழிகளின் எழுத்துக்களும் லத்தீன் எழுத்துக்கு லத்தின் எழுத்தும் அதற்கு மூலமான கிரேக்க எழுத்தும் அப்படியே நடு நிலக்கடலக இனத்தாரிடமிருந்து இரவல் பெற்றவைகளே.

இன்று தனக்கெனஒரு வரிவடிவ எழுத்து முறையுடைய ஒரே மனித உலக இனம் தமிழினமே.

### வளர்ச்சி

மனித இனம் முதலில் எழுத்தை எழுத்தாகவோ, எண்ணை எண்ணாகவோ கண்டு பிடித்துவிடவில்லை. ஒவ்வொரு சொல்லையும் படமாக எழுதினார். இந்நிலை இன்று வரை சீன மொழியில் தொடர்ந்துள்ளது. நாளடைவில் படம் எளிய உருவாகவும், கருத்துக் குறியீடாகவும் மாறிற்று. பட எழுத்தாகிய முதல் வரிவடிவம் இப்போது இரண்டாம்படியாக உரு எழுத்தாயிற்று. இது சொல்லின் முதல்அசையையும் முதல் ஒலியையும் குறித்தது இதுவே மூன்றாம் படி வரிவடிவாகிய நம் கால ஒலி எழுத்தாகியுள்ளது.

பட எழுத்துப் படியிலிருந்து உருவெழுத்து, ஒலியெழுத்து என் ஆகியவை வளர்ந்தவகைகளைக் காட்டும் இனங்கள் வரலாற்றில் நான்குதான் ஒன்று பண்டை எகிப்தியஇனம். மற்றொன்று சுமேரிய இனம், மூன்றாவது சிந்துவெளி இனம், நான்காவது சீன இனம் நான்குமே ஆரிய இனமல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

நான்குஇனங்களுமேமூவாயிர நாலாயிர ஆண்டுகளுக்கு முன்னிருந்தே பட எழுத்து, உருவெழுத்துப்படி கடந்து ஒலி எழுத்தை நோக்கிவந்து விட்டனர். உலகின் மற்ற இனங்களெல்லாம் எழுத்துக்களை அவர்களிடமிருந்தே பெற்றன.

நான்கு இனங்களின் முறைகளையும் வளர்ச்சிப் படிகளையும் உற்று நோக்கினால், அவை நான்கு தனி வளர்ச்சிகளல்ல, ஒரே இடத்தில் தொடங்கி, வளர்ச்சியிலும், உருவங்களிலும் வளர்ந்தவை என்பது தெளிவாகும்.

நான்கு இனங்களிலும் நடு இனம் சிந்துவெளி இனமே யாகும்.

### ஆதாரங்கள்

சிந்துவெளியினத்தின் எழுத்துக்களை அடையாள மறிந்து மொழியை இன்றும் நாம் உறுதியிட முடியவில்லை. அது தமிழினத்தின் மொழி என்றே உலக அறிஞர் பொதுவாகக் கருதியுள்ளனர். ஆனால், அது முடிவுறும்வரை அதன் எழுத்து முறை எவ்வெவ்வினதது என்று காணவும் காத்திருக்க வேண்டியதில்லை; இந்தியாவிலுள்ள நாகரீக இனங்கள் இரண்டே, ஆரிய இனம், திராவிட இனம் ஆகியவை.

இந்தியாவில் எழுத்துருவாக்கிய இனம் ஆரிய இனம் அல்ல என்பதைக் கீழ்க்காட்டும் செய்திகள் உறுதியாகக் காட்டும்.

i உலகெங்கும்ஆரியர்கள் இன்றுவரை தமக்கென எழுத்துருவாக்கவில்லை. எழுத்துருவாக்கிய எகிப்திய சுமெரிய சீன இனங்கள் மூன்றும் ஆரியரல்லாத இனங்களே.

ii எழுத்துருவாக்கிய நான்கு இனங்களுள்ளும் சீன இனம் பட எழுத்து உரு எழுத்துக் கடந்து என்றும் முன்னேறவில்லை, எகிப்திய, சுமெரிய இனங்கள் உள்விட்டு, இன்றைய மேலை உலகம், இஸ்லாமிய உலகம் மூவாயிரம் ஆண்டுகட்குமுன் இருந்த எழுத்து முறை

(14-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

'புதுமைக்கு வெளுப்பவன், பறை தட்டி வெளுப்பான்' என்பது பழமொழி. இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கமும், ஏனைய சங்கங்களைப்போல மேள தாளங்களோடு தான் ஆரம்பிக்கப்பட்டது. உருப்படியாக சில செயல்களைச் செய்து முடித்ததும் உண்மை தான். மட்டக்களப்பில் ஒரு தமிழ் விழா நடத்தினார்கள்; சிறுகதைப் போட்டி ஒன்று அகில இலங்கை ரீதியில் நடாத்தி, போட்டிக் கதைகள்' என்றொரு சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டார்கள்! 'இலங்கை எழுத்தாளன் என்றொரு பத்திரிகையை நான்கைந்து இதழ்கள் வெளியிட்டார்கள்.

அவ்வளவுதான். ஆட்கள் போன இடமுமில்லை! சங்கம் இருக்கின்ற திசையையும் காணோம். சில நூறு அங்கத்தவர்கள் இருந்த போதிலும் ஒரு சங்கத்தை இயக்குபவர்கள் ஒரு சிலர் தாம். அவர்களுக்கும் எவ்வளவோ சிக்கல்; பிரச்சனைகள் இருக்கலாம். எனினும், ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தைத் தூங்கவிட விடுவது ஏற்றதாகாது.

## இலக்கிய உலகு

-"வேதாளம்"-

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருக்குச் சுகவீனம்; துணைத் தலைவர் க. வே க்குக் கண் குத்தும், கபால இடியும், நீங்கள் ஏதாவது செய்யக் கூடாதா?' என்று கேட்டால், 'கொஞ்சமும் நேரமில்லை. அரசாங்கப் பாடநூற் குழுவில் நானுமொருவன். போய் வரத்தான் நேரம் சரி!' என்கிறார். செயலாளர் தேவன்—யாழ்ப்பாணத்திற்கு. ஒரு ஐந்தாறு நாடகங்களோடு நடிகர்களோடும் அகில உலகச் சுற்றுப் பயணம் போவது எப்படி என்ற சிந்தனை. சிற்பி ஐயாவிற்கு 'கலைச் செல்வி'யைக் கரை சேர்ப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்ற கவலை. வரதருக்குப் புதுமையாக என்ன செய்து, ஐந்தாறு ஆயிரத்தை 'இழக்கலாம் என்று சதா யோசனை. செயற்குழு அங்கத்தவர்களில் பலருக்கு பட்டதாரிகள் ஆவதற்காக இரவும் பகலும் படிப்பு. பகலில் படிப்பிக்கக் கல்லூரிகளுக்கும், மாலையில் படிப்பதற்கு அக்கடமிகளுக்கும் ஓடுகிறார்கள்.

இந்நிலையில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் உருப்பட்டால் போலத் தான்.

வளர்த்துவிட்ட கன்னியைத் தக்கவர்களிடம் ஒப்படைப்பதுதான் நல்லது.

வேல் படை மருந்து
வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை
தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட
க்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்
முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும்
ஓர் சிறந்த களிம்பு.
விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு
தயாரிப்பவர்கள்:
S. P. S. ஜெயம் அன் கோ.,
மதுரை.
இலங்கையில் சோல் ஏஜண்ட்:
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 மே மாதம் 23-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# விலை வாசிகள் ஏற்றம்

தினே தினே சமான் விலைகள் விஷம்போல ஏறுகின்றன. அதற்கேற்ப வாழ்க்கைச் செலவும் உயருகிறது. இந்த பயங்கர நிலையைக்கண்டு அரசாங்கப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். விலைவாசிகளின் திடீர் ஏற்றத்தால் குடும்பச் செலவுகளை நடத்த முடியாமல் அல்லல்படும் ஏழைமக்களின் கண்ணீர் மக்கள் பிரதிநிதிகளின் உள்ளத்தை உருக்கியிருப்பது விந்தையன்று.

1960-ம் ஆண்டில் தொடங்கிய விலைவாசி ஏற்றம் இதுவரை என்றுமே குறைந்ததில்லை. தொடர்ந்து ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. விலைகளைக் கட்டுப்படுத்த முன்னுள் அரசாங்கமும் முயற்சிகளைச் செய்தது. பயன் ஏற்படவில்லை. திட்டமான நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதுதான் காரணம். அதன் விளைவு ஏழைகளுக்கு எட்டாத உயரத்தில் விலைவாசிகள் சிறகுகட்டிப் பறப்பதுதான்.

இன்று சில அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கே கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குழந்தைகளின் முக்கிய பாலுணவுகளில் ஒன்று—நெஸ்ப்ரே மாவு. அது இன்று கடைகளிற் கிடைப்பதில்லை. ஏனைய பாலுணவுகளின் விலைகளும் குதிரைவிலை யானைவிலையாகிவிட்டன. இதனுல் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டிருப்பதாகப் பெற்றேர் பலர் பிரதமரிடம் முறையிட்டுள்ளனர்.

பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பொருட்களின் விலைகள் ஏழைகள் வாங்கமுடியாத அளவுக்கு உயர்ந்துவிட்டன. காய்கறி மீன் முதலியவற்றின் விலைகளும் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டன. இறக்குமதிச் சாமான்களின் விலை ஏறும்போது உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலைகளும் கூடுகின்றன. இதனுல் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் ஏழைமக்களே. விலைவாசி ஏற்றத்திற்கேற்ப அவர்களின் சம்பளமோ வருமானமோ கூடுவதில்லையே.

தேர்தலுக்கு முன்பிருந்ததைவிட தேர்தற் சமயத்தில் விலைவாசிகள் ஏறி நின்றன. இன்று அதைவிட அதிகம். நிலைமை படுமோசமாக மாறியுள்ளது. தேசிய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியதும் விலைவாசிகள் ஓரளவு குறைவதாகத் தென்பட்டன. ஆனுல் மீண்டும் வேதாளம் முருங்கைமரம் ஏறிக்கொண்டது.

முன்னுள் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு விலைவாசி ஏற்றமும் ஒரு காரணம். புதிய அரசாங்கம் விலைவாசிகளைக் குறைத்துவிடுமென மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆட்சிக்குவந்து ஒரே மாதத்தில் விலைவாசிகளைக் குறைத்துவிடுவோம் என்று ஐ. தே. கட்சி மேடைகளில் வாக்குறுதிகளும் வழங்கப்பட்டன. விலைவாசிகளைக் குறைக்க தேசிய அரசாங்கத்துக்கு அவகாசம் போதாது என்பது உண்மையே. அதனைத் திடீரெனச் செய்யவும் முடியாது. படிப்படியாகவே செய்யவேண்டும். அதற்காகத் தேசிய அரசாங்கத்தைக் கண்டிப்பதில் பயனில்லை.

ஆனுல், விலைவாசிகளைக் குறைக்க முடியாவிட்டாலும் தேர்தலுக்குப்பின்னர் அவை மென்மேலும் ஏறிக்கொண்டிருப்பதையாவது தடுத்து நிறுத்தியிருக்கலாமல்லவா என்று மக்கள் கேட்கின்றனர். இதற்கு அரசாங்கம் பதில் கூறவேண்டும். புதிய அரசாங்கத்தால் நிவாரணம் கிடைக்குமென்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு. அந்த நம்பிக்கை வீண்போகக் கூடாது. அவர்கள் கள்ளச்சந்தைக்காரர்களினதும், பதுக்கல் பேர்வழிகளினதும், கொள்ளைலாபக்காரர்களினதும் தயவில் வாழ அனுமதிக்கக்கூடாது.

விலைவாசி ஏற்றத்துக்குப் பதுக்கல், கள்ளச்சந்தை, சாமான் தட்டுப்பாடு, வெளிநாட்டு ஆஸ்தியின் வீழ்ச்சி, துறைமுக நெருக்கடி முதலிய பல காரணங்கள் கூறப்படுகின்றன.

இக்காரணங்கள் நீக்கப்படவேண்டும். அதற்கான தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறதா? கள்ளச்சந்தையை ஒழிக்கவேண்டுமென்பதில் இருவித கருத்துக்கள் கிடையா. பதுக்கப்பட்ட சாமான்களை வெளியில் கொண்டுவர அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளை மக்கள் அறிய விரும்புகின்றனர்.

நமது வெளிநாட்டு ஆஸ்தி மிகக் குறைவுதான் என்றுலும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யமுடியாத அளவுக்கு ஆஸ்தி படுமோசமாக வீழ்ச்சியடையவில்லையே! 'வெளிநாட்டு உதவி கிடைக்கப்போகிறது அதுவரை பொறுத்திருங்கள்!' என்று சமாதானம் கூறப்படுகிறது. இந்தச் சமாதானத்தில் மக்கள் திருப்தி அடையப் போவதில்லை. காரணம் அது தூரத்துப் பச்சையாக இருப்பதுதான். அது என்று வருமோ? அதுவரை என்ன செய்வது என்று மக்கள் கேட்கின்றனர்.

துறைமுகத்தில் இறக்குமதியைத் துரிதப்படுத்த தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பு தேவை. இது ஒரு தேசியப் பிரச்சினை என்ற அடிப்படையில் அவற்றின் ஒத்துழைப்பைப்பெற முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.

அதே வேளையில் உள்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்க பல பெரிய முயற்சிகள் செய்யப்படவேண்டும். அதற்குத் தமிழ்பேசும் மக்களின் பூரண ஒத்துழைப்பு கிடைக்குமென்பதில் ஐயமில்லை. இந்நாட்டில போதிய நிலம் உண்டு—அளவுகடந்த ஆட் பலமும் உண்டு. இவ்விரண்டையும் திட்டமிட்டுச் செயற்படுத்தினுல் நம் கையே நமக்கு உணவளிக்கும்.

விலைவாசி ஏற்றத்தையும் மக்களின் கஷ்டத்தையும் தத்தம் கட்சிகளைப் பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி செய்யுமாயின், அது மக்கள்—விரோதச் செயலாகவே கருதப்படும். இது கட்சிப் பிரச்சினையன்று. விலைவாசிகளைக் குறைப்பதற்காக ஆட்சியாளருக்கு உதவி புரிவதே எதிர்க்கட்சிகளின் தவிர்க்கமுடியாத கடமை.

விலைவாசிகளைக் குறைக்க ஓரிரு அமைச்சர்களின் முயற்சி போதாது. முழு அமைச்சர் அவையும் கூட்டாகப் பிரமாண்டமான முயற்சிகளைச் செய்யவேண்டும். முதலில் பொருட்களின் விநியோகத்தைச் சீர்படுத்த வேண்டியது அவசியமாகும்.

ஆங்காங்கு 'நியாயவிலைக் கடைகளைத்' திறந்து குறைந்த விலைக்கு அத்தியாவசியப் பொருட்களை விற்பனவு செய்ய ஏற்பாடு செய்யலாம். இந்தியாவில் 'நியாயவிலைக் கடை' திட்டம் பயனளித்துள்ளது. கூட்டுறவுக் கடைகள் ஏழைமக்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. அவற்றில் ஊழல் அதிகம் என்பது உண்மையே. ஊழல்களை ஒழிப்பதற்குப் பதிலாக அக் கடைகளையே [illegible] பொருட்களின் விநியோகம் சீர்படுத்தலன்றி வேறு எந்த நடவடிக்கையும் பயனளிக்காது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# தமிழ் மக்கள் வரலாற்றில் பொன்னம்பலத்தின் இடம்

## நாளையசந்ததியின் தீர்ப்பு என்ன?

சுதந்திரன் அரசியல் நிருபர்

பொன்னம்பலம் கட்சி அத்தி பூர்த்தாப் போல் இருபது வருடங்களின் பின்னர் தொடர்ச்சியான மூன்று நாள் கூட்டம் ஒன்றை நடாத்தி முடித்துள்ளார்கள். இம்மூன்று நாள் கூட்டத்திற்கு மாநாடுஎன்ற பெயரைச் சூட்டி மாநாட்டின் பெயருக்கும் சிலர் மாசுகற்பித்துள்ளார்கள். மாநாடு என்ற பொது சம்பிரதாயத்திற்கு ஏற்ப நிகழ்ச்சிகள் ஏதாவது நடைபெற்றதாகத் தெரியவில்லை.

எந்த அரசியற் கட்சியும் பொதுச்சபைக் கூட்டத்தை முதலில் நடாத்தி பல பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து சில தீர்மானங்களை எடுத்து அவற்றை மாநாட்டில் மக்களுக்கும் பொது உறுப்பினருக்கும் அறிவிப்பது மரபு.

ஆனுல், பொன்னம்பலம் கட்சியின் மாநாட்டிலோ மாநாடுகள் முடிவுற்ற பின்னர் பொதுச்சபை என்ற பெயரில் சிலர் கூடினுர்கள். இது மாநாட்டு மரபு முறைக்கு மறுபட்டதாகும். எனவே தான் நடைபெற்றது மாநாடு அல்ல தொடர்ச்சியான மூன்று நாள் கூட்டம் என்று கூறுகிறேம்.

### பதவிப் போட்டி

பொன்னம்பலம் கட்சி புதுப்பலம் பெற்று விட்டது என்றும், திரு. பொன்னம்பலம் ஆயுட்காலத் தலைவர் பதவியை உதறி எறிந்துவிட்டு பாராளுமன்றக்குழுத் தலைவராக மட்டுமே பணியாற்றுவார் என்றும் பலமாகப் பேசப்பட்டது ஆனுல் ஆயுட்காலத்தலைவர் தானே என்பதைமீண்டும் நிரூபித்துவிட்டார் திரு. பொன்னம்பலம்.

இதனுல் பலர் மனக்கசப்பும் ஏமாற்றமும் அடைந்திருக்கிறுர்கள். உண்மையில் திரு. பொன்பலம் ஆயுட்காலத்தலைவர் பதவியைத் துறக்க விரும்பியிருந்தார். ஆனுல் அவரின் பழம்பெரும் தாசர்களே அதற்கு மறுப்புத் தெரிவித்தார்களாம். திரு. சிவசிதம்பரம் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்படுவதை இந்தப்பழம்பெரும் பக்தர்கள் மூமூச்சுடன் எதிர்த்தார்களாம். அவரின் கடந்தகால அரசியல் வாழ்வு முறை திருப்தி கொடுப்பதாயில்லை யென்றும், சில சமயங்களில் அவர் கட்சிக்கு காலைவாரலாம் என்றும் எடுத்து காட்டினுர்களாம்.

இந்த முடிவைக் கேட்டு வெறுப்புற்றவர்களும் உண்டு. இதனுல் பலர் மாநாட்டுநிகழ்ச்சிகளில் இருந்து ஒதுங்கவும் முற்பட்டார்களாம். முடிவில் செயலாளர் பதவி காலியாக இருந்தது என்றும் மூன்றும் நாள் பலரது வற்புறுத்தலின் பேரிலேயே அப்பதவியை திரு. சிவசிதம்பரம் பொறுப்பேற்றுராம்.

### வாலிப முன்னணியிலும் போட்டி

பொன்னம்பலம் கட்சியின் வாலிப முன்னணியில் திரு. பொன்னம்பலத்திற்கு அக்கறையில்லை. இதன் தலைவராக திரு. மு. சிவசிதம்பரத்தைத் தெரிவு செய்யலாம் என்ற அபிப்பிராயம் நிலாவியபொழுது அப்பதவி தமது தரத்திற்குக் குறைவானதுஎன்று ஏற்க மறுத்துவிட்டராம் அவர். ஆனுல் முன்னணியின் தலைவராக ஒரு பாராளுமன்ற உறுப்பினரே தெரிவு செய்யப்படவேண்டும்என்று திரு.பொன்னம்பலம் விரும்பினுராம். இதற்குக் காரணம் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட ஒரு வாலிபர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதை திரு. பொன்னம்பலம் விரும்பததே காரணம் என்று தெரிகிறது. அவரின் போக்கில் திரு. பொன்னம்பலத்திற்கு நம்பிக்கையில்லாத காரணத்தினுல் வவுனியா சிவசிதம்பரம் வாலிப முன்னணித் தலைவரானுர்.

### அகில இலங்கை ஏன்?

அகில இலங்கைக் கட்சியென்ற பெயரைப் பூண்ட இக்கட்சியின் மாநாட்டுக்கு மன்னுர், திருகோணமலை, மட்டக்களப்பு, மலைநாடு ஆகிய இடங்களிலிருந்து பெயருக்குத்தானும் ஒருவர் கலந்து கொள்ளவில்லையாம். மலைநாட்டிலிருந்து வர இருந்த திரு. தொண்டமானும் கடைசி நேரத்தில் காலைவாரிவிட்டாராம். இந்த நிலையில் பொன்னம்பலம் கட்சி 'அகில இலங்கை' என்ற நாமத்தைப் பூண்டிருப்பது சரியா என்ற கேள்வியும் தோன்றவே செய்கிறது. இதற்கு உள்ள ஒரே வழி பெயரை மாற்றுவது தான்.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சி தனது பெயரைமாற்ற வேண்டுமென்று திரு.பொன்னம்பலம் பேசியிருக்கிறுர். அதே நேரத்தில் சமஷ்டி அரசியல் என்ற பாதை இருட்டு வழியென்றும், ஆகவே அக் கொள்கையையும் மாற்ற வேண்டும் என்றும் பேசியிருக்கிறுர்கள். சுருங்கக் கூறின் திரு பொன்னம்பலமும் அவர் கட்சியும் தமிழரசுக் கட்சியைக் கலைக்கும்படி அறிவுரை கூறியிருக்கிறுர்கள்.

### கட்சியை யார் கலைக்க வேண்டும்?

குறிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ளவர்களில் ஒரு சிலரின் ஆதரவை மட்டும் கொண்ட கட்சி கேவலம் அகில இலங்கை என்ற பெயரைப் பூண்டிருப்பது. முதலில் அவர்களே பெயரை மாற்ற வேண்டும். கண்ணுடி வீட்டில் இருப்பவன் கல்லெறிவது போன்று பொன்னம்பலம் கட்சி தமிழரசுக் கட்சிக்குப் புத்திகூறி அக்கட்சியைக் கலையுங்கள் என்கிறது.

திரு. பொன்னம்பலத்தின் பேச்சில் தெரிவிக்கப்பட்ட கருத்தின்படி கட்சியைக் கலைக்க வேண்டியவர் திரு. பொன்னம்பலமேதான், காரணம், அன்றும் இன்றும் ஒற்றையாட்சி அமைப்பு முறையை ஆதரிப்பவர்கள் நாங்கள் என்று கூறியிருக்கிறுர் திரு. பொன்னம்பலம்.

ஒற்றையாட்சி முறையை ஆதரிப்பவர்கள் தனியொரு இனத்தின் பெயரில் ஏன் கட்சி வைத்திருக்க வேண்டும். சோல்பரித் திட்டம் அமுல் நடாத்தப்பட்ட அன்றே கட்சியைக் கலைத்துவிட்டு தேசிய அடிப்படையில் அல்லவா கட்சி அமைத்திருக்க வேண்டும்.

இது திரு. பொன்னம்பலத்திற்கு நன்கு தெரியும். தேசிய அடிப்படையில் கட்சியொன்றைத் தோற்றுவித்திருந்தால் திரு. பொன்னம்பலத்திற்கு தலைமைப் பதவி கிட்டியிருக்காதே. ஏதோ ஒன்றிற்கு தலைவர் என்று கூறிக் கொள்ளாமல் திரு. பொன்னம்பலத்தால் சும்மாயிருக்கமுடியாது. அதற்காகவேதான் இன்றும் கட்சி வைத்திருக்கிறுர் அவர்.

### புதுப்பலம் உண்டா?

இன்று பொன்னம்பலம் கட்சி புதுப்பலம் பெற்று வளர்ந்து வருவதாகவும் பேசினுர்களாம். அப்படிப் புதுப் 'பலம்' எதுவும் பெற்றிருப்பதாக அரசியல் நோக்கர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இருப்பது ஒரே ஒரு 'பலம்'. அந்தப் 'பலம்' என்றும் அக்கட்சியில் இருக்கும். காரணம் அவரேதான் கட்சி கட்சியேதான் அவர்.

பொதுத் தேர்லில் பொன்னம்பலம் கட்சியில் பெயரில் மூவர் வெற்றி பெற்றது என்னவோ உண்மைதான். ஆனுல் இது பொன்னம்பலம் கட்சியின் வெற்றியா?

வவுனியாத் தொகுதியைப் பொறுத்த வரையில் திரு. சிவசிதம்பரம் 1960-ம் ஆண்டு எப்படி வெற்றி பெற்றுர்? பொன்னம்பலம் கட்சியின் வேட்பாளராகவா? இல்லை. இம்முறையும் திரு. சிவசிதம்பரம் சுயேச்சையாக நின்றிருந்தாலும் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பார். அதே போல் திரு. மு. சிவசிதம்பரமும் சுயேச்சையாகப் போட்டியிட்டால் மேலும் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்க முடியும். எனவே இவர்கள் இருவரினதும் வெற்றி பொன்னம்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசார் தனிச் சிங்களத்தை ஏற்ருர்கள் என்பதை நிரூபிக்க முடியுமா?

## அப்படிக் கூறுபவர்களே அன்று தனிச் சிங்களத்தை ஏற்ருர்கள்

## இ. த. அ. க. கிளைச் செயலாளர் அறிக்கை

'தமிழரசுக்கட்சி சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொண்டு விட்டதாக நிரூபிக்க முடியுமா?' என்று இலங்கைத் தமிழரசுக்கட்சிக் கொழும்புக் கிளைச் செயலாளர் பகிரங்கமாகக் கேட்கிருர். தமிழரசுக்கட்சி தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக்கொண்டதாக உண்மையைப் புரியாது திரித்துக்கூறுபவர்களே தனிச்சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கடிதம் எழுதினுர்கள் என்றும் அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு:-

தனிச்சிங்களச் சட்டத்தை தமிழ்மக்கள் ஏற்பதற்குத் தயார் செய்யவேண்டும் என்று கடிதம் எழுதிய திரு. பொன்னம்பலம் ஆயுட் காலத் தலைவராக விளங்கும் காங்கிரசே முதல் முதலாகத் தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட தமிழ்கட்சி என்பது உலகறிந்த விடயம். திரு. பொன்னம்பலம் எழுதிய கடிதத்தின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் மக்களிடையேபரவியுள்ளது. இத்தனைக்கும் பிறகு தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்காத கட்சி தமிழ் காங்கிரஸ் என்று கூறுவது பால் கறுப்பு நிறம் என்று கூறுவதைப் போன்றது.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின்போது காந்தி அடிகள் பல இடைக்கால ஒப்பந்தங்களைச் செய்தார். எனவே காந்தியடிகள் வெள்ளையர் ஆதிக்கத்தை ஏற்ருர் என்று கூறுவது அறியாமை. அதே போலத்தான் தமிழரசுக்கட்சியின் இடைக்கால ஒப்பந்தங்களும். இவற்றை விளங்காது தமிழரசுக் கட்சி தனது கொள்கையைக் கைவிட்டு விட்டது என்று கூறுவது தவருகும்.

திரு. திருச்செல்வம்தேசிய அரசாங்கம் உத்தியோக மொழிச் சட்டத்தை மாற்ருது, தமிழ்மொழிச்சட்டம் மூலம் தமிழ்மொழி உரிமைகளைக் கொடுக்கும் என்று கூறியதன் நுணுக்கத்தை சிலர் விளங்கிக்கொள்ளச் சிரமப்படலாம். ஆனல் திரு. திருச்செல்வம் கூறியதை விளங்காது தமிழரசுக் கட்சியினர் தனிச் சிங்களத்தை ஏற்றுவிட்டனர் என்று திரித்துக்கூறும் அரசியல்வாதிகள் தமிழ்பேசும் மக்களிடையே தோன்றியது எமது இனத்திற்கு ஒரு சாபக்கேடு என்றுதான் கூறவேண்டும்.

எமது வேண்டுகோள் சட்ட நுணுக்கம் விளங்காதோர் செய்திகளைத் திரிப்பதை நிறுத்திவிட்டு திரு. திருச்செல்வத்திடம் சென்று அல்லது சட்டக்கல்லூரி சென்று சட்ட நுணுக்கங்களை கற்றபின் இந்த விடயங்களைப்பற்றிப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் கூறியவையாவும் பொய்யாகிவிடுமே என்ற காரணத்திற்காகத் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைக்கும் உரிமைகளைக் கிடைக்காமல் செய்ய எடுக்கும் முயற்சிகளை தயவுசெய்து கைவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிரேம்.

'தமிழரசுக் கட்சியினர் தனிச்சிங்களச்சட்டத்தை ஏற்றுக் கொள்கிருர்கள்!' என்று திட்டவட்டமாகக் கூறியதா—ஒரு ஆதாரமாவது காட்டும்படி எதிர்ப்பாளர்களைக் கேட்கிரேம். அப்படி ஆதாரம் காட்ட முடியாவிட்டால் தயவுசெய்து மௌனமாக இருங்கள்.

---

### தமிழ் மக்கள்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பலம் கட்சியின் வெற்றியல்ல.

எஞ்சி நிற்பவர் திரு' பொன்னம்பலம். அவரின் வெற்றி கட்சியின் வெற்றியா அல்லது தனிப்பட்ட வெற்றியா அதுவும் இன்றேல் வேறு ஏதாவது சக்திகளின் வெற்றியா? இந்த நிலையில் பொன்னம்பலம் கட்சியில் வெற்றி பெற்றவர்கள் யார்? யாருமில்லை. இதுதான் பொன்னம்பலம் கட்சியின் வெற்றி

#### தனிக் கட்சி ஒப்பந்தம்

திரு. பொன்னம்பலம் தனது பேச்சில் புதிதாக எதையும் சொல்லாவிட்டாலும் ஒன்றை மட்டும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர். 'தனிக் கட்சி ஒப்பந்தங்கள் தமிழுக்கு தக்க அந்தஸ்து தருவது அசாத்தியம்'. இக் கருத்து சரியா பிழையா என்பதல்ல எமது ஆராய்ச்சி. திரு. பொன்னம்பலம் பொது மேடைகளில் கூறும் பொய்யை தனது வாயாலே எடுத்துக் காட்டிமறுத்திருக்கிருர்.

தமிழரசுக் கட்சிக்கும் ஐ. தே. கட்சிக்குமிடையில் ஒப்பந்தமில்லையென்றும் தமிழரசுக் கட்சியினர் பொதுமக்களை ஏமாற்றுகிருர்கள் என்று கூறிய திரு. பொன்னம்பலம் தனது சொற்களாலேயே ஒப்பந்தம் ஒன்று இருப்பதைப் பகிரங்கமாக ஏற்றுள்ளார். அப்படியில்லையென்றல் 'தனிக் கட்சி ஒப்பந்தங்கள்' என்ற பேச்சு எதற்காக வரவேண்டும்.

#### வட்ட மேசை மாநாடு

ஒற்றையாட்சியிலேயே தமிழுக்கு உரிய இடம் கிடைக்கும் என்றும் அதற்கு வட்ட மேசை மாநாடு கூட்ட வேண்டுமென்றும் திரு பொன்னம்பலம் கூறியிருக்கிருர். இன்று பிரச்சினைகள் மலிந்திருப்பது ஒற்றையாட்சியில். பிரச்சினைகள் தோன்றியதே ஒற்றையாட்சியில். எனவே பிரச்சினைகளுக்கு நிரந்தர பரிகாரம் ஒற்றையாட்சியின் மாற்றமே. இது தவறு என்றல் ஒற்றையாட்சியில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பது ஏன்?

மொழிப் பிரச்சினைக்கு வட்ட மேசை மாநாடு வேண்டுமென்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த ஐ. தே. கட்சியே தனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டுவிட்டது. இந்த நேரத்தில் வட்ட மேசை மாநாட்டை வரவேற்பவர்கள் யார்?

திரு. பொன்னம்பலம் இவற்றை யெல்லாம் உணர்ந்து கொண்டிருக்கிருர். ஐ. தே. கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் உடன்பாடு இருப்பதையும் அதன் சாராம்சம் என்ன என்பதையும் தெரிந்துகொண்ட பின்னரே திரு. பொன்னம்பலம் அரியணை உரையை ஆதரித்தாராம். எனவே திரு. பொன்னம்பலம் பேசுவது அனைத்தும் பொய்யுரை என்பது புலனுகிறது.

#### வரலாறு

திரு. பொன்னம்பலத்தின் ஒரே நோக்கம் தமிழ் இனத்திற்குச் சாதகமான காரியங்கள் தமிழரசரால் நடக்கக்கூடாது என்பது தான். இதற்காக எத்தகைய துரோகத்தையும் செய்யச் சித்தமாக இருக்கிருர். வேண்டுமென்றே பிரச்சினைகளைக் குழப்பியடித்து மோதுகிருர்.

### மத்திய வங்கி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டின் கீழ் புதிய தொழிற் சங்கமொன்றை அமைத்துள்ளார்கள். இச் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப்பணிமனையில் திரு மா. க. கனகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தைச் சேர்ந்த திரு. செ. கோடீசுவரன், வே. தங்கவேலு ஆகியோரும் கூட்டத்தில் மொழி வழித் தொழிற் சங்கத்தின் கோட்பாடுகளை எடுத்து விளக்கி, சங்கத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகள் செய்வதாகவும் கூறினுர்கள்.

சங்கத்தின் தலைவராக திரு. த. நவரத்தினசிங்கமும், துணைத் தலைவராக திரு. கே. காசிப்பிள்ளையும். செயலாளராக திரு. வே. ஜோசப் அலர்களும், பொருளாளராக திரு. கே. மாலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். ஆட்சிக் குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

'மத்திய வங்கித் தமிழ் பேசும் ஊழியர் சங்கம்' என்ற பெயரில் ஒரு தொழிற் சங்கமாக மிக விரைவில் இச் சங்கம் பதிவு செய்யப்படுமென்றும் அதற்கான முயற்சியில் திரு. செ. கோடீசுவரன் ஈடுபட்டிப்பதாகவும் அறியப்படுகிறது.

---

### வருமான வரிப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகையதவறு நிகழாவண்ணம் பார்த்துக் கொள்கிறேன்.'

இவற்றைப் பற்றி விரிவாக திரு. கா. பொ. இரத்தினம் நமது நிருபரிடம் கூறிய பின்னர் பின்வரும் வேண்டுகோளையும் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்துள்ளார்.

'எல்லாம் தமிழ் இயக்கத்தை தமிழ் மக்கள் எப்பொழுதும் கடைப்பிடிக்க வேண்டும். முதற்கடமையாக வருமானவரிசெலுத்துபவர்கள் மும்மொழிப்படிவங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்று தமிழில் நிரப்பியனுப்ப வேண்டும்.'

---

திரு. பொன்னம்பலத்தின் துரோகச் செயல்கள் அனைத்தும் நடுநிலைக் கண்கொண்டு தமிழினத்தின் வரலாற்றை எழுதும் பொழுது அந்த வரலாற்றில் இடம்பெறவே செய்யும். இந்த வரலாற்றை ஐம்பது அல்லது நூறுவருடங்களுக்குப்பின் படிக்கப்போகும்மாணவர்கள் 'அன்று பொன்னம்பலம் என்ற பெயரில் ஒரு துரோகி வாழ்ந்தார், அவரின் துரோகச் செயல்களினுல் தமிழினம் இழந்த உரிமைகளைப்பெற ஒரு சில ஆண்டுகள் கூடுதலாகச் செலவா[illegible] முடிவிற்கு நிச்சயம் [illegible]கள்.

---


நாற்றுக்கணக்கான

**வர்த்தக நண்பர்கள்**

ஆயிரக்கணக்கான

**வாடிக்கையாளர்கள்**

மீண்டும்

**விஜயஞ்செய்யுமாறு**

வற்புறுத்தியதால்

**அருத எண்ணெய்**

வேன்களை

**மட்டுநகருக்கு**

இவ்வாரம்

**அனுப்பிவைத்துள்ளோம்!**

எமது சோல் ஏஜண்ட்:

**மயில் கடை,**

**இல. 8, மெயின் வீதி, மட்டக்களப்பு.**

ஏனைய விற்பனையாளர்கள்

| மட்டக்களப்பு | கல்முனை | வாழைச்சேனை |
| --- | --- | --- |
| பரமேஸ்வரி ஸ்டோர்ஸ் இல. 1, திருமலை ரோட், சிவநடராசா ஸ்டோர்ஸ், (போன் : 319) 12, பஜார் வீதி. முருகன் ஸ்டோர்ஸ், 14, பஜார் வீதி. கணேசன் ஸ்டோர்ஸ், 13, மத்திய வீதி, | ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், சோதி ஸ்டோர்ஸ், கணேசன் ஸ்டோர்ஸ், ரஹிம் ஸ்டோர்ஸ், (சாய்ந்த மருது) | எம். எஸ். மீராசாய்பு, (பள்ளிவாசல் கட்டிடம்) பரமேஸ்வரி ஸ்டோர்ஸ், முருகன் ஸ்டோர்ஸ், |
| களுவாஞ்சிக்குடி | சம்மாந்துறை | ஏறுவூர் |
| வி. மார்க்கண்டு, ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், ரதி ஸ்டோர்ஸ், | கதீஜா நியூஸ் ஏஜன்ஸி | சிவநடராசா ஸ்டோர்ஸ், (போன் : 892) முருகன் ஸ்டோர்ஸ், 29·5, மெயின் வீதி, கிளை : செங்கலடி. |
| | காரைதீவு | கல்முனை |
| | முருகன் ஸ்டோர்ஸ், (1-ம் குறிச்சி) | டி. எம். மொஹிதீன் அப்துல்காதர் அவ பிரதர்ஸ் |

தயாரிப்பாளர்

**பி. எம். திசாநாயக்க,**

அருத எண்ணெய் தொழிலகம், கம்பளை. போன்: 454


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடு

இவ்வாரச் சிறுகதை

த. பரமலிங்கம்

இரவு—நடுநிசி.

புனித அந்தோனியார் தேவாலயக் கோபுரத்து மணி, ஒருதடவை ஒலித்து ஒரு மணி என்பதை உணர்த்தி ஓய்கிறது. ஆலயத்தின் எதிரே, வலது புறமாக காணப்படும் நகரசபையிலரால், கட்டப்பட்டு நகர வாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும், அழகிய இருமாடிக் கட்டடத்தின் பின்புறம்...

சிற்பிகளை வரிசைப் படுத்தியதைப்போல், தோன்றும் நகரசபையின் இதர தனித்தனி வீடுகளும், இருமாடி வீடுகளும் அழகிய காட்சியாக இரு விழிகளுக்கும்; அந்த மங்கலான இருளிலுங்கூட தோற்றமளித்தது.

எங்கும் இருள் சூழ்ந்து அமைதி குடிகொண்டவேளை! ஆங்காங்கு மின்சாரக் கம்பங்களில் மின்மினிப் பூச்சியைப் போல்,இலேசாக மிளிரும் ஒளிப்பிழம்புகள் அவ்விருளினில், சலனத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது...

எல்லா வீடுகளிலும், உச்ச நித்திரையை அடைந்த சிவன்கள் குறட்டை ஒலியால் ஆழ்நத நித்திரையென்பதை 'அறிகுறி'ப் படுத்தியவாறு, உயர்ந்த துயிலில் சடுகொண்டவேளை! அந்த வீடுகளில் எங்கோ ஒருபுறத்தில், தோன்றும் ஒரு வீட்டில் அமைதி இல்லாததற்கு காரணமாக மிளிர்ந்து கொண்டிருக்கும், மின்சார விளக்கின் ஒளி...?

அவ்வீட்டின் நடுமத்தியில் விரிக்கப்பட்டிருந்த படுக்கை மணிகளுடன் கூடிய கட்டிலில்.ஒரு உடல் நலனில்லாத சிவனை வளர்த்தியிருந்தது. அவள்தான் லூசியா! பஞ்சடைந்த கண்களும், மெலிந்த உடல்கட்டும், சுருங்கித் தொங்கும் தசைநார்களுமே அவளின் இன்றைய தோற்றம். தலைக்கேசத்தின் இடைக்கிடை தெரியும் வெள்ளைக் கேசங்களும் ஒருபுறம். லூசியா படுத்திருக்கும் கட்டிலைச் சூழ்ந்து அவளின் இனத்தவர்களில் ஒரு சிலரும், கணவனும் மகனும் ஏக்கம் கலந்தவர்களைப் போல் நின்று கொண்டிருக்கின்றனர்.

லூசியா தனது பஞ்சடைந்த கண்களால் ஒவ்வொருவரையும் கூர்ந்து நோக்குகிறாள். கணவனையும்கடந்து... சற்றில் மைக்கேலில்... பார்வை நிலைக்கிறது. ஆமாம்,அவளின் மகன்தான் மைக்கேல்.

மகனையும், கணவனையும் மாறி மாறி நோக்குகிறாள், 'என்...கணவன்தான்...மைக்கேலின் தந்தைதான்...எல்லாம் ஊருக்கு...ஆனால்...'

ஆவி பிரியப்போகும் நிலையிலுள்ள, லூசியாவின் எண்ணலைகள் வாயுவேகத்தில் கடந்தகால நினைவுகளை திரையோவியம் போன்று, தோன்றி மறைந்திடச் செய்கிறது...!

ஏறக்குறைய முப்பது, முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் லூசியா, எந்தவொரு இளமுள்ளத்தையும் இலகுவில் கவர்ந்திடும், அழகைப் பெற்று அலங்காரமாக வீதிவலம் வருவதைப் பார்க்கவே ஒரு கூட்டம் காத்து நிற்கும். பைங்கிளி போன்று சிவந்த அவள் மேனியும், குறுகுறுத்த மீன்விழிகளும்,தழுக்கெனப் பயிலும் நடையும் பார்ப்பவர் நெஞ்சை, ஈர்த்திடும் சக்தி வாய்ந்தவை. இத்தனை அழகு பொருந்திய லூசியாவை, தன்னில்லத்தரசியாக்கக் காத்துக் கிடந்தவர் பலர்.

இந்நிலையில்தான் லூசியாவின் தந்தை யோசேப்புக்கு தன் மகளை தங்கை லூர்த்தம்மாவின் மூத்த பொடியன், செபஸ்தியானுக்குக் கட்டிப் போட்டிட வேண்டுமென்ற, ஆவல் மேலோங்கத் தொடங்கியது. அதோடு அடுத்த வீட்டு அன்னம் மாக்காகூட, 'ஏண்டாம்பி, இன்னமும் வயது வந்த பெட்டையை வச்சுக் கொண்டிருக்கிறாய், காலா காலத்தில் எவனுகிலுமொருவனைப் பார்த்துக் கட்டிப் போட்டிடு...அப்ப தானுனக்குமொரு பாரம் குறைந்த மாதிரியிருச்சும்...' என்று சொன்னாள்.

யோசேப்புக்கு,சூட்டோடு சூடாக தனது கடைசிப் பெட்டையான லூசியாவுக்கும், கலியாணத்தை முடிச்சு வைத்தால் தனக்கும் கொஞ்சம் பாரங்குறைந்தது போலிருக்குமென்ற யோசனை தோன்றியது. அதற்காகத்தான், அடுத்த நாளே சில்லாலைக்குச்சென்று லூர்த்தம்மாவோடும், சம்மந்தி சந்தியாப்பிள்ளையோடுங்கூடி ஒரு முடிவை, ஏற்படுத்திவிட்டு வந்தார்.

இது விசயம், கொஞ்சம் கொஞ்சமாக ஊருத்துறை முற்றாகப் பரவி விட்டது. செபஸ்தியானுக்கு, கொழும்புத் துறைமுகத்தில் நல்ல வேலை. மாதம் எப்படியும் முன்னூறு, முன்னூற்றைறம்பது தேறும். அவனைப் பொறுத்த மட்டில், மற்றவர்கள்பார்த்துப் பொறாமை கொள்ளுமளவிற்கு; பெருமையாகத்தான் வாழ்ந்து வந்தான். அதற்க்கேற்றாப் போல், அவனுக்குக் கிடைவிருக்கும் வாழ்க்கைத் துணைவி லூசியா. கூறவும் வேண்டுமா, அவனின் மகிழ்ச்சியின் எல்லையை?

சாந்தமான பார்வையும், நல்ல குணமும், நலிந்த தோற்றமும், எளிதில் ஏமார்ந்து விடக்கூடிய சுபாவமுந்தான் அவளின் உடைமைகள் அதனால், அப்படிப் பட்டவர்கள் வாழ்க்கையை நேரான பாதையில், நிர்ணயிக்க முடியாதா என்ன?

மங்கி மிளிரும் ஒளி போன்று, தினங்கள் ஒன்றினை ஒன்று விழுங்கிக் கொண்டிருந்தன. லூசியாவுக்கும், செபஸ்தியானுக்கும் கலியாணம் முடிந்து ஆறுமாதங்களும், கடந்து விட்டன. அதற்கிடையில், பல தடவைகள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும், ரயிலில் பிரயாணம் செய்த செபஸ்தியானுக்கு அதில், போதும் போதுமென்றாகி விட்டது.

அதனால்தான், இப்போதெல்லாம் கொச்சிக்கடையில்...வீடொன்றெடுத்து லூசியாவைக் கூட்டிவைத்து வாழ்க்கையைப் போக்கினான். வாழ்க்கை நேரான பாதையில், சண்டை 'சச்சர'வற்று இனிது கழிந்தாலும் லூசியாவுக்குப் போதிய இன்பத்தை, அவனால் கொடுத்திட முடியவில்லை.

வருடங்கள் பல, மலர்களைப் போல மலர்ந்தும் நலிந்துங் கொண்டிருந்தன. செபஸ்தியானுக்கும், லூசியாவுக்கும் கல்யாணம் நடந்து ஐந்து வருடங்களைக் கடந்திட்டபோதும், மழலைப் பேச்சைக் கேட்க ஒன்றில்லை! அதை எண்ணும் போதெல்லாம், லூசியாவின் நெஞ்சம் நெகிழ்ந்துருகும். அவளின் இளமுள்ளத்தில், எண்ணற்ற கற்பனைகள் தோன்றி மறையும். சில சமயங்களில், அவளால் கட்டுப்படுத்த முடியாதநிலைகள்...;தாய்மை உணர்ச்சியின் தடுமாற்றம்.

தன் வேலைத்தலத்தில், தனது மனைவியின் ஊரைச் சேர்ந்தவன் — புதிதாக வேலைக்குச் சேர்ந்ததை அறிந்த செபஸ்தியான், அவனைச் சந்தித்துப் பேசி, ஏற்படுத்திய ஒரு முடிவை மனைவிக்குத் தெரிவிக்க அன்று வேளைக்கே வீடு திரும்பி விட்டான்.

வேலைக்குப் போய்வந்த, களைப்பை ஆற்றிக் கொண்ட செபஸ்தியான் 'இஞ்சேரும்...'என்று மனைவியை இலேசாக உசுப்புகிறான்.

'என்ன... ...' என்கிறாள் லூசியா. 'இஞ்சை கிட்டவாவன்...'ஏதோ இரகசியம்; அதில் அவசரம் மேலிடுகிறது.

'உ...ம்...ம்...ம்...' சொல்லுங்கோவன்...' வேலையில் விசனங் கொண்டவளால், இதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அது அவனுக்கு கோபத்தைக் கிழறுகிறது.

'சொன்னால்...' குறும்போடு கூடிய கோபத்தில், உரக்கக் கூறுகிறான்.

'ஆ...ஆ...சரி...இந்த மனிசனோடு பெரிய கரைச்சல்...' மற்றப் புலன்களையிழந்து, தஞ்சமடைகிறாள் கணவனின் விசாரணைக்குள்.

'உன்ரை, ஊரைச் சேந்த வனொருவன்... நான் வேலை செய்யிற இடத்திலை சேந்திருக்கிறான்...என்னமோ...ஆ...பெயர் பேதுருவாம்...!'

'என்ரை ஊரிலை புள்ளவனோ...அதுக்கென்னனையப்ப...'

'அதுக் கொண்டுமில்லை... நல்ல பொடியன் அவனெங்கையோ 'போடிங்கிலை' தங்கிறானும் அதுதான்...அவனுமொரு நல்ல இடமில்லாமல் தவிக்கிறான். அதோடு இஞ்சையும் நாங்கரெண்டு பேர்தான்...முன் வீட்டுத் துண்டு சும்மா கிடக்குது, அதையவனுக்குக் குடுத்திட்டா...எங்களுக்கும் வாடையும், உதவியுமாகப் போய் விடும் அதுதான்...'

'அதுக்கென்னை யென்ன கேக்கிறீங்க...'லூசியா சொன்னாள். நீண்ட ஒரு விசயத்தைக் கூறி, முடிப்பதற்கு இயலாத நிலையில்...கரையைக் காணாத தத்தளிப்பினூடே ஒரு தாவுகட்டை கிடைத்தது போலிருந்தது, லூசியாவின் பேச்சு.

'உனக்கேதும்... இடைஞ்சலில்லையே...'அழுத்தமாக ஒரு தடவை கேட்கிறான்.

'எனக்கொன்றுமில்லை... ஏதோ...அது உங்கட விருப்பம்...'சொல்லிக் கொண்டே, குசினியை நோக்கி நடக்கிறாள் லூசியா.

'அப்படியெண்டாச் சரி, நான் பார்த்துக் கொள்ளுறேன்...'தொடர் கதையின் முடிவை, திருப்தியுடன் அமைத்துவிட்ட எழுதாளனின் பாங்கு; சால்வைத் துண்டை யெடுத்துத் தோளிலேபோட்டுக்கொண்டு, 'விறந்தை'யை நோக்கி நடந்தான் செபஸ்தியான்!

பேதுருவும், செபஸ்தியான் வீட்டுக்கு வந்து மூன்று மாதங்களாகி விட்டன. ஆரம்ப நாட்களில் லூசியா, பேதுருவுடன் பழகிக் கொண்டதைப் பார்க்கிலும் நாட்கள் நகர நகர அதில் சிறு மாற்றமேற்பட்டு நிலை மோசமாகிக் கொண்டு தான் வந்தது. அதை யுணர்ந்த பேதுருவுக்கு, ஏதும் விபரீதம் ஏற்பட்டு விடுமோ...என்ற எண்ணம் அடிமனதில் தளிர் விட்டது.

அதிலிருந்து, தப்பித்துக் கொள்வதற்கு அவனால் இயன்ற முயற்சிகளைச் செய்தான். இந்நிலையில், ஒருவர் மாறி ஒருவருக்கு தொழிலிருப்பது முண்டு; செபஸ்தியானுக்கு, வேலையில்லாத நாட்களில் பேதுருவுக்கும் பேதுருவுக்கு, வேலையில்லாத நாட்களில் செபஸ்தியானுக்குமாக மாறி மாறி வரும்.

பேதுருவுக்கு, வேலையில்லாத வேளைகளில் வீட்டில் இருப்பதென்றால் பெரும் சிரமந்தான். —ஏனெனில் செபஸ்தியான் வீட்டிலில்லாத வேளைகளில் தானே, லூசியாவின் ஆட்சியெல்லாம் அதனால்தானோ; என்னவோ? வேலையில்லாத நாட்களில், வேறேதும் 'சாக்குப் போக்கு'க்கூறி நண்பர்களைச் சந்திக்கச் செல்வதாகப் போய் விடுவான்,பேதுரு இந்தச் 'சாக்குப் போககு'களும்தான் எத்தனை நாளுக்கு? இதெல்லாம்,லூசியாவுக்குப் பொறுமையைச் சோதிப்பது போலிருக்கும்.

அப்படியான, உணர்ச்சி வசப்பட்ட வேளைகளில் அவள் தன்னையே மறந்து, தானொரு குடும்பப் பெண்ணென்பதையும் மறந்துவிடுவாள். ஏன்...அதிகம்? தன் கற்புக்கு மாசேற்பட்டு விடும், என்பதையே அவளால் சிந்திக்க இயல்வதில்லையே...? பேதுருவும், எவ்வளவுதான் முயற்சித்தாலும் லூசியாவின், மருளும் விழிகள் அவனை வேல் கொண்டு, வதைப்பது போலிருக்கும் தாராவைப் போல, நடக்கும் போதில் அவளின் மெல்லிய இடையின் முறிவு; உலகிலுள்ள கலைகள் அத்தனையையும் முன்கொண்டு வந்து நிறுத்தி விடும். இருவிதழ் விரித்து, அவள் சிந்தும் புன்னகை முன்னே பேதுருவின், அமைதி, தலைதூக்க முடியவில்லை;பேதுருவைப்பார்த்து அவள் சிந்தும் ஒரு புன்னகையே பகர்ந்திடும் தேனினும் இனிய, கதையென்றால் கூறவும் வேண்டுமா...?

நாளடைவில், அவனின் ஆண்மை உணர்ச்சியும், இளமைத் துடிப்பும் லூசியாவைத் தேவலோகத்துத் தேவதையோ, என்று வியக்க வைத்தது. அவளின் மெருகான அழகில், பேதுருவுக்குப் பைத்தியமேபிடித்து விட்டது. லூசியாவிடம், இன்பத்தை அள்ளிப் பருகத் துடித்தான். அவளின், இன்பத்தாகத்துக்கு இனியவிருந்தாகி விட்டது, அவனின் மாற்றம்!

அன்று செபஸ்தியானுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏனெனில் ஊரவர் கண்களுக்கும், 'மலடன்' என்ற இழி வசைக்கும் தப்பித்து விட்டேன், என்ற மமதைதான் காரணம்.

—ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள் லூசியா!

எதிலும், நம்பிக்கையுள்ள செபஸ்தியானின் உள்ளம் ஏமாந்து விட்டது. ஏமாற்றி விட்டார்கள்! ஆனால்...அயலவர் ஏமாளிகளாகி விடுவார்களா? பேதுருவும், வேறொரு நல்ல இடம் கிடைத்திருப்பதாகக் சென்று விட்டான்.

ஊராரின், மனக்கண்களுக்கு இது பெரும் அதிர்ச்சியைத்தான் கொடுத்தது. ஆனால்... அது, வெளிசமற்ற விளக்கைப் போன்றுதானே அவர்களுக்கு ஊராரின் சந்தேகத்திற்கும், உழறல்களுக்கும் இடமளியாமல் தப்பி விட்டதோடு, கணவனின் சந்தேகத்திற்கும், இடமளிக்காது ஒரு விதமாகச் சமாளித்து விட்டாள் லூசியா. இலைக்குள் மறைந்த கனியாக, உண்மையை வெளியுலகிற்கு மறைத்திட்ட போதும் அவளுக்கு,உண்மை வெட்ட வெளிச்சமல்லவா?

குற்றமுள்ள நெஞ்சம்,குறுகுறுக்கத்தான் செய்தது. மைக்கேலைப் பற்றிச் சிந்திக்கும் போதெல்லாம், லூசியாவுக்குத் தலையை ஏதோ அழுத்திப் பிடிப்பது போலிருக்கும் இத்தனை பெரிய இன்னல்களையும், பொருட்படுத்தாமல் வருடம் பலவற்றைக் கழித்து விட்ட லூசியா, இன்று மரணப் படுக்கையில் கிடக்கிறாள். இனி, எழுந்துலாவ முடியாத விதி அவளுக்கு!

அத்தனை காலமாக அவளையும், பேதுருவையும் இறைவனையும் தவிர மற்றவர்களுக்குத் தெரியாத ஓர் உண்மையை, கூறிவிட வேண்டுமென்று நினைத்தாளோ...என்னவோ, சக்தியற்றுக் கிடந்தவள் இலேசாக எழுந்திருக்க முயற்சித்து; தலையை உயர்த்தியவளுக்கு...என்னவோ அவளை எழுந்திருக்க முடியாதவாறு, அமுக்கி விடுவது போன்ற உணர்வு முயற்சி தோல்வியுறவே, மீண்டும் படுக்கையில் சாய்கிறாள். காற்றடைக்கப்பட்ட 'சாக்குள்', காற்றுப் போய் நலிவது போன்ற விதம்...அவ்வேளை முன்னையகளை முகத்திலில்லை; முழுமதியில் முகில் குழைவது போல......

மறுகணம்!

'ஐயோ...' என்ற அபயக் குரலையடுத்து, சோககீதம் வாயைப் பிளக்கிறது. கூடியிருந்தவர்களின், 'ஒப்பாரி' தான் அது வாழ்க்கையில்... பெரும் தவறைப் புரிந்து அத்தவறின் சின்னமான மைக்கேலையிவ்வுலகில் விட்டு, விட்டு ஆவியாக மாறி விட்டாள் லூசியா!

தூரத்தில்...'டாண்... டாண்...டாண்...' என்று ஒற்றையும், இரட்டையுமாக மாறி மாறிப் புனித அந்தோனியார், ஆலயத்தில் மணி ஒலித்துக் கொண்டிருக்கிறது...

(யாவும் கற்பனை)

**சாவின் மடியில் தவறுகளின் நிழல்கள்! லூசியாவின் மரணப் படுக்கையில்—**
**வடுவாக நிற்கிறான், மகன் மைக்கேல்!—**
**குழந்தைக்கு ஆசைப்பட்ட லூசியா குழந்தை ஒன்றைப் பெற்றுக்கொள்கிறாள்!—**
**'இந்த வீட்டு வாரவள்'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் திராட்சைச் செய்கை

## அரசாங்க ஆதரவு கிடைத்தால் ஏற்றுமதி சாத்தியமாகும்

இந் நாட்டில் தென்னையும், தேயிலையும், இறப்பருமே பயிரிடலாம் என்று பலர் நம்பியிருந்தனர். இம் மூன்றும் இன்றேல் இலங்கை என்று ஒரு நாடு இல்லை என்றும் சிலர் கணக்குப் போட்டிருந்தார்கள்.

வட-கிழக்கு மாகாணங்கள் சிறிதளவு நெற்சாகுபடிக்கு மட்டுமே தகுதியுடையன என்று பலரும் பல காலமாகக் கூறிவந்தார்கள். ஏன் இன்றும் சிலர் கூறிவருகிறார்கள், வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் நெற்சாகுபடியும் காலப் போக்கில் சாத்தியமற்றதாகிவிடும் காரணம், யாழ்ப்பாணக் குடாநாடு பாலைவனமாகிவிடும் என்று அரசியற் பாலைவனத்தின் எல்லையில் நிற்கும் சிலர் கடந்த தேர்தற் காலத்தில் கூறிவந்தார்கள். அப்படிக் கூறியவர்கள் கூட, இப்பொழுது வட—கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தி பற்றிப் பேசுகிறார்களாம்.

ஆனால், வட—கிழக்கு இலங்கையின் நீர்வளத்தையும், நிலவளத்தையும் முறையாக ஆராச்சி செய்த பேராசிரியர் குலரத்தினம் போன்றவர்கள் இப்பகுதிகளில் பல புதிய தொழில்களை நடாத்துவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்கள். 'புவியியல்' என்ற பல்கலைக்கழக மாற வெளியிடும் இந்த உண்மையை மேலும் வலியுறுத்துகிறது.

### திராட்சை

வட மாகாணத்தின் சுவாத்திய நிலை திராட்சைச் செய்கைக்கு மிகவும் உவப்பானதாகும். குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் திராட்சைக்கொடி செழிப்புடன் வளரும் என்பதற்கு காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் திராட்சைத் தோட்டம் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆரம்பத்தில் தோலகட்டி மௌனசாலையிலேயே திராட்சை பயிரிடப்பட்டது என்றாலும் இதைப் பெரிய அளவில் பயிரிட வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் தோன்றவில்லை.

திராட்சைக் கொடியைத் பெரிய திட்டத்தில் பயிரிட வேண்டுமென்ற முயற்சியில் முதலில் முனைந்தவர் வவுனியாவைச் சேர்ந்த திரு. சிவபாதசுந்தரம் அவர்களேயாவர். அறுபதுக்கு மேற்பட்ட கொடிகளை 12000/= செலவில் பயிரிட்டு நல்ல முறையில் ஒரு தோட்டம் நடாத்தத் துணிந்தவர் திரு. சிவபாதசுந்தரம். இன்று வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் சிறிய அளவில்

தமிழ் இலங்கையின் பொருள் வளம் பற்றி 'நமது அரசியல் நிருபர்' கடந்த வாரம் வலியுறுத்தியிருந்தது வாசகர்கள் அறிந்ததே. அதன் பிரதிபலிப்பாக திராட்சைச் செய்கை பற்றி ஒருவர் வலியுறுத்திய கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன. திராட்சைச் செய்கை பற்றி மேற்போக்கான சில கருத்துக்களே இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும் திராட்சைச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் கஷ்டங்களையும், ஏனையவர்கள் திராட்சைச் செய்கை பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தெரிவிக்கலாம். திராட்சைச் செய்கையை வளம்படுத்தும் முயற்சியில் பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் ஈடுபட்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது. ஆகவே இங்கு தெரிவிக்கப்படும் ஆக்கபூர்வமான கருத்துக்கள் அவரின் முயற்சிக்கும் துணையாக இருக்கும்.



திரு. மு. சிவபாதசுந்தரம்

திராட்சைக் கொடிகள் வளர்க்கப்படுகின்றன.

திராட்சைச் செய்கை சிறந்த முறையில் விருத்தியாக்க முடியாதிருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால் ஆட்சியாளரின் ஒத்துழைப்பும் பூரண

கமக்காரன்

மாகக் கிடைக்குமாயின் நிச்சயமாக மூன்று ஆண்டுகளில் இலங்கை தரமான திராட்சைகளை ஏற்றுமதி செய்யக் கூடிய நிலையை எய்தும்.

திராட்சைக் கொடிகள் நீண்ட காலம் பலன்தரக் கூடியன. வருடம் இருமுறைகள் திராட்சைப் பழங்களைப் பறிக்க முடியும்.

ஒரு கொடியில், வருடமொன்றிற்குக் குறைந்த அளவு 1000 இறுத்தல்பழங்களை எதிர்பார்க்கலாம். ஒரு இறுத்தல் ஒரு ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டாலும் ஆரம்பச் செலவு நீங்கலாக 550/= நிகரலாபமாகப் பெறலாம்.

### புளிப்பையும் மாற்றலாம்

வட மாகாணத்திலிருந்து வரும் திராட்சைப் பழங்களில் சிறிதளவு புளிப்புத்தன்மையிருப்பதைப் பலரும் ஒப்புக் கொள்வார்கள். இதை மாற்றுவதற்கும் பல புதிய முறைகள் உள்ளன.

சென்னை மாகாணத்திலுள்ள வெப்ப நிலை பிரதேசங்களில் திராட்சை பெருமளவில் பயிரிடப்படுகின்றன. 1962ம் ஆண்டு வரை இப்பகுதியில் உள்ள திராட்சைகள் புளித்தன்மை நிறைந்தனவாகவே இருந்தன. ஆனால், சென்னை மாநில அரசு இது பற்றி பல ஆராச்சி நிலயங்களுடன் ஏற்படுத்திய தொடர்பின் காரணமாகவும், உதகையில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தினர் தொடர்ந்து செய்த ஆராயச்சியின் பயனாகவும் இதற்கு மாற்றுவழி கண்டனர்.

எனவே வட மாகாணத்திலுள்ள திராட்சைகளில் உள்ள புளித்தன்மையை மாற்ற ஆரம்ப நடவடிக்கையாக உதகை ஆராய்ச்சி நிலயத்திலிருந்து ஒரு சில தாவரவியல் விற்பனர்களை வரவழைக்கலாம். அவர்களின் உதவியுடன் நமது நாட்டு கமத்தொழில் விற்பனர்கள் புளித்தன்மை மாற்றுவதற்கான புதிய திட்டத்தை அறிந்து கொள்ளலாம். இதற்கு மூன்று மாதகாலம் போதுமானதென்று நம்பப்படுகிறது.

அதே போன்று இக்கொடிகளில் ஏற்படும் மஞ்சள் வியாதி பற்றி அறிவதற்கு நமது நாட்டு கமத்தொழிற் நிபுணர்கள் பயிற்சி பெற்றுக் கொள்ள வேண்டும்.

புளித்தன்மையை மாற்றுவதற்கு அதிக பணச்செலவு ஏற்படமாட்டாது. கொடிகள் பூக்கும் காலத்தில் ஒவ்வொரு கொடிக்கும் ஊசி மூலம் மருந்து செலுத்த வேண்டும். அத்துடன் பசளையில் சிறு மாற்றமும் செய்தால் சிறந்த இனிப்பான திராட்சையை வட மாகாணத்திலிருந்து பெறலாம் என்று கமத்தொழில் அறிஞர்கள் திடமாக நம்புகிறார்கள். இதற்கு அரசாங்கத்தின் ஆதரவு வேண்டும்.


### திட்டம் வேண்டும்

திராட்சை வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் இரு நடவடிக்கைகளை உடன் செய்தாக வேண்டும். முதலில் திராட்சை எக்காரணத்தைக் கொண்டும் இறக்குமதி செய்யப்படமாட்டாது என்பதை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். மற்றது, திராட்சை பெருமளவில் விளைவிக்கப்பட்டால் 'வைன்' செய்வதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க அரசாங்கம் முன்வரும் என்பதையும் அறிவிக்க வேண்டும்.

இந்த இரண்டு உறுதிமொழிகளையும் ஆட்சியாளரிடம் இருந்து பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு தமிழரசுப் பிரதிநிதிகளுடையதாகும். தமிழரசுப் பிரதிநிதிகள் உற்சாகத்துடன் செயற்பட திராட்சைக்கொடி வளர்ப்பவர்கள் ஒரு சங்கம் அமைக்க வேண்டும் அப்பொழுதுதான் வட-கிழக்கு மாகாண மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியும்.



வவுனியாவிலுள்ள சிவபாதசுந்தரத்தின் திராட்சைத் தோட்டத்தின் ஒரு பகுதி.



திராட்சைத் தோட்டத்தில் வளர்ந்த கன்று [illegible] பதிய முறையில் நடப்பட்டுப் படரவிட்ட புதிய கன்றுகளை தோட்ட மேற்பார்வையாளர் பார்வையிடுகிறார்.


ஆனந்த லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நீ. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்கயில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள் சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். இலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3,00.

வி. பி. பி. செலவு வேறு.

தலைமைப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நீ. 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாடுகள் கூட்டுவதன் நோக்கம் மாற்றுக் கட்சியினரை தாக்குவதற்கா?

## 'சிமோலுக்கு' கார்

ஐந்து முறை தேர்தலில் போட்டியிட்டு பொது மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு 'சிமோலு'க்கு, அண்மையில் கார் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டதாக சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது வாசகர்கள் அறிந்ததே. உண்மையில் கார் அன்பளிப்புச் செய்யப்பட்டதா?

ஒரு 'இல்மன் மின்ஸ்' காரும் 'கம்பர்' காரும் கைமாற்றுக் செய்யப்பட்டன. இதுதான் நடந்த உண்மை.

கடந்த காலங்களில் சிமோலுக்கு எதிர்முகாமில் நின்ற ஒருவர் சென்ற பொதுத் தேர்தலில் திடீரென்று சிமோல் மீது காதல் கொண்டார். அவரின் வெற்றிக்காக மன்னிக்கவும் தோல்விக்காக தீவிரமாக உழைத்தார். தேர்தல் முடிவில் இருவரும் தங்கள் கார் வண்டிகளைப் பரஸ்பரம் மாற்றிக் கொண்டார்கள். இது நடைபெற்றது நல்லூரில்.

இதற்குப் பெயர் 'கார் அன்பளிப்பு'. எல்லாரும் பொன் பூணை என்மகளோ— பாத்திருக்க வாடி மகளே! உன் தலையில் வறையோட்டை கவிழ்த்து விடுகிறேன்'.

இப்படியும் ஒரு நாடோடிப் பாடல் உண்டு.

---

யாழ்ப்பாணம் முற்ற வெளி மைதானத்தில் நடைபெற்ற பொன்னம்பலம் குழுவினரின் கூட்டமொன்றில் பேசிய ஒருவர் 'வாயக்கரிசி' என்ற தலைப்பில் கதை சொல்லிக் கொண்டிருந்தாராம்.

கதையை இரசித்துக் கொண்டிருந்த பொன்னம்பலம் திடீரென்று சிவசிதம்பரத்தைப் பார்த்துக் கேட்டாராம் 'இவர் கூறுவது உண்மையா?' என்று அதற்கு சிவசிதம்பரம் 'இல்லை' என்றாராம்.

இவ்வுரையாடலை கவனித்த பொது மக்கள் மத்தியில் சலசலப்புத் தோன்றியதும் கதை சொன்னவர் கதையை மட்டுமல்ல பேச்சையும் நிறுத்திக் கொண்டாராம்.

இக்கூட்டத்தில் முதற் பேச்சாளராக பேச எழுந்த ஒரு அப்புக் காத்து 'வவுனியாக்காளை, உடுப்பிட்டிச் சிங்கம், யாழ்ப்பாண...' என்று ஐந்து நிமிடங்களாக என்ன கூறுவது என்று தெரியாது தவித்தாராம். அப்பொழுது சிலர் 'புலி'யென்றார்களாம்.

புலியென்றதும் மேடையிலிருந்த சிங்கமும், காளையும் வேறு சிலரும் பயந்து விட்டார்களாய். ஆனால் பேச்சாளரோ 'யாழ்ப்பாணப் புலி'யென்று விழித்துப் பேச்சைத் தொடங்கி விட்டாராம்.

ஆனால் 'புலி'யென்று விழிக்கப்பட்டவர் பூனையாட்டம் 'குறுகுறு'த்துக் கொண்டிருந்தாரம். கூட்ட முடிவில் அந்த அப்புக்காத்து 'புலி'யிடம் நல்லாக வேண்டிக் கட்டினாராம்.

---

நடந்த வாரம், ஆனைப்பந்திக் காங்கிரஸ் காரி




யாலத்தில் எழுதப்பட்ட மரண சாசனம் ஒன்றின் விபரத்தை அப்படியே இங்கு தருகிறோம். ஆனால் மரண சாசனம் தத்துவக்காரரிடம் இன்னும் கொடுபடவில்லை. சில சமயம் இது கிழித்தெறியப்படலாம் என்று தெரிகிறது. அது கிழித்தெறியப்பட முன்னர் நீங்களும் படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

'இதனாற் சகலரும் அறிய வேண்டியது, ஆனைப்பந்திக் காங்கிரஸ் அப்புவும் சீ. சீ. தனப் 'பெருந்தலைவரும்' ஆகிய நான் இவ்வண் உருப்படி சிவா அவர்களுக்கு அறுதியுறுதி எழுதிக்கொடுக்கும் மரணசாதனம்.

'எனது சீவிய காலத்தின் பின் மேற்படி காங்கிரசை சிறிது காலத்திற்கு சுயாதீனமாகப் பராமரித்து பின்னர் அதனை அடக்கம் செய்ய வேண்டியது மேற்படி தத்துவகாரரின் கடமையாகும்.

ஆண்டு தோறும் தேதி பிந்தாமல் திவசம் முதலிய கிரியைகளைச் செய்ய வேண்டும். தட்டாரத்தெருவில் ஐந்து ரூபாவோடு உனது பெற்றோரின் திவசத்தை முடிப்பது போலல்லாமல், விரிவான முறையில் முற்ற வெளியில் செய்ய வேண்டும்.

'பொய், களவு, நம்பிக்கைத்துரோகம் நிறைந்த பதவிப்பித்தர்களையும், வேடதாரிகளையும், வாய்ச்சொல் வீரர்களையும் இயக்கத்தில் நிறையச் சேர்த்துவைத்திருக்கிறேன். இவர்கள் உனக்கு என்றும் உதவியாக இருப்பார்கள்.

'எதிரிகளை அழிப்பதற்கு இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். வேண்டும் நேரத்தில் எனது ஆயுதங்களானகள், சாராயம், வெள்ளையப்பம் போன்றவற்றைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ள உனக்கு முழு அதிகாரத்தையும் இத்தால் கொடுக்கிறேன். அல்லாயுதங்களும் உனக்கே ஏகபோக உரிமையுடையன என்பதை இத்தால் அறுதிவிட்டு கையொப்பமிடுகிறேன்.'

சி. சி. தனப்பெரும் தலைவர்
சாட்சிகள்
அடுப்படிச்சாமி
மைத்திரிசிவம்
சிமோல்
பிரசித்த நோத்தாரிசு

---

இடபகுதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களில் தொடர்ந்தும் தனிச் சிங்கள உறைகளும் பற்றுச் சீட்டுக்களுமே வழங்கப்பட்டு வருகின்றன. சுதந்திரக் கட்சியினரும், கூட்டரசாங்கத்தினரும் வேண்டுமென்று— தமிழ் பேசும் மக்களைப் புண்படுத்தும் நோக்கத்துடன் இவற்றை வழங்கினார்கள். ஆனால் தேசிய அரசாங்கம் தோன்றிய பின்னருமா இந்நிலை நீடிக்க வேண்டும்? இவ்விற்பனை நிலையங்களைக் கொண்ட தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இதைச் சுட்டிக் காட்டி ஆவனசெய்வார்களா என தமிழ் பேசும் மக்கள் கேட்கிறார்கள்.

---

தமிழ்மக்களைப் பொறுத்த வரையில், சமீபத்தில் நடைபெற்ற அரசியல் மாற்றங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பல்வேறு தமிழ்த் தலைவர்களின் வழிகளில் இயங்கிய தமிழ் பேசும் இனம், தற்போது இயக்கங்களின் கீழ் செயல்படுவதை நாம் அவதானிக்கிறோம்.

எந்தவித அரசியல் கண்ணோட்டமின்றியும், பார்க்கிறபோது, இன்றைய நிலையில் ஈழத்தில் தமிழன் தமிழனாக வாழ்கிறான் என்றால் அதற்குக் காரணம் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒன்றுதான். இக் கட்சியின் தீவிர வளர்ச்சி குறித்துப் பொறுமை கொண்ட சில சில்லறைக் கட்சிகள் மக்கள் மத்தியில் செல்லாக்காசாக மாறிவிட்ட சில அரசியல் இயக்கங்கள் இன்று தமிழரசுக்கட்சியை வாய்கிழியத் திட்டித் திரிகின்றன.

இந்தியாவில் தி. மு. கவும், இலங்கையில் தமிழரசுக்கட்சியுமே இன்று தமிழினத்தின் பாதுகாப்புக் கோட்டையாகத் திகழ்கின்றன.

### இது மாநாடா?

சமீபத்தில் நடைபெற்ற அ. இ. த. கா. கட்சியின் மாநாட்டு நிகழ்ச்சிகளை உன்னிப்பாகக் கவனித்தவர்கள், அதனுடைய கீழ்த்தரமான செயல்களை உணராமல் இருக்க முடியாது. அம் மாநாட்டில் கலந்துகொண்ட ஒவ்வொருவரினதும் பேச்சும் ஏதோ ஒரு வகையில் தமிழரசுக்கட்சியையும், அதன் தலைவர்களையும் தாக்குவதாகவே அமைந்திருந்தன.

இதுவா மாநாடுகூடியதின் நோக்கம்? இதுவா தமிழன் பண்பாடு? தங்கள் கட்சியின் கொள்கைத் திட்டங்களையும் வேலைத் திட்டங்களையும் மக்களுக்குப் பரந்த முறையில் தெரிவிப்பதற்காகவே தான் மாநாடுகள் கூட்டப்படுகின்றன.

காங்கிரசின் தலைவர்கள் என்று கருதப்பட்டோர், கடந்தகால அரசியல் வாழ்விலே தமிழ் இனத்துக்குஎத்தலைகய துரோகம் இழைத்தார்கள் என்பதை ஒவ்வொரு தமிழ்பேசும் மகனும் மறக்கமுடியாது. பலவருடங்களாக அரசியல் பீடத்தில் இருந்து அதல பாதாளத்துக்குத் தள்ளப்பட்டவர்கள், மீண்டும் அரசியல் மேடையில் ஏறும்போது, பழைய குணத்தை நாடிச் செல்வது அவர்களின் அழிவுக்குத் தான் வழி வகுக்கும்.

ஏறக்குறைய பதினறு மாவட்டங்களின் பிரதிநிதிகள் தமிழரசின் கொள்கைகளைச் சரியென ஏற்றிருக்கிறார்கள். காங்கிரசின் எண்ணப்படி மூன்று பிரதிநிதிகளைக்கொண்ட அவர்கள்தான் 'ஏக அறிவாளிகள், திறமைசாலிகள்' மற்றவர்கள் அனைவரும் முட்டாள்கள் என்றநினைப்புப்போலும்.

### தோற்றிருந்தால்?

ஆனால் ஒரு உண்மையை எவரும் மறுக்கமுடியாது. கடந்த தேர்தலைப் போன்று, இம்முறையும் திரு. பொன்னம்பலம் தோற்கடிக்கப்பட்டிருந்தால், என்றோ காங்கிரசுக்குக் கல்லறை கட்டப்பட்டிருக்கும். தெய்வாதினமாக அவர் பிழைத்தார். அவருக்குமட்டும் தனிப்புகழும், அவரது சிஷ்ய கோடிகளுக்கு அரைப்புகழும் தேடித்தர மட்டுமாவது காங்கிரஸ் இயங்குகிறதே அதுபோதும்.

சிங்கள வகுப்புவாதிகள் முதலாய் தலைசாய்ந்து வணங்கப்படத்தக்க நேர்மை படைத்த திரு. செல்வநாயகத்துக்கும், அரசியல்மேடையில் குத்துக்கரணம் அடிப்பதில் தனிப் புகழ் பெற்ற திரு. பொன்னம்பலத்துக் இடையில் ஐக்கியம் வேண்டும் என்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். கைதேர்ந்த திருடர்களைத் திறைசேரியின் காவலுக்குப்போட்டது போலத்தான் இது முடியும்.

தியாகம், பொதுநலம், பதவி ஆசையில்லாமை, போன்ற குணங்களைக் கொண்ட தமிழரசின் தலைமையே, தமிழ் இனத்தின் விமோசனத்திற்கு வழிதிறக்கும்.

இறுதியாக காங்கிரஸ் கட்சிக்குத் தமிழன் என்ற பெயரில் நான் பணிவுடன் கேட்பது இதுதான். தமிழர்கள் பட்ட வேதனைகள்போதும், அவர்களின் இன்றைய நிலைக்கு அத்திவாரமிட்டவர்கள் நீங்கள்தான். பதவிக்கு ஆசைப்பட்டு பைந்தமிழரின் உரிமைகளுக்குப் பங்கம் ஏற்படுத்தியதும் நீங்கள்தான். காலத்தின்போக்கில் என்றோ மடிந்துபோக வேண்டிய உங்கள்கட்சி இன்னும் உயிர்வாழ்கிறதென்பது விந்தையே!

### எது மரபு?

நடந்ததைமறந்துவிட்டுத் தமிழ்மக்கள் உங்களுக்கு ஒரு சிறிய சந்தர்ப்பம் தந்திருக்கிறார்கள். அவர்களின் எண்ணத்தைச் சிதைத்து விடாதீர்கள். பண்போடு, நேர்மையோடு, கர்வத்தை விட்டு விட்டு, தமிழன் முன்னேற்றத்துக்கு வழிதேடுங்கள்.

ஒற்றுமை தேவைப்பட்டால் ஒன்றைமறவாதீர்கள. கடலில்தான் சிறிய ஆறுகள் வந்து கலக்கவேண்டுமே தவிர, ஆற்றை நோக்கிக் கடல் வராது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். நரம்பற்ற நாக்கினால் எதையும் விருப்புடன் பேசலாம் என்ற எண்ணத்தையும் மறந்து விடுங்கள்.

முக்கியமாகத் தமிழரசுக் கட்சியைத் தாக்கித் தகர்க்க வேண்டும் என்பதற்காக, கூட்டங்களோ, மாநாடுகளோ போடப்பட்டால், அது தமிழரசின் வளர்ச்சிக்குத்தான் மேலும், மேலும் உதவும் என்பதையும்மறந்துவிடாதீர்கள். விடுதலைப்பற்றும், நேர்மையும்கொண்ட என்போன்ற இளைஞர்களின் மனத்தையும் புண்படுத்தாதீர்கள்.

**எஸ். பெனடிக்ற்,**
**தலைவர்: இளைஞர் மன்றம்**
**மன்னார்.**

---

# ஐக்கிய முன்னணியின் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்று அமைதியுடன் இருந்து செயற்படுவதே உண்மையான ஐக்கியத்திற்கு அறிகுறி. ஒரு அரசாங்கத்தில்-ஒரு சில பொது இலட்சியங்களின் அடிப்படையில் ஒன்று பட்டிருக்கிறார்கள். இந்த ஐக்கியத்தைக் காப்பாற்ற கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட வேண்டும்.

அதை விடுத்து திரு. பொன்னம்பலம் இரு அமைச்சர்களை அழைத்து தமிழரசாருக்கு பாடம்படிப்பித்துவிட்டேன் என்று வீராப்புப் பேசுவதும், அதற்கு தமிழரசார் பதில் நடவடிக்கை எடுப்பதும், இதற்கு மேலால் திரு. தொண்டமான் இ. தொ. கழகத்திற்கு எதிராக நடவடிக்கையில் இறங்குவதும் இன்றிருக்கும் ஐக்கியத்தையே குலைத்துவிடும்.

எனவே வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் கூறியது போல, இது ஒருவரை [illegible] சமயமல்ல, இதனால் எதிர்க்கட்சிகளும்— எதிர்க்கட்சிகளும் அனுகூலமடைய வழி கிடைத்துவிடும். எனவே தமிழ் பிரதிநிதிகள் அமைதியாகச் செயற்படுவதே மேல்.

**திட்டத்தை ஆக்குங்கள்**

இன்று ஒன்றுபட்டிருக்கும் ஐக்கியத்துக்கு மேலான ஒரு ஐக்கியத்தை உண்மையில் திரு. தொண்டமானும் திரு. பொன்னம்பலமும் விரும்பினால், முதலில் தமிழரசுத் தலைவர்களையும், சமஷ்டிக் கொள்கையையும் திட்டும் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அடுத்து எப்படிப்பட்ட ஐக்கியம் வேண்டும் என்பதை திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த வேண்டும். அத்தகைய ஐக்கியத்தினால் எதைச் சாதிக்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

எதைச் சாதிக்க வேண்டுமென்று கூறுகிறார்களோ அதையடைய மார்க்கம் என்ன என்பதைக் கூற வேண்டும். அந்த மார்க்கமும், அதனால் கிட்டும் பயனும் நிரந்தரமாக பாதுகாக்க திட்டமென்ன என்பதைக் கூற வேண்டும்.

இத்தனைக்கும் பின்னர் ஐக்கியத்திற்கான தீவிர முயற்சியில் ஈடுபட வேண்டும்.

1957-ம் ஆண்டு ஐக்கிய முன்னணியை அமைத்துவிட்டு, பிரச்சினை குரல்வளையை நெரிக்கத் தொடங்கியதும்-மறியலுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதை உணர்ந்த திரு. பொன்னம்பலம் ஐக்கிய முன்னணியை முறித்தார். அந்த நிலை உருவாகாமல் இருப்பதற்கான பாதுகாப்பு வேண்டும்.

இத்தனைக்கும் பின்னர் ஐக்கிய முன்னணி பற்றி இவர்கள் பேசினால் அதில் அர்த்த முண்டு. இவற்றை விடுத்து ஒரு வாயால் தமிழரசுத் தலைவர்களை பொறுப்பற்ற முறையிற் தாக்கிக் கொண்டு, மறுவாயால் ஐக்கியம் பேசினால் அது 'தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவிட்ட' கதையாகவே முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஜயந்திமாலாவுக்கு விரைவில் திருமணம்?

## தமிழ் படத் தயாரிப்பாளர்கள் மத்தியில் நம்பிக்கை

பம்பாயைச் சேர்ந்த டாக்டர் ஒருவருக்கும் நடிகை வைஜயந்திமாலாவுக்கும் திருமணம் நடைபெற்றுவிட்டதாக சென்னையில் பரப்பப்பட்ட வதந்தி சினிமா வட்டாரத்தை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. அந்த வதந்தியில் சிறிதும் ஆதாரமில்லையென்று வைஜயந்தியின் தாயார் வசுந்தராதேவி ஒரு அறிக்கை மூலம் மறுத்துள்ளார். ஆனால், திருமண ஒழுங்குகள் நடைபெறுவது என்னவோ உண்மைதான் என்ற பேச்சு சென்னை சினிமா வட்டாரங்களில் பலமாக அடிபடுகிறது.

பம்பாயைச் சேர்ந்த பிரபல டாக்டர் ஒருவருக்கும் நடிகை வைஜயந்திமாலாவுக்கும் இரகசியத் திருமணம் நடைபெற்றுவிட்டதாகவும், இத் திருமணத்தை நடிகர் ராஜ்கபூர் முன்னின்று நடாத்தி வைத்ததாகவும் சென்ற 15-ம் திகதி சென்னை நகர் எங்கும் ஒரே கதையாக இருந்தது.

இச் செய்தி சினிமா வட்டாரத்திற்கு எட்டியதும் பலர் பம்பாய்க்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும் முனைந்தனர். வேறு சிலர் பத்திரிகைக் காரியாலயங்களுடன் தொடர்பு கொண்டு உண்மையைத் தெரிந்துகொள்ள முயன்றனர். முக்கியமான சிலர் வைஜயந்தியின் தாயாரை தொடர்பு கொண்டு உண்மையை அறிந்தனர்.

சென்னையில் பரப்பப்பட்ட திருமணச் செய்தி சிறிதும் ஆதாரம் அற்றது என்று வைஜயந்தியின் தாயார் தெரிவித்தார்.

சுருக்கமான ஒரு அறிக்கையின் மூலமே இச் செய்தியை வைஜயந்தியின் தாயார் மறுத்துள்ளார். அந்த அறிக்கையில் 'இரகசியத் திருமணம்' எதுவும் நடைபெறவில்லை என்பதை மட்டுமே அவர் மறுத்திருக்கிறார்.

ஆனால் வைஜயந்திமாலாவுக்கு திருமணப் பேச்சு நடைபெறவில்லையென்று அவர் அறிக்கையில் சுட்டிக் காட்டி மறுக்கவில்லை. இதனால் சென்னை சினிமா வட்டாரத்தில் வைஜயந்திக்கு திருமண ஒழுங்குகள் நடைபெறுவதாக நம்பிக்கை நிலவுகிறது.

### நமது சென்னை நிருபர்

இதில் உண்மையிருக்கலாம் என்று சென்னையிலுள்ள பிரபல சினிமா தயாரிப்பாளர்கள் நம்புகிறார்களாம். இவர்களிற் சிலர் வைஜயந்தியை சில புதுப் படங்களுக்கு ஒப்பந்தம் செய்ய முயன்ற பொழுது அதற்கு அவர் மறுத்துவிட்டாராம். திருமணத்தை மனதிற் கொண்டே புதிய படங்களில் ஒப்பந்தம் செய்து கொள்ள வைஜயந்திமாலா மறுத்திருக்க வேண்டுமென்று இவர்கள் நம்புகிறார்கள். விரைவில் வைஜயந்திக்கு திருமணம் நடைபெறும் என்றும் இவர்கள் நம்புகிறார்கள்.



சினிமாஸ் திரைகளில் வெற்றியுடன் ஓடிக்கொண்டிருக்கும் குடும்பச் சித்திரமான பச்சை விளக்கில் அண்ணன் தங்கையாக நடிக்கும் சிவாஜி கணேசனும், இலட்சிய நடிகை விஜயகுமாரியும் பாசத்தின் பிணைப்பில் தோன்றும் இக் கட்டம் நிச்சயம் இரசிகர்களின் உள்ளங்களிலும் இரக உணர்ச்சியை ஏற்படுத்தவே செய்யும்.

## மர்லன் பிராண்டோ இந்தியா வருகிறார்

சீனா இந்தியா மீது நடாத்திய ஆக்கிரமிப்பை வைத்து எடுக்கப்படும் படத்தில் நடிப்பதற்கு மர்லன் பிராண்டோவும் வருகிறாராம்.

இப்படத்தில் இந்திய நட்சத்திரங்களும் நடிக்கிறார்களாம்.

'மன்ஜிராத்' என்ற படத்தில் கதாநாயகனாக நடித்து வரும், மாநிலக் குடிப்படையில் சிவிலியன் அதிகாரியாக இருப்பவருமான ஓங்காரநாத் ஆபிமா என்பவர் இப் படத்தில் ஒரு ராணுவ அதிகாரியாக நடிக்கிறாராம்.



சிலோன் எண்டர்டெயின்ன்மென்ட்ஸ் திரைகளுக்கு வரவிருக்கும் 'இரவும் பகலும்' என்ற திரைச் சித்திரத்தில் புதுமுகங்களான ஜெய்சங்கரும் வசந்தாவும், தங்கள் முதற்படமே வெற்றிப்படமாக அமைந்துவிட்டதென்பதைப் பற்றி தங்களுக்குள் பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள் போலும்.




## பட உலகம் ஒரு சில்லரை நம்பியிருக்கிறதா?

### டாக்டர் மு. வரதராசன் கேள்வி

"ஒரு சிலரை மட்டுந்தான் பட உலகம் நம்பியிருக்கிறதா?" என்று டாக்டர் மு. வரதராசன் 'சர்வர் சுந்தரம்' 100-வது நாள் கொண்டாட்டத்தையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் சினிமா அதிபர்களைப் பார்த்துக் கேட்டார்.

'சர்வர் சுந்தரம்' படத்தின் 100-வது நாளைக் கொண்டாடுவதற்காக ஏ. வி. எம். ஸ்டுடியோவில் ஒரு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு தமிழ் பேராசிரியர் டாக்டர் மு. வ. தலைமை தாங்கினார். அவர் பேசுகையில் கூறியதாவது!

'ஒரு துறையில் ஒருவர் முன்னணியில் இருக்கிறார் என்றால், அவரேதான் உலகம் என்று எண்ணி விடுகின்றனர். அவர் போய்விட்டால், அதன் பின்னர் பிரளயமே ஏற்பட்டுவிடுமென்று எண்ணுகின்றனர். இது தவறான கருத்து. அரசியல்துறை, கல்வித்துறையில் மட்டுமல்ல படத்துறையிலும் இந்த நோய் பரவியிருக்கிறது.

'ஒரு படம் தோல்வியடைவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் இன்ன நடிகர் இப்படத்தில் நடிக்காததுதான் அதற்குக் காரணம் என்று முடிவு கட்டிவிடுகின்றனர். இது எவ்வளவு பெரிய தவறான கருத்து என்பதை யாரும் சிந்திப்பதில்லை.

'சர்வர் சுந்தரம்' படத்தில் ஒரு நகைச்சுவை நடிகர் பிரதம கதாநாயகனாக நடித்து, அந்தப் படம் பெரும் வெற்றியையும் பெற்றுவிட்டது. படத்துறையில் ஓரிரு தனி மனிதர்கள் மேலுள்ள அசட்டுத்தனமான நம்பிக்கையைத் தகர்த்தெறிய ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளது என்ற தன்மைக்காக இந்தப் படத்தைத் தயாரித்தவர்களையும் இதில் பங்கு கொண்டவர்களையும் பாராட்டுகிறேன்.'

## எலிசபெத் டைலரின் படம்

எலிசபெத்டைலரும் அவரின் கணவர் ரிச்சாட் பேட்டிலும் 'தி கிரேட்டஸ்ட்டிரெயின் ராபரி இன் திவர்ல்ட்' என்னும் ஆங்கிலப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள் என்று பாரிசில் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்கள்

இவர்கள் இருவரும் சேர்ந்து அண்மையில் நிறுவியுள்ள படத்தயாரிப்பு இயக்கத்தின் முதற்படமாக இது இருக்கும் மெட்ரோ கோல்டுவின் மேயரும் இந்நிறுவனத்தில் சேர்ந்துள்ளார் என்று தெரிகிறது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் பக்கிங்காம்

## ஆரம்பவிழா ஆபிரிக்காவில்

பிரபல தயாரிப்பாளரும், நடிகரும், இயக்குனருமான சந்திரசேகர் தமது இரண்டாவது தயாரிப்பான தெருப்பாடகன் (ஸ்ட்ரீட் சிங்கர்) என்ற படத்தை தயாரிக்கவிருக்கிறார். இப் படத்தின் ஆரம்பவிழா ஆபிரிக்காவிலுள்ள நைரோபி என்ற இடத்தில் நடைபெறவிருக்கிறது. ஒரு பிச்சைக்காரனின் வாழ்க்கையை கருவாகக் கொண்டது இப் படத்தின் கதை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சயர் என்னும் மிடத்தில் நடைபெற்ற மிகப்பெரிய இரயில் கொள்ளையை வைத்தே இப்படம் எடுக்கப்படுமாம்.

**'பச்சை விளக்கு'**
**'இரவும் பகலும்'**
**விமர்சனம்**
அடுத்த இதழில் வெளிவரும்.

## 'நடு இரவில்' நால்வர்

எஸ். பி. கிரியேசன்சாரின் 'நடு இரவில்' இயக்குனர் பாலச்சந்திரர் நான்கு நகைச்சுவைப் பாத்திரங்களைப் படைத்து சோ, சதன், மாலி, கொட்டப்புளி ஜெயராமன் ஆகியோர் மூலம் நகைச்சுவை விருந்தை வாரி வழங்க வைத்துள்ளார். நகைச்சுவையூட்டும் வசனங்களைப் பாத்திரங்களின் தகுதிக்கும் தரத்துக்கும் ஏற்றபடி அமைத்திருக்கிறார் வே. இலட்சுமணன்.

## கவிஞரின் புதுப்படம்

கவிஞர் கண்ணதாசன் புதிதாக ஆரம்பித்திருக்கும் மாதவி புரொடெக்சன்ஸ் மூலம் ஒரு சமூகக் கதையைப் படமாக்கப் போகிறார் பி. சி. கணேசன் இப்படத்திற்கு கதைவசன கர்த்தாவாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். ஜி. ஆர். நாதன் ஒளிப்பதிவு, இயக்குனர் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளார். கண்ணதாசன் பாடல்களுக்கு சுதர்சன் இசையமைக்கிறார்.

**நடந்தவை நடக்கவிருப்பவை**
கலைப்பூஞ்சோலை,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக் கவி கண்ட புதுமைச் சமுதாயம்

சூமயத்தில் பற்றுடையோர் ஏழ்மையைத் தீர்க்கவில்லை ஏழையின் துயரைப் போக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்களைக் காத்துக்கொண்டனர். ஏழையை மேலும் தாழ்த்திக் கொண்டார். தாழ்ந்தவன் மேலும் தாழ்ந்துகொண்டே போனான். தாழ்த்தியவன் தொடர்ந்து தாழ்த்திக் கொண்டே சென்றான். வல்லமை உள்ளவன் வாழ்ந்து கொண்டான்.

"கைத்திறனும் வாய்த்திறனும்
கொண்டபேர்கள்
கண்மூடி மக்களது
நிலத்தையெல்லாம்
கொத்திக்கொண்டேப்பமிட்டு
வந்ததாலே
கூலிமக்கள் அதிகரித்தால்
என்செய்வேன்!
மொத்தல் இலைக் காலமானார்
ஏழைமக்கள்
புனல் நிறைந்த
தொட்டியைப்போல்
ஆனார் செல்வர்:
அதிகரித்த
தொகை தொகையாய்ச்
செல்வமெல்லாம்
அடுக்கடுக்காய்ச்
சிலரிடம் போய்
ஏறிக்கொண்டு
சதிராடு தேவடியாள் போல்
ஆடிற்றுத்!
தரித்திரரோ புழுப்போலே
துடிக்கின்றார்கள்."

பசியாலே வாடுகின்றான் ஒருவன். பசிக்கவில்லை என்று சொல்லி மருந்துண்ணுகிறான் மற்றொருவன். பட்டினியாலே மாழுகின்றான் ஏழை. பாலோடு பழமுண்டு வாழுகின்றான் பணக்காரன் பணக்காரன் சேர்த்துவைத்திருக்கும் பணம் பிறக்கும் பொழுது தன்னோடு கொண்டுவந்ததல்ல, ஏழையின் நெற்றி வேர்வையால் நிலத்தில் விளைந்ததே அப்பணக்காரன் பதுக்கிவைத்திருக்கும் பணம். இத்தகைய உயர்வு தாழ்வு இருக்கத்தான் வேண்டுமா?

"ஏழ்மையில் மக்களைத்
தள்ளுவதோ?—இதை
இன்னலெனச்
சிலர் கொள்ளுவதோ?
கூழுக்குப் பற்பலர் வாடவும்
சிற்சிலர்
கொள்ளை யடிப்பதும்
நீதியோ—புவி
வாழ்வதுதான்
எந்தத் தேதியோ?"

காலை முதல் மாலை வரை உழைக்கின்ற ஏழை எடுக்கின்ற ஊதியம் குடும்பத்தின் ஒரு நேரச் சோற்றுக்கே சாலுது. அவன் மானத்தைக் காக்கவேண்டியிருக்கிறது. மற்றவர்களைப்போல் அதற்கு ஆனதோர் உடை அவனிடமில்லை. மழையிலும் வெய்யிலிலும் இருந்து தன்னைப் பாதுகாக்க இருப்பிடம் வேண்டிஇருக்கிறது அதற்குக் குடிசையும் கிடைப்பதில்லை. கல்வி வசதியோ அவர் கண்டதில்லை என்றும் வீழ்ச்சியே அவர் வாழ்வில். அவர் மாட்சி பெறுவது எப்போது?

"காலைமுதல் மாலைவரை
ஏருழவர்
பசியால் மெலிந்து
நோயினில் வாடி
தோலைமூட ஆடை ஏதும்
இலையே—உடல்
தூய்மைக்கும்
யாதொருவழியுமே இலையே.
அண்டிவாழ விடில்லை
பிள்ளைகள்
கல்வி அடையவோ வழியில்லை.
மீட்கியும்
கண்டதில்லை நாளுமே
வீழ்ச்சி எனில்
கோரும் பொதுவாழ்வு
தூய்மை பெறுமா?"

இப்படியே ஏழைகள் என்றும் வாழ்ந்துவிடப்போவதில்லை. பதுங்கிப் பதுங்கி வாழும்அவர் விழித்தெழுந்து பணக்காரர்மேல் பாயத்தான் போகிறார்கள். அடக்கி ஆண்டவரால், ஒடுக்கப்பட்ட ஏழைமக்கள், தம் தாழ்வுநிலை தகர்த்திவிட்டுக் கடக்கத்தான் போகிறார்கள் தம் கஷ்டமெல்லாம் அதை உணரவேண்டும் உல்லாசபுரியில் உழைக்காமல் இருப்பவர்கள்.

"ஓடப்பராயிருக்கும்
ஏழையப்பர்
உதையப்பராகி விட்டால்,
ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உதையப்பர்
எல்லாம்மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார்.
உணரப்பா நீ!"

எல்லோரும் சமமாகும் நிலை வரவேண்டும். எல்லோரும் உணவு பெற்று, உடை உடுத்து, நல் லுறைவிடம் பெற்று உயர்வான நிலை அடையும் நாள் வரவேண்டும். அந்நாளே பொன்னாள்.

"இலையே உண விலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலில்லை எனவேமுர
சறைவாய் முரசறைவாய்!"

## தொழிலாளர்

நாடு செழிப்பதும், காடு அழிப்பதும், ஊர் செய்வதும், சாலை அமைப்பதும், சோலை சமைப்பதும், தோட்டம் அமைப்பதும், மலையைப் பிளப்பதும், பள்ளம் பறிப்பதும் யார்? தொழிலாளர். அன்னார் நிலையென்ன]

## 'எழில் இறை'

"... ... ...பொழுது தோறும்
புனலுக்கும், அனலுக்கும்,
சேற்றினுக்கும்
கக்கும் விசப் பாம்பினுக்கும்
விலதினுக்கும்
கடும் பசிக்கும் இடையறாத
நோய்களுக்கும்
பலியாகிக் கால் கைகள்
உடல்கள் சிந்தும்
பச்சைரத்தம் பரிமாறி
இந்த நாட்டைச்
சலியாத வருவாயும்
உடையதாகத்
தந்ததெவர்? அவரெல்லாம்
இந்த நேரம்
எலியாக முயலாக
இருக்கின்றார்களே!
ஏமாந்த காலத்தில்
ஏற்றங் கொண்டோன்
புலிவேசம் போடுகின்றான்!
பெருமக் கட்குப்
புல்லளவு மதிப்பேனும்
தருகின்றானா?"

சலியாத உழைப்பினால் செல்வம் பெருக்கினான் தொழிலாளி. ஆனால் அச்செல்வங்கள் சேருமிடம் செருக்குள்ள பண முதலாளியிடம். மாடிவீடு கட்டுகிறான் ஏழை அங்கு வாழ்வது செல்வச்சீமான். நிலத்தை உழுகிறான் நேர்மையான உழவன். நெல்லைப் பெறுகிறான் நில முதலாளி. ஏனிந்த அநியாயம் என ஏழை மக்கள் கேட்டுவிட்டால் அதிகாரத்தினால் அடக்குகிறார்கள் ஆணவக்காரர்கள்?

"தொழிலறிந்த ஏழைமக்கள்
தொழில் புரிந்து செல்வர் பால்
அழிவிலாமுதல் கொடுக்க
அம் முதற் பணத்தினால்
பழிமிகுந்த அரசமைத்தும்
படைகள் தம்மை ஏவியே
தொழில் புரிந்த ஏழை மக்கள்
சோற்றிலே மண் போடுவார்!"

படையைக் காட்டிப் பயமுறுத்த நினைக்கும் பணமுதலாளி, ஏழைத்தொழிலாளியின் இதயத்தில் எழுந்த எழுச்சிக் கொள்கைக்குத் தடை போட முடியுமா?

"நேர் இருத்தித் தீர்ப்புரைத்துச் சிறையிற்போட்டால் நிறைதொழிலாளர்களுணர்வு மறைந்துபோமா?" தொழிலாளர் தொடங்கிவிட்டால் போராட்டம். அதைத் தடைபோட யாராலும் முடியாது.

"அடக்குமுறை செய்திடல்
முடியும்—கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு
முடியும்?
ஒடுக்குசிறை காட்டுதல்
முடியும்—உணர்
ஒடுக்குதல் எவ்வாறு முடியும்?"

உலகத்தில் வாழும் மக்களை எடுத்துக்கொண்டால், பணக்காரர் சிலரே. தொழிலாளர் மிகப்பலராவார். எண்ணிக்கையில் குறைந்தவர்கள் ஏற்றம்கொண்டு வாழ்கின்றார். எல்லா வேலைகளும் செய்பவன் ஏழையாகவே இருக்கின்றான். பலத்தில் கூடியவர் உள்ளத்தில் எழுச்சி கண்டால் யாரும் எதிர்க்க விளைவாரா?

"ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினூர்
நீர் நிறைந்த கடலை யொக்கும்
நேர் உழைப்பவர் தொகை!
நீர் மிதந்த ஓட மொக்கும்
நிறைமுதல் கொள்வோர்
தொகை
நேரிற் சூறை மோதுமாயின்
தோணி ஓட்டம் மேவுமா?
கிலியை விடுத்துக்
கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும் உத்தேசமில்லை—
சொந்த
வலியுடையார் இன்ப
வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை."

புதியதோர் உலகம் உதயமாக வேண்டும். அங்கு அரியதோர் ஆட்சி அமைய வேண்டும். அங்கு யாவரும் சமமாய் வாழவேண்டும். சாதிகள் சமயச் சண்டைகள் அழியவேண்டும். சமத்துவம் எங்கும் தழைக்கவேண்டும்.

"எல்லார்க்கும் தேசம்,
எல்லார்க்கும் உடமைஎல்லாம்
எல்லார்க்கும்
எல்லாஉரிமைகளும் ஆகுகவே!
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம்
வாய்ந்திடுக!
எல்லார்க்கும் நல்ல இதயம்
பொருந்திடுக!
வல்லார்க்கும் மற்றுமுள்ள
செல்வர்க்கும் நாட்டுடமை
வாய்க்கரிசி என்னும்
மனப்பான்மை போயொழிக;
வில்லார்க்கும் நல்ல நுதல்மாதர்
எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே
மணிமுரசம் ஆர்ப்பீரே!"

புரட்சிக்கவி பாரதிதாசன் இத்தகைய இன்பம் கொழிக்கும் பூமியைக்காண விழைகிறார். அவர் எண்ணம் ஈடேற நாம் என்றும் உழைப்போமாக.

(முற்றும்)

# தமிழர் எழுத்து முறையின்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யையே இவ்விலங்கள் இன்று வளர்த்துக் கொண்டுள்ளன.

இந்தியாவிலுள்ள பழங்குடியினம் ஒன்றே உயிர், மெய், உயிர்மெய்யென எழுத்துக்களைப் பிரித்து உயிரில் குறில் நெடிலும், மெய்யில் வலி, மெலி இடையும் வகுத்து எழுத்து ஒலியினை ஆராய்ந்து வரியைப் பிரித்துள்ளது.

iii இந்த இந்தியப் பழங்குடியினம் எழுத்தே காணாத ஆரிய இனமாகவும் இருக்க முடியாது எழுத்துக் கண்டும் அதில் மூவாயிர ஆண்டும் எந்த வளர்ச்சியும் செய்ய முடியாத ஒரே இன நடுநிலக்கடலை இனம், மேலை ஐரோப்பிய இனங்கள்.

உலகில் வேறு எந்த ஆரிய இனமும் வேறு எந்த ஆரியரல்லாத இனமும் காணாத பழமை மட்டுமன்றி வளர்ச்சியும் உடைய இனம் தமிழினம் ஒன்றே.

## எழுத்து வேறுபாடு

எழுத்துக்கண்ட இந்தியப் பழங்குடி இனம் ஆரிய இனமல்ல; தமிழினமே என்பதை இன்னொரு செய்தியும் காட்டும்.

இந்தியாவுக்கு வந்து இந்திய மொழிகளைப் பயிலும் வரை மேனாட்டினர்க்கு உயிர் மெய் வேறுபாடோ, உயிரில் குறில் நெடில் வேறுபாடோ, தெரியவந்ததில்லை. அதுமட்டுமல்ல, ஆங்கிலத்திலுள்ள (k t p போன்ற) சில எழுத்துக்களின் ஒலி விசைப்பே (g, b, d, போன்ற) வேறு சில எழுத்துக்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது.

இது போலத்தான் கிரேக்கரும் தம் மொழியில் (k g x) ஆகிய எழுத்துக்கள் ஒரே வர்க்க எழுத்துக்கள் என்றோ, விதுவெனியாவில் உள்ள சமஸ்கிருதம்போன்ற நான்கு 'க' எழுத்துக்கள் ஒரே வர்க்கமென்றோ தெரிய வந்ததில்லை. சமஸ்கிருதத்தின் அரிச்சுவடியில் அவை ஒரே வரிக்கயாகக் காட்டப்பட்டதனைக்கண்ட பின்னரே அதை உணர்ந்தனர்.

உலகின் மற்ற ஆரியஇனத்தவரைவிட ரோமர் கிரேக்கர் நாகரிகத்தில் மேம்பட்டிருந்தனரென்றால், அது எகிப்தியர் பினிஷியர் போன்ற நடுநில ஆரியரல்லா இனத்தவர் நாகரிகத் தொடர்பினாலேயேயாகும். அது போலவே உலகின் மற்ற ஆரிய இனத்தவரைவிட இந்திய ஆரியர் நாகரிகத்தில் மேம்பட்டிருந்தனர் என்றால், அது தமிழ நாகரிகத் தொடர்பினாலேயே யன்றி வேறல்ல.

இந்தியாவின் நாகரிக வளர்ச்சிப் படமொன்றுஉருவாக்கப்படுமானால், அது இச்செய்தியைப் பாமர மக்களுக்கும் கூடத் தெளிவாகச் சுட்டிக்காட்டிவிடும். தமிழ்த் தொடர்பு குன்றிய இடங்களெல்லாம் நாகரிகத்தில் [illegible] பட்டும், அத் தொடர்பு வளர்ந்த இடங்களெல்லாம் அது வளர்ந்த அளவில் நாகரிகத்தில் வளர்ந்தும் இருப்பதைக் காண்பர்.

## தமிழ் எழுத்து தலைசிறந்தது

மேலை மொழி நூலறிஞரும் பாணினி முதலிய பண்டைச் சமஸ்கிருத அறிஞரும் கனவு காணாத உயர் ஒலி நூல் மொழி நூல் கலைப்பண்பறிவை உலகம் தொல்காப்பியத்தின் பண்டைத் தமிழ் இலக்கியத்திலும் காணத் தொடங்கியுள்ளது. இந்திய ஆரியர் மட்டுமன்றி உலக முழுவதிலும் உள்ள ஆரிய அனாரிய இனங்கள் யாவுமே எழுத்தின் ஒலி வடிவ வரிசை, ஒலிவடிவப்பண்பின் அறிவு ஆகியவற்றையும் எழுத்தையும் எண்ணையும்; கலை, இலக்கியம் சமயம்,சமுதாய அரசியற் பண்புகளையும் தமிழரிடமிருந்துதான் பெற்றதென்பதை உலகம் கண்டுணரும்நாள் அணித்தேயுள்ளது.

தமிழ் எழுத்து உலகின் பழமைமிக்க எழுத்துமுறை மட்டுமல்ல உலகின் தலை சிறந்த எழுத்து முறையும் ஆகும்.

## எதனையும் ஒழிக்கும்

ஆரியத் தொடர்பு கொண்ட இடைக்காலத்தில் நாம் சில பல சிறப்புக்களை இழந்தும், [illegible] வருகிறோம். இக் கூறுகளில் ஒன்றாக, தொல்காப்பியர் காலத் தமிழ் எழுத்து முறையை நாம் பின்பற்றினாலும் அதன் பல பண்புகளை மறந்து விட்டோம். மறந்து வருகிறோம்.

தமிழின் உயிர் 12, மெய் 18 ஆகிய30 எழுத்துக்களும் உலக மொழியுள் எல்லாவற்றிலும் உள்ள எல்லாமொழிகளுள் அடிப்படை ஒலிகளைக் குறிப்பன. தமிழில் இல்லாத ஒலி என்று உலக மொழிகள் எதனிலும் எந்த எழுத்தும் ஒலியும் இல்லை.

மொழிகளுக்கேற்றபடி இந்த அடிப்படை ஒலிகளின் திரிபுகளைக் குறிப்பனவாகிய சார்பு எழுத்துக்களாகிய ஆய்தம் குற்றியலிகரம், உகரம் மகரம் ஆகியவை எந்த எழுத்தையும் கடுஒலி அல்லது திறந்த ஒலியாக்கும் குற்றியலிகரம் மூன் வாய் ஒலி ஆக்கும். குற்றியலுகரும் பின்வாய் ஒலி உருள் ஒலி ஆக்கும் குறுகிய மகரம் ஒலிந்த ஒலி ஆக்கும்.

## காப்பியர் காலம்

தொல்காப்பியர் கால உயிர் மெய் விரிவடிவம் இன்றிருப்பதைவிட ஒழுங்குடையது. மேல் கீழ் புனி பின்வளைகோட்டால் எல்லாக்குறிகளும் அமைந்தன.

தொல்காப்பியர் எழுத்து முறையையும் பண்பையும் தமிழர் மேற்கொண்டால் [illegible] மொழிகள் எல்லாவற்றையும் அதில் ஒலிபிசகாமல் குறிக்கலாம்.

தமிழ் எழுத்தை ஒருபுறமும் தேவநாகரிரோமன் முறைகளையும் வைத்துவரும் கால உலகறிஞர் ஒப்பிட்டால் தமிழ் முத்தாகவும், தேவநாகரி கிளிஞ்சலாகவும் கருதப்படத் தக்கவையாகும்.

## சுருட்டு வளையத்தில் சித்திரவேலை

சுருட்டுக்களில் சுற்றப்பட்ட காகித வளையங்களைக் கவர்வரும் வண்ணச்சித்திர வேலைகளைச் செய்வதில் கோலோன் நகரைச்சேர்ந்த கைரிமான் ஹிர்ஸ்பெர்க் என்பவர் நிபுணராகத் திகழ்கிறார். 74 வயது நிரம்பப் பெற்ற ஓய்வுபெற்ற அதிகாரியான இவர் இதுவரையிலும் 20,000 காகித வளையங்களைக் கொண்டு பூக்குவளைகள், தாம்பாளங்கள், மேஜைகள், கதவுகள் ஆகியவற்றுக்கு வண்ண அலங்காரங்கள் செய்திருக்கிறார். இவருடையஇந்தப்பொழுதுபோக்கு வேலையில் அவரது மனைவியும் உதவிபுரிகிறார். எப்படித் தெரியுமா?

சுருட்டுகளை அதிகஅளவில் குடிப்பதன் மூலம்! ஆனாலும் இவருக்கு தேவைப்படும் அளவுக்கு போதுமானகாகித வளையங்கள்கிடைப்பதில்லை. பெரும்பாலான காகித வளையங்களை இவரது நண்பர்கள் சேகரித்து இவருக்குக் கொடுக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 3. மாணிக்கச் சித்தப்பா

என்றும் போலக் காலை மலர்ந்தது. வைகறைப் பொழுதிலேயே படுக்கையை விட்டு எழுந்துப் பழகிப் போனதில்லை அன்று எழும்பவில்லை. பெற்ருேர் எப்போதோ எழுந்துவிட்டவர்; அவனது தங்கை லீலா பல முறை வந்து, "அண்ணு, எழும்பு!" என்று எழுப்பக் கூட அவன் அசைந்து கொடுக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தான்.

இருந்தாற்போல தலை வாசலில் யாருடையதோ பேச்சுக் குரல் கேட்டது. அவன் தந்தையாரோடு யாரோ பேசிக்கொண்டிருந்தார்கள். தூக்கக் கலக்கத்தில் யார் பேசுகிறதென நன்குபுரியவில்லை. படுக்கையைவிட்டு எழுந்தவன் தன் பெயர் அவர்கள் பேச்சில் அடிபடுவதைக் கேட்டு அப்படியே இருந்துவிட்டான். குரலிலிருந்து அவனுடைய மாமா தான் என்பது புரிந்தது.

**செங்கை ஆழியான்**

மாமாவை எண்ணிய போது சிறிது பயந்தான். 'சென்றவிரவு சொல்லாமல் கொள்ளாமல் ஒடி வந்ததற்காக விசாரிக்க வந்திருக்கிருரோ?'

"இவன் இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் ஒடி வருவான் எண்டு நான் ஒருக்காலும் எண்ணியதில்லை, மச்சான்! விடிய எழும்பிப் பார்த்தால் இவனைக் காணவில்லை! இவனுடைய மாமி அங்கை ஒப்பாரி வைக்கிரு..." அவனுடைய மாமா தான் பேசுகிருர்.

'மாமி அழுகிருவாமே...?' என்று எண்ணிய போது தில்லைக்கு அழுகை அழுகையாக வந்தது. ஓடிப் போய் மாமியைக் கட்டியணைத்து மன்னிப்புக் கேட்க வேண்டும் போலிருந்தது.

"அதுசரி, மச்சான்! இவன் இராத்திரி எப்ப வந்தவன்? என்ன சொன்ஞன்? ' திரும்பவும் மாமாதான் கேட்கிருர். இப்போது அவனுடைய அப்பா பதில் சொல்வது கேட்கிறது:

"நான் இவன் அந்த நேரத்திலை வருவான் என்று எண்ணவில்லை! படலை சங்கிலி போட்டுக் கட்டியிருந்தது! இவன் படலைக்கு மேலாலே ஏறி உள்ளே வந்து தாயை எழுப்பினுன்? நான் உடனே முழிச்சுக்கொண்டன்! 'யாருடனடா வந்தனீ?' என்றேன். சும்மா மரம்போல நின்ருன்! பிறகு 'மாமா அடிச்சார், ஓடி வந்திட்டன்!' என்ருன். பிறகென்ன பேசுகிறது. 'போய்ப் படு...விடியட்டும்! உன்னைப் பார்க்கிறன்' என்றன். போய்ப் படுத்தவன்... இன்னும் எழும்பலலே..."

"நான் ஏதோ அடிச்சன் என்றதுக்காக ஓடிவருவதா? காலங்கெட்ட காலத்திலே... அடிச்ச பிறகு எனக்குத் துக்கமாகத்தான் இருந்தது! எனக்கும் அந்த நேரத்திலை மனம் சரியில்லை...! உன்ரை மோன், லீலா எங்கே?' என்றவர், 'லீலா!' என்று கூப்பிட்டார்.

காற்சங்கிலிச் சத்தத்திலிருந்து லீலா மாமாவிடம் ஓடுகிருள் என்பதைத் தில்லை உணர்ந்து கொண்டான்.

"என்ன, மாமா?"

'உன் கொண்ணனை எழுப்பி வா' அம்மா!"

'சரி, மாமா!'

இனியும் படுத்திருப்பது சரியில்லை என்று தில்லை எழுந்தான்; லீலாவும் ஓடி வந்தாள்.

'மாமா, வரட்டாம்...'

'ஏன், நீ...?' என்று அவன் கேட்டான்.

'எனக்குத் தெரியாது!'

குற்றவாளியைப் போலத் தலையைக் குனிந்தபடி மாமா முன் சென்ருன். தகப்பன் அவனை முழித்துப் பார்த்தார்.

'என்னடா, நீ இப்படிச் செய்யலாமா?' என்று மாமா கேட்டார். அவன் பதில் பேசவில்லை. 'இவரோடை எனக்கென்ன கதை' என்று மனம் நினைத்தது.

'இந்தா!' என்று மாமா எதையோ ஒரு பையை எடுதது நீட்டினுர். 'பெரியவர்கள் தருவதை வாங்கிக் கொள்ள வேண்டும்' என்று அவன் அம்மா கூறியிருக்கிருள். தில்லை கையை நீட்டியபடியே, 'இதென்ன, மாமா?' என்ருன்.

'பட்டு வேட்டியடா? நீ ஆசைப்பட்டது எனக்கெதுக்கு! இது உன்றை மச்சான் முத்தையாவின்ரை!... நீ கட்டிக்கொள்! நான் அவனுக்குப் பிறகு வாங்கிக் கொடுக்கிறன்!'

தில்லையின் கண்கள் கலங்கின. எவ்வளவு அன்புடையவர், மாமா? அவர் அடித்தால் என்ன? அன்புள்ள இடத்தில் கோபமும் இருக்கத்தானே செய்யும்? அவனுல் பேச முடியவில்லை.

'மாமா!' என விக்கினுன்: 'என்னை மன்னித்துக்கொள்ளுங்கள், மாமா!'

மாமா அவனை அணைத்துக் கொண்டார்.

'இனிமேல் இப்படிச் செய்யாதே?' என்று புத்திமதி கூறினுர்.

'மச்சான், உனக்கொரு புதினந்தெரியுமே?' என்ருர். 'மாமா இருந்தாற்போல்.

'என்ன புதினம்?'

கோப்பயன் மணற் சுடலைக்குப் பக்கத்திலுள்ள அந்த ஆறுகால் மடத்திலை இராத்திரி கொஞ்சக் கள்ளர், இரண்டு ஊர்க் காவலர்களை நல்லா அடிச்சுக் கட்டிப் போட்டுவிட்டுப் போட்டாங்களாம்!'

தில்லைக்குப் 'பகீர்' என்றது இராத்திரி நிகழ்ச்சிகள் அவன் கண்களின் முன் தோன்றின. அந்நேரத்தை எண்ணிய போது அவனுக்கு இப்பவும் உடல் நடுங்கியது. 'அந்த முரடர்களைத் துரத்திக் கொண்டு போன ஊர்க் காவலர்தாம் அந்நிலைக்கு ஆளானவர்களோ?'

இரவு நிகழ்ச்சிகளை அவன் ஒருவருக்கும் கூறவில்லை. இவர்களுக்குக் கூறுவதால் பயனில்லை என அவன் நினைத்தான்' சென்றவிரவுச் சம்பவங்களையும், அவ்விரு முரடர்கள் பேசியதையும் மாணிக்கச் சித்தப்பாவிடம் கூறி ஆவன செய்ய அவன் விரும்பினுன். மாணிக்கச் சித்தப்பாவை அவனுக்கு மிகவும் பிடிக்கும். அவர் ஒரு ஊர்க்காவலர். அவன் வீட்டிற்கு அடிக்கடி வருவார். 'பூட்ஸ் போட்டுக் கொண்டு தானும் நடக்க வேண்டும் என்று அவனுக்கு ஆசை.

'சித்தப்பா, சப்பாத்தைத் தாருங்களேன்' என்பான்.

'நீ பெரியவனானதும் போடலாம்,' என்பார். மாமா பேசுகிருர்:

'சட்டப்பட்ட அந்த இருவரிலே நம்ம மாணிக்கமும் ஒருவனுப்!' என்று மாமா கூறியதைக் கேட்ட தில்லை திக் பிரமை அடைந்தவனுன். அவன் கையிலிருந்த மாமா கொடுத்த பை 'பொத்' தென நிலத்தில் விழுந்தது.







## உங்கள் உளச் செவிக்கு

—செட்டிநகர் மதியரசு—

### கேள்விகள்

1. டைனமெட் கண்டு பிடித்தவர் யார்?
2. தையல் ஏந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
3. வ, உ. சிதம்பரநாதன் ஓட்டிய கப்பலின் பெயரென்ன?
4. கோழி முட்டை இட்டதும் அதன வெப்பம் என்ன?
5. எலியின் இருதயம் ஒரு நிமிடத்துக்கு எத்தனை முறை துடிக்கும்?
6. எரிபொருள் மின்கலம் கண்டு பிடித்தவர் யார்?
7. எலக்றிக் பல்பைக் கண்டவர் யார்?
8. எளிதில் ஆவியாகும் தன்மையுள்ள பொருள் எது?
9. பொத்தான்கள் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
10. அமெரிக்காவை முதன் முதல் கண்டுபிடித்தவர் யார்?

1. அல்பிறட் நோபல்.
2. எலியாஸ்கோ.
3. "லாவோகாலியா"
4. 107°.
5. 700 தடவைகள்.
6. வில்லியம் குரோல்.
7. எடீசன்.
8. "ஓடிகொலோன்".
9. "எகிப்தியரால்".
10. கொலம்பஸ்.

---

## புதிய மருமக்கள்

78 பீ. கணேசலிங்கம், அல்வாய் வடக்கு, 79 மா. இரவிச்சந்திரன், தாவடி, கொக்குவில, 80 ஜெகதாம்பாள் கனகசபாபதி, பெருந்தெரு, திருமலை, 81 கமலா குமாரசாமி, ஏழாலை மேற்கு, 82 நகுலா குமாரசாமி, ஏழாலை மேற்கு, 83 வே புவனேஸ்வரன், காத்தான்குடி. 84 கு. கிருபைராசா, கலுவாஞ்சிக்குடி, 85 சீ. பொ. சாந்தகுமார், கந்தர் மடம், யாழ்ப்பாணம், 86 மு பராசக்தி, கோப்பாய், 87 வே. வை. தெய்வநாயகம், அக்கரைப்பற்று, 88 செ. செ. செந்தில் ஈஸ்வரன், கொழும்பு—13, 89 ஜெயராணி சபாபதிப்பிள்ளை மல்லாகம், 90 அப்புஸாமி தருமதாஸ் வாழைச் சேனை.

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(43)

—அன்ரனி பெர்ஞண்டோ, கிரிலப்பனை—

## பையன்கள் செய்த ராக்கட்

பெரிய பெரிய அறிவர்களால் மட்டுந்தான் 'ராக்கட்' செய்ய முடியுமா? எங்களுக்குந் தான் செய்ய முடியும் என்று பிரித்தானியப் பள்ளி மாணவர்கள் சிலர் நிருபித்துக் காட்டிவிட்டனர். பெரிய மாணவர்கள் அல்ல, எட்டாம் வகுப்பைப் படித்துவிட்டு நாலாம் பாரத்தில் படித்துக் கொண்டிருக்கும் சின்னப் பையன்கள். விளையாடுவதற்குப் பொம்மை 'ராக்கட்' செய்திருப்பார்கள் என்று நினைத்தால் அது பெருந்தவறு. அவர்கள் செய்தது ஓர் அசல் 'ராக்கட்' சுமார் 9000 அடி உயரத்திற்குப் போகக் கூடியது.

பத்துப் பையன்கள் சேர்ந்து செய்த இந்த 'ராக்கட்' இரண்டரை அடி நீளமுள்ளது. ஆறு மாதங்கள் அயராது உழைத்து அவர்கள் இதை உருவாக்கினர். இதைச் செய்வதற்கு வேண்டிய உருக்கு இரும்பும் இன்னும் பல பொருட்களும் அக்கம்பக்கத்திலுள்ள வர்த்தக நிறுவனங்களிலிருந்து மாணவர்களுக்கு நன்கொடையாகக் கிடைத்தன. மாணவர்கள் 'ராக்கட்' அமைத்து முடித்த செய்தி கேட்டு பலர் அவர்களின் அற்புத சாதனையைப் பாராட்டியதோடு மேலும் இப்படியான வேலைகளில் ஈடுபடும்படி நன்கொடையாகப் பணமும் கொடுத்துள்ளனர்.

மாணவர்களின் 'ராக்கட்' விரைவில் பரீட்சித்துப் பார்க்கப்பட இருக்கிறது. அதன் பின்னர் காற்று அமுக்கம், வெப்பம் முதலியவற்றைக் கணிக்கும் கருவிகளையும், வேகக் கட்டுப்பாட்டுக் கருவியும் கொண்ட மற்ருெரு 'ராக்கட்'டைச் செய்து வானவெளிக்கு அனுப்புவதற்கு மாணவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்தக் கருவிகளைக் கொண்ட பெட்டலத்தை 'ராக்கட்'டிலிருந்து வெளியே தள்ளிவிடுவதற்கு வானெலியால் இயங்கும் ஒரு பொறியும் மாணவர்களின் இரண்டாவது ராக்கட்டில் பொருத்தப்படவிருக்கிறது.

இந்த மாணவர்களின் சாதனையைப் பார்க்கும் போது நாமும் ஏன் முயற்சிக்கக் கூடாது என்றே தோன்றுகிறது. மாணவர்கள் பலர் வானெலிப் பெட்டிகளைத் தாமாகவே செய்யத் தெரிந்து கொண்டிருக்கிறனர். அது போலவே முயன்ருல் 'ராக்கட்'டைக் கூடத் தாமாகவே செய்துகொள்ள முடியும். இனி வருங்காலத்தில் சந்திரனுக்குப் போய்வர வேண்டிய 'ராக்கட்'டுகளையும் நாமே செய்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

## நானிலத்தில் புகழினை ஈட்டிடு

—கே. என். ராஜா—

நல்லவனாக வாழப் பயின்றிடு
நானிலம் போற்ற வாழ்ந்திடு
நல்ல பணிகளை ஆற்றிடு
நாட்டில் நல்லவனாகநீ
வாழ்ந்திடு

நல்லோர் தம்மைக் கண்டுவிடில்
நாளும் அவரை வணங்கிடு
நல்ல உரைகளைக் கேட்டிடு
நன்றி யுள்ளவனாகநீ வாழ்ந்திடு

நல்லநம் நூல்கள் தனை
நாளும் பொழுதும் பயின்றிடு
நல்ல நெறிதனில் சென்றிடு
நானிலத்தில் புகழினை ஈட்டிடு

# நீ அடிமை

—சாரலூகையூர் —

யாருக்கு அடிமை—உலகில்
யாருக்கு நீ அடிமை

பணமுள்ள சீமானின் பகட்டுக்கா? - இல்லை
பக்தர்கள் செய்யும் பூசைக்கா?
குணங்கெட்ட கொடிய வீணர்க்கா?—இல்லை
கொல்லும் வேங்கை மனிதர்க்கா?

மந்திர மாய வித்தைக்கா?—இல்லை
மரத்தடி வாழும் சாமிக்கா?
யந்திர உழைப்பின் சக்திக்கா?—இல்லை
யமனின் பாசக் கயிறுக்கா?


வேல்விழி மங்கையர் பார்வைக்கா? —இல்லை
விலைபேசும் வீணர்கள் பணத்திற்கா?
தோள்வலி கொண்ட வீரர்க்கா?—இல்லை
தீண்டாமை பேசும் தீயோர்க்கா?

நீதியில் லாக்கொடுங் கோலர்க்கா? இல்லை
நிந்தனை செய்யும் மனிதர்க்கா?
ஆதி இறைவனின் நீதிக்கா? - இல்லை
ஆத்திரங் கொண்டோர் சொல்லுக்கா?

யாருக்கு அடிமை— உலகில்
யாருக்கு நீ அடிமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு விரைவில்
எதிர்பாருங்கள்!
எல்பின்ஸ்டன்
(மருதானை)
ரொக்சி
(வெள்ளவத்தை)
மற்றும் பல திரைகளில்!
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
ராதா-அசோகன்-ராஜம்மா
நடித்த
தேவர் பிலிம்ஸ்
குடும்பத் தலைவன்




கெயிட்டி
(கொட்டாஞ்சேனை)
வேது வாரம்!
சிவாஜி,
சரோஜாதேவி,
தேவிகா,
நடித்த
குலமகள் ராதை

செல்லமகால்
(கொட்டாஞ்சேனை)
ஜெமினி கணேசன்,
பத்மினி, ராகினி,
அசோகன், பாலாஜி
சுகுமாரி, மனோகர்
நடித்த
வீராங்கனை



பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் பல நாட்களாக எதிர்பார்த்திருந்த புதுமைச் சித்திரம்!
வியாழன் 27ம் திகதி முதல்!
செண்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை) லிபேர்டி (அட்டன்) லிபேர்டி (பதுளை)
ஆகிய திரைகளில்!

இரவும் பகலும்






தயாரிப்பு:
ஜோசப் தோமஸ்
டைரக்ஷன்:
ஜோசப் தளியத்



தமது முதற் படத்திலேயே அருமையாக நடித்துள்ள
ஜெய்சங்கர்—வசந்தா
மற்றும்
அசோகன்—பண்டரிபாய் — நாகேஷ் — ராமதாஸ்
பின்னணி!
சௌந்தரராஜன்—சுசிலா—சீர்காழி கோவிந்தராஜன்
சிலோன் எண்டெர்டெயின்மெண்ட்ஸ் தாபனத்தார் அளிக்கும்
[illegible] சிட்டாடலின் மகத்தான தயாரிப்பு!



2து-வாரமாக காண்பிக்கப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (அட்டன்)
தீவொளி (நுவரெலியா) லட்சுமி (இரத்தினபுரி) மொர்டேன் (பதுளை)
ஆகிய திரைகளில்!



சிவாஜி கணேசன்—எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி—சௌகார் ஜானகி —நாகேஷ்
எம். ஆர். ராதா—ரங்கராவ்—நாகையா
ராஜன்—புஷ்பலதா
மற்றும் பலர் நடித்த



பச்சை விளக்கு
டைரக்ஷன்: ஏ. பீம்சிங்


இப் பத்திரிகை இலேசன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965ம் வருடம் மே மாதம் 23ம் திகதி அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org